# எல்லோருக்குமான

# தேவனுடைய திட்டம்



# எல்லோருக்குமான

# தேவனுடைய திட்டம்

*வெளியீட்டாளர் :*

*வேத மாணவர்கள்*
*ஈரோடு*
*தமிழ் நாடு*
*இந்தியா*

www.bibletoday.com
*வேத மாணவர்கள் 2016*
ISBN: 978-1-4675-8882-9

*இந்தியாவில் அச்சடிக்கப்பட்டது*

# முன்னுரை

இந்த புத்தகம் 8 வயது பிள்ளைகள் மற்றும் அதற்கு மேலானவர்களுக்காக எழுதப்பட்டது. வேதாகமத்தின் கதையை சொல்லும் இப்புத்தகம், அனைத்து சிருஷ்டிப்புகள் பற்றிய காரியங்களிலிருந்து தொடங்குகிறது. வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள் மற்றும் அனைத்து மக்களுக்கான தேவனுடைய திட்டத்தை மிக எளிமையான வார்த்தைகள் மற்றும் படங்களைக் கொண்டு இப்புத்தகம் விளக்க முயற்சிக்கிறது. இப்புத்தகம் தனிப்பாடங்களின் தொகுப்பாக உருவாக்கப்பட்டு, வேதாகமத்தில் உள்ள அடிப்படைக் கதைகள் மற்றும் உபதேசங்களை ஞாயிற்றுகிழமை வேதாகம வகுப்புகளில் பாடமாக எடுக்க வழிகாட்டியாக உள்ளது.

வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்ற நிலைப்பாட்டை இப்புத்தகம் தெளிவுப்படுத்துகிறது. அறிவியல், வரலாறு மற்றும் தார்மீக முறையில் வேதாகமம் மிக சரியாக உள்ளதாகவும் இப்புத்தகம் நினைவுப்படுத்துகின்றது. வேதாகமத்தில் உள்ள பெரிய சத்தியங்கள் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களின் வாழ்க்கைக்கும் வழிக்காட்டியாக உள்ளது. 2 தீமோத்தேயு 3 :16, 17

யாரெல்லாம் வாழ்ந்தார்களோ, அவர்கள் அனைவருக்கும் இரட்சிப்பு உள்ளது என்ற கருத்தை வேதாகமம் கொண்டுள்ளது. உலகத்தையும் மற்றும் நம் வாழ்க்கையையும் இன்று ஆண்டுக்கொண்டிருக்கும் பாவம் மற்றும் மரணத்தின் பெரிய சாபத்திலிருந்து விடுவிக்கப்படுவோம் என்ற வாக்குத்தத்தை வேதாகமம் நமக்கு தெரிவிக்கிறது. யோவான் 3 :16

சிருஷ்டித்தவருக்கு முன்பாக அனைத்து மக்களும் விலையேறப்பட்டவர்களாக இருப்பதை வேதாகமம் காட்டுகிறது. அவர்களுக்கு தேவையான முழுமையான சமாதானம் மற்றும் சந்தோஷத்தை நினைத்து பார்க்கும் அளவிற்கு செய்துள்ளது.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பரிபூரண நிலைமையில் இருந்து விழுந்து போனதை வேதாகமம் காட்டுகிறது. அதன் பின்னர் இயேசு கிறிஸ்து மூலமாக பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஏதேன் தோட்டம் மீண்டும் கிடைக்கப்பெற்று முழு பூமியையும் ஆக்கிரமித்து கொள்ளுவார்கள்.

இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகம், உரிய காலத்தில் முடிவடையும் என்ற நம்பிக்கையையும் உந்துதலையும் இவை உருவாக்குகிறது. இதன் பின்னர் தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படும்.

இந்த முயற்சியை கர்த்தர் தாமே ஆசிர்வதிக்குமாறு நாங்கள் ஜெபிக்கிறோம்.

வேத மாணவர்கள் 2016

# பொருளடக்கம்

## பழைய ஏற்பாடு


தேவன் தனிமையாக இருந்த போது............................ 1
தேவனுக்கென்று குமாரன் இருந்தார்............................2
தேவ தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டனர்............................3
இதற்கு பின் அண்டம் உருவானது............................... 4
நமது சூரியக்குடும்பம் சிருஷ்டிக்கப்பட்டது......................5
பூமி சிருஷ்டிக்கப்பட்டது........................................ 6
பூமி இருளாக இருந்தது........................................ 7
வெளிச்சம் உண்டாகக்கடவது..................................8
தண்ணீர் மற்றும் காற்று! ...................................... 9
ஆகாய விரிவுக்கு மேல் ஜலம் இருந்தது....................... 10
தண்ணீரும் வெட்டாந்தரையும்................................. 11
புல் மற்றும் விருட்சங்கள் ...................................... 12
சூரியன் மற்றும் சந்திரன் ...................................... 13
முதல் மீன்..........................................................14
முதல் மிருக ஜீவன்கள்........................................... 15
முதல் மனிதர்கள்.................................................. 16
ஆதாமும் மிருக ஜீவன்களும்.................................... 17
ஆதாம் என்ன சாப்பிட்டார்?..................................... 18
ஆதாம் தனிமையாக இருந்தார்................................... 19
ஏவாளை தேவன் படைத்தார்.....................................20
ஆதாமும் ஏவாளும்............................................... 21
தேவன் ஓய்ந்திருந்தார்.......................................... 22
ஏவாளும் சர்ப்பமும்............................................. 23
ஏவாள் கனியை புசித்தாள்....................................... 24
ஆதாம் சுவைக்க ஏவாள் கொடுத்தாள் ........................ 25
ஆதாமும் ஏவாளும் ஒளிந்துக் கொள்ளுதல்.................... 26
தேவன் மிகவும் கோபம் கொண்டார்............................ 27
யார் அந்த சர்ப்பம்?.............................................. 28
சர்ப்பம் லூசிபராக இருந்தது.................................... 29

லூசிபரின் கலகம்.................................30
பரலோகத்தில் இருந்து சாத்தான் விழுதல்........................31
சர்ப்பத்தின் மூலமாக சாத்தான் பேசினான்......................32
தேவன் ஏன் சாத்தானைத் தடுத்து நிறுத்தவில்லை?...............33
ஆதாமும் ஏவாளும் படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டும்
என்று தேவன் அறிந்திருந்தார்...............................34
ஏதேன் தோட்டம் மூடப்பட்டது.................................35
முதல் குழந்தை பிறந்தது!...................................36
முதல் இளைய சகோதரன் ......................................37
முதல் பலி ..................................................38
முதல் மரணம்................................................39
காயீன் ஓடி ஒளிதல்..........................................40
காயீன் தண்டிக்கப்படுதல்.....................................41
தூதர்கள் பூமிக்கு வந்தனர்....................................42
இந்த இராட்சதர்கள் போக வேண்டியதாக இருந்தது............43
தேவன் ஜலப்பிரளயத்தை ஏற்படுத்தினார்.......................44
புத்தம் புதிய உலகம்...........................................46
முதல் உலகம் முடிவடைந்தது...................................47
பூமி முழுவதும் ஜனங்கள் பரவினார்கள்...........................51
ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் .....................52
ஆபிரகாம் சோதனையை வெற்றி கொண்டார்...................53
ஈசாக்கு யாக்கோபு மற்றும் யோசேப்பு ..............................57
மோசே காக்கப்பட்டார்...............................................58
மோசே வளர்ந்தார் ....................................................59
மோசே மீண்டும் எகிப்திற்கு செல்லுதல்.............................61
மோசே அதிசயங்கள் செய்தார்......................................62
மோசே மூன்றாவது அடையாளத்தை செய்தல் .........................63
மோசே நான்காவது அடையாளத்தை செய்தல்..........................64
ஐந்தாவது அடையாளம்...............................................65
வித்தியாசமான சில நிகழ்வுகள்......................................66
பத்தாவது வாதை.......................................................67
தேவனுடைய மக்கள் விடுதலை செய்யப்பட்டனர்.....................68
செங்கடல் .............................................................69

தேவனுடைய மக்கள் விடுவிக்கப்பட்டனர்!....................... 70
பத்து கட்டளைகள்........................................... 71
பொன் கன்றுக்குட்டி........................................72
தேவனின் மன்னிப்பு........................................74
எரிகோவின் மதில்கள்...................................... 75
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வாழ்தல்.............. 76
கிதியோன்................................................... 77
சிம்சோன்................................................... 78
சிம்சோன் பிடிக்கப்பட்டார்................................ 79
தாவீது...................................................... 80
தேவாலயத்தைக் கட்டுதல்.................................... 82
சாலமோன் இராஜா.......................................... 83
எலியாவும் எலிசாவும்...................................... 85
யோனா...................................................... 86
சாத்ராக், மேஷாக் & ஆபேத்நேகோ.......................... 87
பயமுறுத்தும் அக்கினிசூளை................................ 88
தானியேல்.................................................. 89
சிங்கக் கெபி............................................... 90
எருசலேமிற்கு திரும்புதல்................................. 91
பழைய ஏற்பாடு............................................. 92
முதல் இரண்டு உலகங்களின் அட்டவணை..................... 95

## புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டின் துவக்கம்................................ 99
மரியாளும் யோசேப்பும் பெத்லேகமிற்கு செல்லுதல்............ 100
இயேசு பிறந்தார்!........................................... 101
சாஸ்திரிகள் வருதல்........................................ 102
சிமியோனும் அன்னாளும்.................................... 103
யோசேப்பு, மரியாள் & இயேசு தப்பி செல்லுதல்.............. 104
இயேசுவிற்கு பன்னிரெண்டு வயது ஆனது...................... 105
இயேசு ஞானஸ்நானம் பெறுதல்................................ 106

இயேசு  சோதிக்கப்பட்டார்....................................... 107
இயேசு திரும்பவும் சோதிக்கப்பட்டார்.............................. 108
இயேசு திருமணத்திற்கு செல்லுதல்................................ 109
இயேசு யார்?........................................................ 110
இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும்....................... 111
கர்த்தரின் ஜெபம்................................................... 112
இயேசுவும் திமிர்வாதக்காரனும்.................................... 113
இயேசுவும் குருடனும் .............................................. 114
இயேசு அவர்களுக்கு உணவளித்தார்............................... 115
இயேசுவின் வஸ்திரம் மூலம் குணமடைதல்....................... 116
இயேசுவும் சகேயுவும்............................................... 117
இயேசு தண்ணீர் மீது நடந்து வருதல்.............................. 118
இயேசுவும் பிள்ளைகளும்.......................................... 119
இயேசு அப்போஸ்தலர்களை எச்சரித்தல் ......................... 120
இயேசுவின் கால்கள் கழுவப்படுதல்............................... 121
கைம்பெண்ணின் மகனை உயிர்த்தெழுப்புதல்.....................122
லாசரை உயிர்த்தெழுப்புதல்........................................ 123
இயேசு எருசலேமிற்கு செல்லுதல் ................................124
அப்போஸ்தலர்களின் கால்களை இயேசு கழுவுதல்..............125
மிக முக்கியமான விருந்து.........................................126
இயேசுவின் கடைசி ஜெபம்.......................................... 127
இயேசு கைது செய்யப்படுதல்...................................... 128
இயேசு நியாயம் தீர்க்கப்படுதல்...................................129
இயேசு சிலுவையை சுமந்து செல்லுதல்.......................... 130
இயேசு சிலுவையில் அறையப்பட்டார்............................131
இயேசு புதைக்கப்படுதல்............................................132
இயேசுவின் உயிர்த்தெழுதல்....................................... 133
காலியாக இருந்த  கல்லறை.........................................134
எம்மாவுக்கு போகிற சாலை ........................................135
இயேசு தோன்றுதல்................................................. 136
இயேசு பரலோகத்திற்கு ஏறி செல்லுதல்......................... 137
அப்போஸ்தலர்கள் வல்லமையை பெறுதல் ....................... 138

சுவிசேஷம் பிரசிங்கப்படுவதின் துவக்கம் ........................ 139
அப்போஸ்தலர்கள் குணமாக்குதல்............................. 140
பேதுரு பரிசுத்த ஆவியை கொடுத்தல் ......................... 141
சவுல் குருடாகுதல்....................................... 142
பவுல் தப்பிச் செல்லுதல்.................................... 143
பேதுருவின் தரிசனம்..................................... 144
பேதுருவும் தூதனும் ....................................... 145
பவுலும் பர்னபாவும் ....................................... 146
பவுல் பணத்தை சேகரித்தல்................................ 147
அசுத்த ஆவிகளை பவுல் வெளியேற்றுதல்.................... 148
பவுலும், சீலாவும் சிறையில் அடைக்கப்படுதல் ................. 149
பவுல் எருசலேமிற்கு திரும்புதல் ................................150
பவுல் ரோமாபுரிக்குச் செல்லுதல்............................. 151
பவுல் ரோமாபுரியில் வாழ்தல் ............................. 152
கடைசி அப்போஸ்தலராகிய யோவான்........................ 153
புதிய ஏற்பாடு முடிவடைந்தது.................................154
எல்லோருக்குமான தேவனுடைய திட்டம்.......................157
யுகங்களைப் பற்றிய முழுமையான ஏற்பாடு.....................161



# எல்லோருக்குமான

# தேவனுடைய திட்டம்

## பழைய ஏற்பாடு



# தேவன் தனிமையாக இருந்த போது

ஆதியிலே, இந்த முழு அண்டத்தில் எதுவும், எங்கும் சிருஷ்டிக்கப்படும் முன்பு தேவன் இருந்தார். தேவன் மட்டும் தனியாக இருந்தார். தேவனுக்கு தொடக்கம் என்ற காலப்பகுதி எப்போதும் இருந்ததில்லை. அவர் எப்போதும் இங்கு தான் இருக்கிறார்.

இது எப்படியாகும் என்பது நமக்கு உண்மையில் புலப்படவில்லை. ஆனால் அவை உண்மை என்பது நமக்கு தெரியும்.



தேவன் எப்படி இருப்பார் என்று நமக்குத் தெரியாது. சேரக் கூடாத ஒளியில் அவர் வாசம் செய்கிறார் என்பது மட்டும் நமக்குத் தெரியும். அந்த ஒளி மிகவும் பிரகாசமாய் இருப்பதால், அதை யாரும் பார்க்கவோ அல்லது நெருங்கவோ முடியாது. *1 தீமோத்தேயு 6 :16 , நீதிமொழிகள் 8*

# தேவனுக்கென்று குமாரன் இருந்தார்

தாம் தனியாக இருப்பதை தேவன் விரும்பவில்லை. தம்முடன் இருக்கும்படியாக தம்மைப்போல் ஒருவர் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். அவருக்கென்று ஒரு மகன் தேவைப்பட்டது. இதனால் அவர் தனக்கென ஒரு மகனை உருவாக்கினார். தம்முடைய மகனுக்கு "வார்த்தை" என்ற பொருள் கொள்ளும்படியான "லோகாஸ்" என்ற பெயரை இட்டார். இந்த பெயர் வித்தியாசமாக தோன்றலாம். ஆனால் தேவனுடைய குமாரன் ஒருவரே தேவனைப் பற்றி விளக்க முடியும். தேவனைப் போலவே அவர் உள்ளார் என்பதையே இப்பெயர் குறிக்கிறது. இவரே தேவனால் பிறப்பிக்கப்பட்ட ஒரே குமாரன் ஆவார். இவரே எல்லா படைப்புகளுக்கும் முதற் பேரானவர்.



தேவனுடைய குமாரனின் அம்மா யார் என்பது உங்களுக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் அவருக்கு அம்மா தேவையில்லை. தாம் செய்ய வேண்டிய எல்லாவற்றிற்கும் யாருடைய உதவியும் தேவனுக்குத் தேவையில்லை. கொலோசேயர் 1:15-17, யோவான் 1:1-4, 18, வெளி 3:14

# தேவ தூதர்கள் சிருஷ்டிக்கப்பட்டனர்

***தேவன் தம்முடைய குமாரனைப் பெற்ற பிறகு, தாம் செய்ய வேண்டியதை எல்லாம் தம் குமாரன் மூலமாக செய்தார்.***

***தேவனும் அவருடைய குமாரனும் மற்ற ஜீவிகளை உண்டாக்கினார்கள். அவர்கள் தேவ தூதர்கள் என்று அழைக்கப்படுவதுண்டு.***

***தேவதூதர்கள் என்ற ஜீவிகள் கண்ணுக்குப் புலப்படாதவர்கள். ஆவிக்குரிய ஜீவிகள் என்றும் இவர்களை நாம் அழைக்கின்றோம். அவர்கள் ஆவிக்குரிய சரீரத்தில் இருக்கிறார்கள். அவர்களுடைய உடல்கள் எப்படி இருக்கும் என்று நமக்கு தெரியாது. அவர்கள் நமது பக்கத்தில் இருந்தால் கூட, நாம் அவர்களைப் பார்க்க முடியாது. ஆனால் அவர்கள் நம்மையும், தேவனையும், லோகாஸ் மற்றும் மற்ற தேவ தூதர்களையும் காணலாம். நாம் மரிப்பது போல தேவ தூதர்கள் மரிக்க மாட்டார்கள். 1 கொரிந்தியர் 15 : 40, யோவான் 1 : 1-3 ; 3 : 6-8; கொலோசேயர் 1 : 16***



# இதற்கு பின் அண்டம் உருவானது

ஆவிக்குரிய ஜீவிகளாகிய தேவதூதர்களை படைத்த பின்னர், தேவனும் லோகாசும் வானத்தையும் மற்றும் பூமியையும் படைத்தனர்.

அண்டம் என்று நாம் குறிப்பிடுவது மொத்தமாக உள்ள நட்சத்திரங்கள், கிரகங்கள் மற்றும் ஆகாயத்தைக் குறிப்பதாகும்.


அண்டவெளி இருந்ததில்லை என்று நினைப்பது வினோதமாக தோன்றலாம். ஆனால் நட்சத்திரங்கள், கிரகங்கள் மற்றும் அண்டைவெளியில் எந்த ஒரு பகுதியைப் படைப்பதற்கு முன்னரே ஒரு காலம் இருந்தது. ஆதியாகமம் 1 :1



# நமது சூரியக்குடும்பம் சிருஷ்டிக்கப்பட்டது

தேவனும் அவருடைய குமாரனும் அண்டவெளியை உண்டாக்கும் போதே நாம் வாழக்கூடிய அண்டவெளியில் பாகமாக விளங்கக் கூடிய பூமியையும் உண்டாக்கினார்கள்.

நம்முடைய சூரியனே நட்சத்திரங்களிலே மிகவும் சிறந்தது ஆகும். அது சூரியக்குடும்பத்தில் நடுவாக அமைந்துள்ளது. ஆதியாகமம் 1 :1




# பூமி சிருஷ்டிக்கப்பட்டது

இதன் பின்னர் உருவாக்கப்படவேண்டியது பூமி ஆகும். தேவனும் அவருடைய குமாரனும் பூமியை உருவாக்கும் போது, தற்போது இருந்தது போல் இல்லாமல் வெறுமையாக இருந்தது. அதற்கென்று வடிவமும் இல்லை. பூமியை உருவாக்கத் தேவைப்படும் அனைத்து பொருட்களும் ஏற்கனேவே தயாராக இருந்தது. தேவன் அவை எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து, அவை மேல் நாம் வாழும்படி செய்தார்.


ஒரு கேக்கை செய்வதற்கு தேவையான பொருட்கள் எல்லாம் சமையலறையில் இருப்பது போலவும், ஆனால் நீங்கள் அவற்றை எல்லாம் ஒன்றாக கலக்காமல், இன்னும் ஆரம்பிக்காமல் வைத்திருப்பது போலவும் ஆகும்.

ஆதியாகமம் புஸ்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி, பூமியானது எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதை வேதாகமத்தில் தேவன் நமக்காக கூறியுள்ளார் என்பதை மட்டும் நாம் அறிந்திருக்கிறோம். ஆதியாகமம் 1:2



# பூமி இருளாக இருந்தது

தேவன் தன்னுடைய வரலாற்று புத்தகத்தில் வேதாகமத்தில், பூமியானது வெறுமையும் இருளுமாக இருந்ததை நமக்கு வெளிப்படுத்தினார். எந்த ஒரு உயிரும் இல்லை, வெளிச்சமும் இல்லை. பூமியானது மற்ற கிரகங்களைப் போல முழுமை பெறாமல் இருந்தது. முதன் முதலாக பூமியே சரிசெய்யப்பட வேண்டிய கிரகம் என்று தேவன் முடிவெடுத்தார். ஆதியாகமம் 1 ;2



# வெளிச்சம் உண்டாகக்கடவது!

முதன் முதலாக வெளிச்சம் மற்றும் இருளை உண்டாக்க வேண்டும் என்று தேவன் முடிவெடுத்தார். இருளை உருவாக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. ஆனால் பூமியின் மேல் வெளிச்சத்தை உருவாக்க வேண்டியது அவசியம் ஆயிற்று.

அதை முதல் நாளிலே செய்தார். நமது நாட்கள் போல தேவனுடைய நாட்கள் இல்லை. மிகவும் நீண்ட காலத்தைக் கொண்டது. பூமியின் மீது வெளிச்சத்தையும், இருளையும் உண்டாக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலப்பகுதியே ஒரு நாளாகும்.

மனிதனின் சாயல் போல தேவன் இருக்கமாட்டார் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அவரை ஒரு மனிதராக நினைத்து இங்கு வரைந்து கொண்டால் அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் யூகிக்கமுடியும். ஆதியாகமம் 1 ;4,5.



# தண்ணீர் மற்றும் காற்று


இதன் பின்னர் தேவன் தண்ணீர் மற்றும் காற்றை உண்டாக்கினார். இந்த ஒரு காரியமே பூமியை மற்ற கிரகங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. நாம் காற்றை சுவாசிக்க முடியும். ஆகாய ஆடைகளை நாம் அணிய வேண்டிய அவசியமில்லை! இது மிகவும் ஆச்சரியமான காரியம்.

முதன் முதலாக காற்றும் தண்ணீரும் கலந்து பூமியை வெண்ணீர் சேற்றை போல ஆக்கியது. ஆகாய விரிவிலிருந்த தண்ணீர் பூமியின் மேல் விழுந்ததால், சமுத்திரம் உருவாயிற்று. பூமி முழுவதும் பெரிய கலங்கலான சமுத்திரமாக இருந்தது. ஆதியாகமம் 1 :6 -8



# ஆகாய விரிவுக்கு மேல் ஜலம் இருந்தது

பூமியைச் சுற்றி ஆகாய விரிவை தேவன் உண்டாக்கின பிறகு, கொஞ்சம் ஜலங்கள் பூமியில் விழுந்தது. ஆனால் பெரும்பான்மையான ஜலமானது, ஆகாய விரிவின் மேலே தங்கியிருந்ததால், பூமியானது வானத்தில் மிதக்கும் குமிழ் போல இருந்தது. ஆகாய விரிவுக்கு மேல் தேக்கப்பட்ட ஜலமானது, மேகங்கள் போல உருவாகி மழைப் பெய்யத் தயாராக இருந்தது. ஆதியாகமம் 1 : 6 -8



# தண்ணீரும் வெட்டாந்தரையும்

மூன்றாம் நாளில் களிமண் சேற்றினை, வெட்டாந்தரையாகவும் சமுத்திரமாகவும் மாற்ற தேவன் முடிவு செய்தார். இன்று நமக்குத் தெரிந்திருக்கும் வெட்டாந்தரை மற்றும் சமுத்திரத்தின் தொடக்கமாக இவை அமைந்தது. அவர் வெட்டாந்தரையை பூமி என்றும் ஜலத்தை சமுத்திரம் என்றும் கூறினார்.

அந்த வெட்டாந்தரை பாலைவனம் போல எந்த செடிகளும் மரங்களும் இல்லாமல் காலியாக இருந்தது என்று நினைவில் கொள்ள வேண்டும்.

வெறுமையான பூமியின் மேல் நீங்கள் நின்று கொண்டிருந்தால் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். நிலாவில் நிற்பது போல இருந்திருக்கும்! ஆதியாகமம் 1 : 9, 10



# புல் மற்றும் விருட்சங்கள்

ஆனால் இவையெல்லாம் அதிக நாள் நீடிக்கவில்லை. பிற்பாடு புல்லையும் கனி விருட்சங்களையும் தேவன் உண்டாக்கினார். எல்லாவகையான விதைகளையும் அவர் உண்டாக்கியதால், செடிகளும் மரங்களும் ஒவ்வொரு வருடமும் தங்களை தானே உற்பத்தி செய்து கொண்டன. அவர் அனைத்து வகையான பூக்கள், பழுங்கள் மற்றும் காய்கறிகளை உண்டாக்கினார்.

மிருக ஜீவன்களை சிருஷ்டிக்கும் போது அவைகளுக்கு உணவு தேவைப்படும் என்ற எண்ணத்திலேயே, இவை எல்லாவற்றையும் தேவன் முன்னரே உண்டாக்கினார்.

வெறுமையான பாலைவனத்தோடு ஒப்பிடும் போது, பூமியானது எவ்வாறு வேறுபட்டு இருந்திருக்கும் என்பதை சற்று நினைத்துப் பாருங்கள்! ஆதியாகமம்1 :11-13



# சூரியன் மற்றும் சந்திரன்

சூரியன் மற்றும் சந்திரனை ஏற்கனவே தேவன் உண்டாக்கி முடித்திருப்பார் என்று நீங்கள் எண்ணலாம். அண்டத்தை உருவாக்கும் போதே இவைகளை தேவன் உருவாக்கி இருந்தார்.ஆனால் பூமியின் அந்த நாளிலே அவைகளை வெளிப்படச் செய்தார். இதனால் பருவ காலங்கள், மாதங்கள் மற்றும் வருடங்கள் தொடங்கின.

பூமியைச் சுற்றி தண்ணீர் குமிழ்கள் இருந்ததால், இதற்கு முன்னர் போல் சூரியன் மற்றும் சந்திரனை நீங்கள் கண்டிருக்க இயலாது. ஆனால் இன்றோ சூரியன் உதிப்பதை நீங்கள் காணலாம். அதனை அவர் பகல் என்று பெயரிட்டார். இருள் வந்த பிறகு,நம்மால் சந்திரனை பார்க்க முடியும், அதற்கு இரவு என்று பெயரிட்டார்.

ஒவ்வொரு நாளையும் சாயங்காலம் தொடங்கி அடுத்த நாள் விடியற்காலத்தில் முடித்தார். சிருஷ்டிப்பின் நான்காம் நாளின் முடிவாக அது இருந்தது.

ஆதியாகமம் 1:14-19



# முதல் மீன்

இப்போது ஐந்தாம் நாளை நாம் தொடங்குவோம். சமுத்திரத்தில் மீனோ தவளைகளோ (அல்லது) டால்பின் மீன்களோ இல்லை என்று சற்று நினைத்துக் கொள்ளுங்கள். உண்மையில் செடிகள் உண்டாக்கப்படும்வரை, சமுத்திரம் முழுவதும் வெறுமையாய் இருந்தது.

நீங்கள் நினைப்பது போல் தண்ணீரில் வாழக்கூடிய அனைத்தையும், தேவன் உண்டாக்கத் தொடங்கினார்.

இந்த பக்கத்தில் உள்ள படத்தை பாருங்கள். இங்குள்ள வெவ்வேறு கடல் உயிரினங்களின் பெயர்களை நீங்கள் எண்ணிப்பாருங்கள். இவை அனைத்தும் ஐந்தாம் நாளில் உண்டாக்கப்பட்டது. ஆதியாகமம் 1:20-23



# முதல் மிருக ஜீவன்கள்

எந்த மிருக ஜீவன்களை எப்படி உண்டாக்க வேண்டும் என்பதை சற்றே நினைத்து பாருங்கள். முதன் முதலாக எந்த மிருக ஜீவன்களை நீங்கள் உண்டாக்குவீர்கள்?

அனைத்து வகையான சிறிய பூச்சிகள் முதல் பெரிய மிருக ஜீவன்கள் வரை ஆறாம் நாளில் உண்டாக்கப்பட்டது.

இந்த படத்தில் உள்ள அனைத்து மிருக ஜீவன்களையும் பாருங்கள். அவையெல்லாம் நண்பர்களாவே இருக்கின்றன. ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்ளவோ (அல்லது) கொன்று சாப்பிடவோ இல்லை. எல்லா மிருகங்களும் நண்பர்களாக இருந்தது. எல்லா மிருக ஜீவன்களும் ஒன்று சேர்ந்து வாழ்ந்து, புல் மற்றும் பழங்களைத் தின்றன. அவை எல்லாவற்றிற்கும் நிறைய உணவு இருந்தது. ஆதியாகமம் 1 :24 -31



# முதல் மனிதர்கள்

அனைத்து வகையான மிருக ஜீவன்கள், பறவைகள் மற்றும் பூச்சிகளை தேவன் உண்டாக்கினார். மனிதர்கள் யாரும் இல்லை. உலகம் முழுவதும் மிருக ஜீவன்கள் மட்டும் இருந்து, மனிதன் இல்லாமல் இருப்பது எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

முதல் மனிதனை எப்படி படைத்தார் என்று தேவன் நமக்கு கூறுகிறார். அவனுடைய உடலை மண்ணிலிருந்து அவர் உண்டாக்கினார். அவனுடைய நுரையீரலில் சுவாசத்தை அவர் செலுத்தியதால், அவனுடைய இதயம் துடிக்கத் தொடங்கியது. ஒரே சமயத்தில் முதல் ஆண் மற்றும் பெண்ணை தேவன் உருவாக்கவில்லை. முதலாவதாக ஆண் தேவனால் உண்டாக்கப்பட்டான். அவனுக்கு "ஆதாம்" என்று பெயரிட்டார். அவர் ஒரு குழந்தையையோ அல்லது சிறுவனையோ உண்டாக்கவில்லை. வளர்ந்த ஒரு மனிதனையே அவர் உண்டாக்கினார். ஆதியாகமம் 1 : 27, 28



# ஆதாமும் மிருக ஜீவன்களும்

தேவன் ஒரு குழந்தையை உண்டாக்கவில்லை, ஏனெனில் அக்குழந்தையை கவனித்துக் கொள்ள யாரும் இல்லை. வளர்ந்த ஒரு மனிதனையே அவர் உண்டாக்கினார். இதன் மூலமாக அவன் தன்னையும் மிருக ஜீவன்களையும் பூமியையும் கவனித்துக் கொள்ளுவான்.

பூமியிலிருந்து ஒரு இடத்தை தெரிந்தெடுத்து, அழகிய தோட்டத்தை தேவன் உருவாக்கினார். அந்த இடத்தில் ஆதாமை தேவன் வைத்தார். அங்கே தான் ஆதாம் வாழ்ந்தார். தோட்டத்தை கவனித்துக் கொண்டு, அங்குள்ள அனைத்து மிருக ஜீவன்களையும் தன்னுடைய வளர்ப்பு விலங்குகள் போல ஆதாம் பார்த்துக் கொண்டார். அவை எல்லாவற்றிற்கும் ஆதாம் பெயரிட்டார். அவை எல்லாம் ஆதாமோடு நண்பர்களாக இருந்தன. ஆதியாகமம் 2:1-20



# ஆதாம் என்ன சாப்பிட்டார்?

பல கனி தரும் விருட்சங்களை தேவன் அத்தோட்டத்தில் வளர்த்ததால், ஆதாம் சாப்பிடுவதற்கு நிறைய உணவு இருந்தது. போதுமான அளவு உணவை தேட வேண்டும் என்ற கவலை அவருக்கு இல்லாமல் இருந்தது. அவர் எப்போதும் பசியுடன் இருந்ததில்லை. பல வகையான பழங்களில் இருந்து வெளிவரும் பல்வேறு வாசனைகளை முகர்ந்து சந்தோஷப்பட்டார்.


"ஏதேன் தோட்டம்" என்று அத்தோட்டத்திற்கு தேவன் பெயரிட்டார். அவை பரதீசு போல் மிகவும் அழகாக இருந்தது. அங்கு வாழ்ந்து தோட்டத்தை பராமரித்துக் கொள்வதே ஆதாமிற்கு வேலையாகக் கொடுக்கப்பட்டது. ஆதியாகமம் 2:16



# ஆதாம் தனிமையாக இருந்தார்

ஆதாமுக்கு சாப்பிட ஏராளமான உணவு இருந்தது. ஒவ்வொரு நாளும் தேவன் ஆதாமை சந்தித்து வந்தார். அவருக்கு நிறைய வளர்ப்பு மிருக ஜீவன்கள் இருந்தது. எல்லா விலங்குகளுக்கும் துணை இருந்தது. ஆதாமுக்கோ நண்பன் என்று யாரும் இல்லை. உலகிலே அவர் மட்டும் மனிதனாக இருந்தார்!. பேசுவதற்கு குழந்தைகளோ (அல்லது) மனிதர்களோ இல்லாவிட்டால், எப்படி இருக்கும் என்று யோசித்து பாருங்கள்.

ஆதாம் தனிமையாக இருப்பதை தேவன் கண்டார். அதற்காகவே தேவன் காத்திருந்தார். ஆதாமுக்கு என்று தகுந்த துணையை தேவன் உருவாக்கினார். ஆதியாகமம் 2 :20



# ஏவாளை தேவன் படைத்தார்

மண்ணிலிருந்து திரும்பவும் ஏவாளின் உடலை உண்டாக்காமல், ஆதாமிலிருந்து ஏவாளை உண்டாக்க, தேவன் முடிவு செய்தார். அதனால் ஆதாமிற்கு அயர்ந்த நித்திரை வரச்செய்து, விலா எலும்பு ஒன்றினை எடுத்து, அதில் இருந்து ஏவாளை தேவன் உண்டாக்கினார். இது தான் முதன்முதலாக நடந்த அறுவை சிகிச்சை!

ஆதாம் விழித்தெழுந்தவுடன் ஏவாளை கண்டார். அவள் மீது மிகுந்த அன்பு செலுத்தினார்! அவள் பார்க்க மிக அழகாகவும் மற்றும் பரிபூரணமாகவும் இருந்தாள். ஆதியாகமம் 2:21-25



# ஆதாமும் ஏவாளும்

ஆதாம் விழித்தெழுந்தவுடன் தனக்காக தேவன் உருவாக்கின மனுஷியைக் கண்டார். அவளுக்கு "ஏவாள்" என்று பெயரிட்டார். ஆதாம் மிகவும் சந்தோஷமாக இருந்தார். மிகவும் பரிபூரணமாக ஏவாள் இருந்ததால். உண்மையில் அவள் ஆதாமுக்காக படைக்கப்பட்டிருந்தாள் என்பதை ஆதாம் உணர்ந்தார்.

தங்களுக்கு வேண்டிய அனைத்து வகையான விருட்சங்களின் கனியையும் இருவரும் சாப்பிடலாம், ஆனால் ஒரு மரத்தில் இருக்கும் கனியை மட்டும் சாப்பிடக்கூடாது என்று சுட்டிக்காட்டி தேவன் அவர்களுக்குக் கூறினார். அதை சாப்பிடும் பட்சத்தில் சாக நேரிடும் என்றும் அவர்களை தேவன் எச்சரித்தார்.

அவர்கள் இதுவரை இறப்பைக் கண்டதில்லை. ஆனால் இறப்பு என்பது ஒரு தவறான காரியத்தின் விளைவு என்று மட்டும் இருவரும் அறிந்திருந்தார்கள். ஆதியாகமம் 2:17



# தேவன் ஓய்ந்திருந்தார்

ஆறாம் நாளின் இறுதியாக அன்று இருந்தது. தேவனுக்கோ இன்னும் நிறைய வேலைகள் இருந்தன. பூமி இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. ஏதேன் தோட்டத்தை மட்டும் தேவன் முழுவதுமாக சரி செய்தார். ஆனால் ஏழாம் நாளிலோ ஓய்வு எடுக்க தேவன் முடிவு செய்தார். அனைத்து மிருக ஜீவன்களும், பூமியின் மேல் இருந்த மனிதர்கள் அனைவரும் சந்தோஷமாக இருந்தனர். யாரும் சண்டை போட்டுக் கொள்ளவில்லை. நிறைய உணவு இருந்தது. யாருமே மரிக்கப் போவதில்லை. எல்லோரும் பரிபூரணமாகவே உண்டாக்கப்பட்டனர். ஆதியாகமம் 2:1-3



# ஏவாளும் சர்ப்பமும்

சாப்பிடக்கூடாது என்று விலக்கப்பட்ட கனி தரும் மரத்தின் அருகே ஏவாள் ஒரு நாள் தனியே நின்றுக்கொண்டிருந்தாள். அந்த மரத்தின் அருகே ஒரு சர்ப்பம் இருப்பதை அவள் கண்டாள். அந்த கனியை சர்ப்பம் சாப்பிடுவதைக் கண்டாள்.

கனியை சாப்பிட்ட பின் சர்ப்பம் இறந்து விடும் என்று வியந்தாள். ஆனால் சர்ப்பமோ இறக்கவில்லை. ஆச்சரியப்பட்டாள். ஏவாள் தன்னை கவனித்து கொண்டிருந்ததை சர்ப்பம் கண்டது. இதன் பின் அவளிடம் சர்ப்பம் பேசத் தொடங்கியது. சர்ப்பம் தன்னிடம் பேசுவதைக் கண்டு நிச்சயம் ஏவாள் வியந்திருப்பாள். அக்கனி மிகவும் நன்றாக இருப்பதாக அவளை பார்த்து சர்ப்பம் கூறியது. அந்த கனியை சாப்பிட ஏவாளுக்கு கொஞ்சம் கொடுத்தது. அக் கனியைச் சாப்பிடக்கூடாது என்று அவளுக்கு தெரிந்திருந்தாலும், அக்கனி எப்படிப்பட்ட சுவை கொண்டிருக்கும் என்று வியந்தாள். ஆதியாகமம் 3 : 1 - 7



# ஏவாள் கனியைப் புசித்தாள்

அக்கனி பார்வைக்கு நன்றாக இருக்கும்படி சர்ப்பம் காட்டியது. அக்கனி சுவையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சாப்பிட்டால் அறிவு கூர்மையுள்ளவர்களாக மாறுவீர் என்று ஏவாளை பார்த்து சர்ப்பம் கூறியது. இதுவரை தெரியாத காரியங்களை ஏவாள் தெரிந்து கொள்ள முடியும்.

அப்பழத்தை சாப்பிட்டால் அவள் தேவனை போல் மாறி விடுவாள் என்ற ஒரே காரணத்தினால் அப்பழத்தை ஏவாள் சாப்பிடக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டதாகவும் ஏவாளிடம் சர்ப்பம் கூறியது. தேவன் மட்டும் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை அவளும் அறிந்து கொள்ளுவாள். நல்ல மற்றும் கெட்ட காரியங்களை தெரிந்து கொள்ளுவாள். ஆதாமிடமும், தம்மிடமும் தேவன் இரகசியங்களை மறைக்கிறார் என்று அவள் கோபப்பட்டிருக்கலாம். அதனால் அப்பழத்தை எடுத்து சுவைத்தாள். ஆனால் அவளுக்கு எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை. ஆதியாகமம் 3:6



# ஆதாம் சுவைக்க ஏவாள் கொடுத்தாள்

அப்பழுத்தின் சுவையை ஆதாமுக்கு காண்பிக்க வேண்டும் என்று ஏவாள் முடிவு செய்தாள். அவர்கள் எல்லாவற்றையும் தங்களுக்குள் பரிமாறிக் கொண்டனர். அவர்களுக்குள் எந்த ஒளிவு மறைவும் இல்லை. இதனால் தான் புதிதாக கண்டுபிடித்ததை அவரிடம் சொல்ல விரைவாக ஓடினாள்.

ஏவாள் அக்கனியை சாப்பிட்டாள் என்று ஆதாம் கேட்ட போது மிகவும் விசனப்பட்டார். அவள் இறக்கப் போகிறாள் என்று ஆதாம் தெரிந்து வைத்திருந்தார். அவள் இல்லாமல் திரும்பவும் தான் தனிமையாக இருப்பதை அவர் விரும்பவில்லை. எல்லாவற்றையும் விட அவளை மிகவும் நேசித்தார். அவருக்கு அனைத்தும் அவளாகவே இருந்தாள். அதனால் இரண்டு பேரும் ஒன்றாக இருப்போம் என்ற எண்ணத்தில், அக்கனியை சாப்பிட ஆதாம் முடிவு செய்தார். ஆனால் அக்கனியைச் சாப்பிடவுடன் மிகவும் தவறு செய்து விட்டதாக எண்ணினார். முதல் தடவையாக அவர் குற்ற உணர்வுகளுடன் இருந்தார். ஆதியாகமம் 3 : 6



# ஆதாமும் ஏவாளும் ஒளிந்து கொள்ளுதல்

தாங்கள் செய்ததை தேவனிடமிருந்து மறைக்க ஆதாமும் ஏவாளும் விருப்பப்பட்டனர். ஆனால் நாம் செய்யும் அனைத்தையும் அறிந்துக் கொள்ள தேவன் வல்லவராயிருக்கிறார். அந்த நாள் பகல் வேளையில் தேவன் உலா வரும் போது அவர்கள் ஒளிந்து கொண்டனர். அவர்கள் எங்கு ஒளிந்துள்ளார்கள் என்று தேவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்ததால் அவர்களை கண்டுபிடித்தார்.ஏன் ஒளிந்துள்ளீர்கள் என்று ஆதாமிடம் தேவன் வினவினார். தங்களிடம் உடைகள் இல்லை என்பதாலேயே ஒளிந்து கொண்டோம் என்று தேவனிடம் கூறினார்கள். இதற்கு முன்பாக இப்படிப்பட்ட பிரச்சனையை அவர்கள் கண்டதில்லை, ஆனால் இன்றோ அவர்களின் மனம் விசனப்பட்டதால், அவர்களுக்கு அனைத்தும் வேறு விதமாகவே தெரிந்தது. ஆதியாகமம் 3:7



# தேவன் மிகவும் கோபம் கொண்டார்

நீங்கள் நிர்வாணமாக இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எப்படி தெரியும் என்று தேவன் ஆதாமையும் ஏவாளையும் கேட்டார். இதற்கு முன்னால் அவர்களுக்கு இதை பற்றி தெரியவில்லை. இதற்கு முன் அவர்கள் எந்த உடைகளையும் அணிந்தது இல்லை. தேவனால் விலக்கப்பட்ட கனியை சாப்பிட்டோம் என்று அவர்கள் கூறினர். இதனால் அவர்களின் மனம் விசனப்பட்டது. இதுவே அவர்களுக்கு ஏற்பட்ட புது அனுபவமாக இருந்தது. இதற்கு முன்னதாக இப்படிப்பட்ட அனுபவத்தை அவர்கள் பெற்றதில்லை. சர்ப்பம் தங்களுக்கு அக்கனியை கொடுத்ததால் அதனை நாங்கள் சாப்பிட்டோம் என்று தேவனை நோக்கி கூறினார்கள். இதனால் அவர்கள் மீதும், சர்ப்பத்தின் மீதும் தேவன் கடும் கோபம் கொண்டார். ஆதியாகமம் 3:8-19



# யார் அந்த சர்ப்பம்?

ஒரு சர்ப்பம் இவ்வளவு பெரிய பிரச்சனைகளை ஏற்படுத்தியதா என்று நமக்கு விநோதமாக தோன்றும். ஆனால் அது சர்ப்பமில்லை, சாத்தானாகும்.

சாத்தானை பற்றி இன்னும் நாம் படிக்க ஆரம்பிக்கவில்லை. இதனால் சாத்தான் யாரென்று நாம் பார்க்கலாம். வெளிப்படுத்தல் 20:2



# சர்ப்பம் லூசிபராக இருந்தது

லூசிபர் (அல்லது) சாத்தான் யார் என்பதை அறிய விரும்பினால், தேவனும் அவருடைய குமாரனும் தேவதூதர்களை படைத்த கதையை நாம் மறுபடியும் படிக்க முன் செல்ல வேண்டும். தேவ தூதர்களுக்கு நம் போன்று சரீரம் இல்லை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு ஆவியின் சரீரமே உள்ளது. அவர்கள் காற்றை போல இருப்பார்கள். நீங்கள் அவர்களை பார்க்க முடியாது, ஆனால் அவர்கள் விருப்பப்பட்ட படி வந்து போகலாம். யோவான் 3:8

தேவனும் அவருடைய குமாரனும் லூசிபர் என்ற முதல் தேவதூதனை படைத்தனர். அவன் அழகுள்ள படைப்பு. அவன் எல்லா தூதர்களாலும் போற்றப்பட்டான். எசேக்கியேல் 28:13-15



# லூசிபரின் கலகம்

ஆனால் லூசிபரோ தேவன் மற்றும் அவருடைய குமாரன் மீது பொறாமை கொண்டான். மிக பெரியவனாகவும் மற்றும் அதிக வல்லமைகளை பெற வேண்டும் என்றும் அவன் விரும்பினான். தேவன் மற்றும் அவருடைய குமாரனை போல தானும் ஆக எண்ணினான். இதனால் கலகம் செய்ய ஆரம்பித்தான். தேவன் அவனுக்கு கொடுத்த காரியங்களை இனிமேல் செய்யமாட்டான் என்றே அர்த்தம் கொள்ளத் தோன்றுகிறது.

தேவன் உருவாக்கின புதிய கிரகமாகிய பூமியை ஆள வேண்டும் என்று லூசிபர் விருப்பப்பட்டான்.

லூசிபர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று தேவனுக்குத் தெரியும். நாம் என்ன நினைக்கிறோம் என்றும் எப்பொழுதும் தேவனுக்கு தெரியும்.

"லூசிபர்" என்ற பெயருக்கு "அதிகாலையின் விடிவெள்ளி" என்று அர்த்தமாகும். ஆனால் கலகம் செய்த பிறகு, அவன் இருளின் பிரபுவாகிய சாத்தானாக மாறினான்.

ஏசாயா 14:12-15





# பரலோகத்தில் இருந்து சாத்தான் விழுதல்

சேரக்கூடாத ஒளியில் தேவன் வாசம்பண்ணுகிறதால் அங்கு இருள் நெருங்க முடியாது.அதனால் சாத்தான் அங்கிருந்து வெளியேற வேண்டியதாகி விட்டது.

இனி மேலும் அவன் தேவனிடம் ஐக்கியமாக இருக்கமுடியாது. ஒளியில் வாழும் லோகாஸ் மற்றும் எந்த தூதர்களின் அருகிலும் அவனால் செல்ல முடியாது. வெளிச்சமும் இருளும் எதிர் எதிரானது.

பரலோகத்தில் இருந்து தள்ளப்பட்ட சாத்தான் பூமியிலே விழுந்தான் . எசேக்கியேல் 28 : 16



# சர்ப்பத்தின் மூலமாக சாத்தான் பேசினான்

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய பேச்சைக் கேட்காமல் தன் பேச்சைக் கேட்க வேண்டும் என்று சாத்தான் விரும்பினான். ஆதாமும் ஏவாளும் தினமும் தேவனிடம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியும். தான் யார் என்று அவர்களுக்கு தெரியக்கூடாது என்றும் அப்படி தெரிந்தால் தன் பேச்சை அவர்கள் கேட்கமாட்டர்கள் என்றும் எண்ணினான். இதனால் சர்ப்பத்தின் மூலமாக பேச முடிவு எடுத்தான். சர்ப்பமானது விவேகமுள்ளது என்று ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தெரியும் என்பதை அவன் நன்கு அறிந்திருந்தான்.

ஆதியாகமம் 3:1

# தேவன் ஏன் சாத்தானைத் தடுத்து நிறுத்தவில்லை?


சாத்தான் என்ன நினைத்துக் கொண்டிருப்பான் என்பதை அறிந்த தேவன், ஏன் ஆதாமும் ஏவாளும் சாத்தானால் வஞ்சிக்கப்படுவதை தடுத்து நிறுத்தவில்லை?

தேவன் நிச்சயமாக இதைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும். தம்மால் விலக்கப்பட்ட கனியை சாப்பிட்டு கீழ்படியாமற் போனால் என்ன உண்மையில் நடக்கும் என்பதை ஆதாமும் ஏவாளும் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று தேவன் நன்கு அறிந்திருந்தார். கனியை சாப்பிடும் பட்சத்தில், அவர்கள் சாவார்கள் என்று தேவன் கூறியிருந்தார். ஆனால் இதற்கு முன்னால் இறப்பைப் பற்றி அவர்கள் அறிந்ததில்லை. குறுகிய காலமே ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்ததால், அவர்களுக்கு சந்தோஷமும், நல்ல காரியங்கள் மட்டுமே தெரிந்திருந்தது.

# ஆதாமும் ஏவாளும் படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் அறிந்திருந்தார்

தமக்கு கீழ்ப்படிவது எவ்வளவு முக்கியமானது என்றும், சாத்தானை போல தனக்கு எதிராக கலகம் செய்யக் கூடாது என்பதையும் அவர்கள் படிப்பினையாக கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் அறிந்திருந்தார்.

அதனால் தமக்கு விரோதமாக அவர்கள் கலகம் செய்ய சாத்தானை தேவன் அனுமதித்தார். உண்மையில் சாத்தான் அவர்களை வஞ்சித்தானா? விலக்கப்பட்ட கனியை சாப்பிடக்கூடாது என்று அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆனால் எப்படியோ சாப்பிட்டுவிட்டனர். இதனால் நிறைவுச் செய்யப்படாத பூமியின் இதர பகுதிகளுக்கு செல்ல, அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து அவர்களை தேவன் வெளியே துரத்திவிட்டார். 1 தீமோத்தேயு 2 : 13, 14; ஆதியாகமம் 3:22 - 24



# ஏதேன் தோட்டம் மூடப்பட்டது...

இதன் பின்னர் ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் இருந்தால், ஜீவ விருட்சத்தின் கனியை சாப்பிட்டு என்றென்றைக்கும் உயிரோடிருப்பார்கள் என்று தேவன் அறிந்திருந்தார். இதனால் அவர்கள் திரும்பவும் வராதபடிக்கு, ஏதேன் தோட் டத்தின் வாசலை தூதர்களின் ஆளுமைக்கு உட்படுத்தினார்.

*ஆதியாகமம் 3:24*



# முதல் குழந்தை பிறந்தது

முதன் முதலாக ஏதேன் தோட்டத்திற்கு வெளியே ஓர் வீட்டை ஆதாமும் ஏவாளும் கட்ட வேண்டியதாயிற்று. தங்களுக்கு வேண்டியதை எல்லாம் சாப்பிட ஏராளமாக கொடுத்த அதிசயமிக்க தோட்டத்திற்கு பிறகு அவர்கள் தங்களுக்கு தேவையான உணவை தேடி சாப்பிடுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்கள். இறைச்சியை இன்னும் அவர்கள் சாப்பிடப் பழகவில்லை. அதனால் தங்களுக்கு வேண்டிய தேவையான பழங்களையும் காய்கறிகளையும் தேட வேண்டியதாயிற்று.

அவர்களுக்கு முதலில் ஆண் குழந்தை பிறந்தது. காயீன் என்று அவனுக்கு அவர்கள் பெயரிட்டனர். "காயீன்" என்றால் "ஈட்டி" என்று அர்த்தமாகும். ஏதேன் தோட்டத்தை விட்டு ஆதாமும் ஏவாளும் வெளியேற வேண்டும் என்று தேவன் கூறும் போதே ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்றும் கூறியிருந்தார். இதனால் காயீன் மூலமே சர்ப்பத்தின் தலை நசுக்கப்படும் என்று அவர்கள் எண்ணியதாலே, அவனுக்கு "ஈட்டி" என்று பெயரிட்டனர். ஆதியாகமம் 3:15, 4 :1



# முதல் இளைய சகோதரன்

சில காலம் கடந்த பின் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு இன்னொரு மகன் பிறந்தான். அவனுக்கு "ஆபேல்" என்று பெயரிட்டார்கள். அதற்கு "மூச்சு" என்று அர்த்தமாகும். அவர்களுக்கு அவன் இன்னொரு வாரிசாகக் கொடுக்கப்பட்டான். இந்த சிறார்கள் வளரும் போதே, ஏதேன் தோட்டத்தில் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கைப் பற்றியும், ஒவ்வொரு நாளும் தேவனிடம் நண்பர்களாகப் பேசியதை பற்றியும் ஆதாமும் ஏவாளும் அடிக்கடிப் அவர்களிடம் பேசியிருப்பார்கள்.

ஆதாமும் ஏவாளும் தோட்டத்தை விட்டு வெளியேறினபோது, தேவன் அவர்களுக்கு தோல் உடைகளை தந்தார். அவர்களுடைய பாவங்களை போக்க ஒரு மிருக ஜீவன் பலியிடப்பட வேண்டும் என்பதே இங்கு தரப்பட்ட பாடமாகும். இறைச்சியை இன்னும் அவர்கள் சாப்பிடவில்லை. அதனால் மிருக ஜீவன்களை பலியாகக் கொடுத்து, அதனுடைய தோலை மட்டும் எடுத்துக் கொண்டனர்.

ஆதியாகமம் 4 :2; 3:21



# முதல் பலி

காயீனும் ஆபேலும் வளரும் போதே இருவரும் வேறுபட்ட திறமைகளை ஏற்படுத்திக் கொண்டனர். விவசாயத்தில் காயீன் தேறினவனாக இருந்து, கனிகளையும் காய்கறிகளையும் விளையச் செய்தான். ஆபேல் ஆடு மேய்ப்பவனாக மந்தையை உருவாக்கினான்.

தேவன் தங்களுக்குத் தந்த வாழ்க்கை மற்றும் எல்லாவற்றிற்காகவும் காயீனும் ஆபேலும் தேவனுக்கு காணிக்கை தர விரும்பினார்கள். அவர்களுடைய வேலையில் இருந்து கிடைத்ததை கர்த்தருக்கென்று கொண்டு வந்தார்கள். கனிகளையும் காய்கறிகளையும் கொண்டு வந்து, பலிபீடத்தின் மேல் தேவக்கென்று காயீன் வைத்தான். ஆபேல் தன் ஆடு மந்தையிலிருந்து கொழுமையானதைக் கொண்டு வந்தான்.

ஆபேலின் காணிக்கையை மிகவும் சந்தோஷமாக தேவன் ஏற்றுக் கொண்டார். காயீனுடைய காணிக்கையையோ தேவன் ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கு ஒரு பலி தரப்படவில்லை. தன்னுடைய பாவத்திற்காக காயீன் வருத்தப்பட்டு, அப்பாவங்களை போக்க ஒரு பலி தரப்பட வேண்டும் என்பதை காயீன் தெரிந்து கொண்டான் என்பதையே இது காண்பிக்கிறது. ஆதியாகமம் 4 : 3-8



# முதல் மரணம்

தன்னுடைய சகோதரன் மீது காயீன் கடும் கோபம் கொண்டான். தன்னுடைய காணிக்கையை ஏற்காமல், ஆபேலின் பலியை தேவன் விரும்பினார் என்பதை நினைத்து காயீன் பொறாமை கொண்டான். தேவன் விசுவாசத்தை விரும்பினாரே தவிர அவர்கள் கொடுத்ததை விரும்பவில்லை என்று அவன் அறியாதிருந்தான். தம்மிடம் திரும்பவும் நண்பனாக இருக்க வேண்டுமானால், அவர்களுடைய பாவம் மற்றும் குற்றம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றால் நிச்சயமாக பலி ஒன்று தேவை, மாறாக காணிக்கை தேவையில்லை என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

அந்த நாளிலே காயீன் தம்முடைய சகோதரனைக் கொன்றான். ஆதியாகமம் 4:8



# காயீன் ஓடி ஒளிதல்

தான் தவறு செய்து விட்டதை எண்ணி ஒளிந்து கொள்ள வேண்டும் என்று காயீன் எண்ணிணான்.நாம் எங்கு இருப்போம் என்பது தேவனுக்கு எப்போதும் நன்கு தெரியும். அதனால் தேவன் காயீனை நோக்கி, ஆபேல் எங்கே என்றார்? அதற்கு பதிலளித்த காயீனோ, "எனக்கு எப்படித் தெரியும். நான் ஆபேலுக்கு காவலாளியா" என்றான். ஆனால் காயீன் தான் ஆபேலைக் கொன்றான் என்று தேவனுக்குத் தெரியும். இதனால் அவனை தண்டிக்கும் நோக்குடன் தேவன் காயீனைத் துரத்திவிட்டார். ஆதியாகமம் 4:14



# காயீன் தண்டிக்கப்படுதல்

காயீன் தூரமாக துரத்தியடிக்கப்பட்டு தனியே வாழ்ந்து வந்தான். ஒரே நாளில் ஆதாமும் ஏவாளும் தம்முடைய இரண்டு மகன்களை இழந்தனர். ஆபேல் இறந்து போனான். காயீனோ துரத்தியடிக்கப்பட்டான். எவ்வளவு சோக நாளாக அந்நாள் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும்!

ஆதாமும் ஏவாளும் மிகவும் ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும். சர்ப்பத்தின் தலையை நசுக்கி மறுபடியும் ஏதேன் தோட்டத்தைத் தங்களுக்காக காயீன் திறந்து வைப்பான் என்று அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்ததை நினைத்துப் பார்க்க வேண்டும்.

வேதாகமத்தில் பெயர்கள் குறிப்பிடப்படாமல் இருந்தாலும், ஆதாம் ஏவாளிற்கு நிறைய பிள்ளைகள் இருந்தனர். அவர்களுக்கு மகன்களும் மகள்களும் நிறைய பேர் இருந்தமையால், அவர்கள் எல்லோரும் வளர்ந்து, தங்களுக்குள்ளே திருமணம் முடித்து நிறைய பிள்ளைகளை பெற்றனர். இன்று வாழக்கூடிய மக்கள் அனைவரும் ஆதாம் மற்றும் ஏவாளின் சொந்தங்களாக உள்ளனர்! ஆதியாகமம் 4:11 -17



# தூதர்கள் பூமிக்கு வந்தனர்

நிறைய பிள்ளைகள் பிறந்து வளர்ந்த பின், அவர்களுக்கு திருமணம் செய்ததால் அவர்களுக்கும் நிறைய பிள்ளைகள் பிறந்தன. முதல் குடும்பம் மிகவும் பெரியதாக வளர்ந்தது. அதன் பின் இவர்கள் முதன் முதலாக கிராமத்தையும், பிறகு நகரத்தையும், அதன் பின் பல நகரங்களையும் உருவாக்கினர். ஆதாம் ஏவாள் இறந்து பல காலங்களுக்கு பிறகு யாரும் ஏதேன் தோட்டத்தையும், சாத்தான் (அல்லது) சர்ப்பத்தை பற்றி நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

இப்போது இந்த மக்களை தன்னைப் பின்பற்ற வைத்தால், இப்பூமி முழுவதையும் ஆளுகை செய்ய முடியும் என்று சாத்தான் நினைத்தான். ஆனால் மரணிக்கக்கூடிய மக்கள் மீது இராஜாவாக இருக்க அவன் விரும்பவில்லை. இதனால் அவனுக்கு ஒரு எண்ணம் பிறந்தது. சில தூதர்களின் மனதை மாற்றி, பூமியில் உள்ள பெண்களைத் திருமணம் செய்து, குழந்தைகள் பெற வைக்க வேண்டும் என்று எண்ணினான். தூதர்கள் மரிக்க மாட்டார்கள், அதனால் அவர்களுடைய பிள்ளைகளும் இறக்க மாட்டார்கள் என்று சாத்தான் எண்ணினான்.

பூமிக்கு வரும்படி சில தூதர்களை ஒத்துக் கொள்ள வைத்ததோடு, அவர்களை மனிதர்களாக மாறவும் செய்தான். ஆண்களாக மாறிய அத்தூதர்கள் மனிதப் பெண்களை மணந்து குழந்தைகளை பெற்றனர். இக்குழந்தைகள் பாதி மனிதத் தன்மையும் பாதி தூதர் தன்மையும் பெற்றிருந்ததால், மற்றவர்களை விட இவர்கள் பலசாலிகளாக இருந்தனர். இவர்கள் எல்லோரையும் தங்களுக்கு கீழ்ப்படியச் செய்து, கலகம் செய்து வந்தனர். அவர்கள் பூமியின் மீது ஆளுகை செய்தார்கள். அவர்கள் "இராட்சதர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள்.

இவ்வகை இராட்சதர்கள் மிகவும் மோசமாக இருந்தார்கள். பூமி முழுவதும் மக்கள் மிகவும் அதிகமாக பாவங்கள் செய்பவர்களானார்கள். எங்கும் ஜனங்கள் சண்டையிட்டு கொண்டும், ஒருவரை ஒருவர் சபித்துக் கொண்டும் இருந்தனர். இராட்சதர்களுக்கு முடிவு கட்ட இதுவே நல்ல தருணம் என்று தேவன் முடிவு செய்தார்! ஆதியாகமம் 6:1-7.

# இந்த இராட்சதர்கள் போகவேண்டியதாக இருந்தது!

இராட்சதர்கள் பூமியை அதிக நாள் ஆளுமை செய்வதின் மூலம், ஜனங்கள் அனைவரும் மிகவும் மோசமான நிலைக்கு செல்வார்கள் என்று தேவன் நன்கு அறிந்திருந்தார். ஏனெனில் அவர்கள் எண்ணமும் மிகவும் தீயதாக இருந்தது. அதனால் இராட்சதர்கள் அழிக்கப்பட்டு, மனித குடும்பம் மீண்டும் துவங்க வேண்டும் என்று தேவன் முடிவு செய்தார்.

பாவமில்லாத ஒரு குடும்பம் தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்து வந்தது. இதனால் அக்குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்று தேவன் முடிவெடுத்தார். தங்களையும் பூமியில் உள்ள சில விலங்குகளையும் எப்படி காத்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் அக்குடும்பத்திற்கு விளக்கினார். ஆதியாகமம் 6 :5 -7



# தேவன் ஜலப்பிரளயத்தை ஏற்படுத்தினார்

*ஜலப்பிரளயத்தை ஏற்படுத்தி அனைத்து ஜனங்களையும், இராட்சதர்களையும் விலங்குகளையும் நீரில் மூழ்கடிக்க தேவன் எண்ணினார். நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் ஒரு பெரிய பேழையைக் கட்டச் சொல்லி, பூமியிலுள்ள பிராணிகளை ஒவ்வொரு ஜோடியாக பேழைக்குள் வைக்க தேவன் அவர்களிடம் கூறினார். மிருகங்களை எல்லாம் நோவாவிடம் கொண்டு வந்து சேர்த்து, அப்பெரிய பேழைக்குள் செல்ல தேவன் ஏற்பாடு செய்தார். நோவா, அவர் மனைவி, அவருடைய மூன்று மகன்கள் மற்றும் அவர்களுடைய மூன்று மருமகள்களையும் கூட்டிக் கொண்டு பேழைக்குள் செல்லும்படி தேவன் கூறினார். நோவா குடும்பத்தாரும் மிருக ஜீவன்களும் பாதுகாப்பாக பேழைக்குள் சென்ற பின்னர் மழை பெய்ய தொடங்கியது. நாற்பது நாள் தொடர்ச்சியாக மழை பெய்தது. அவர்களும், மிருக ஜீவன்களும் ஒரு வருடக் காலம் பேழைக்குள் தங்கி இருந்தனர். அதன் பின்னரே வெளியே வந்தனர்!*

*ஆதியாகமம் 6:11-22, 7:1-24*





நோவா பேழையைக் கட்டுதல்

# புத்தம் புதிய உலகம்

நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் பேழையை விட்டு வெளியே வந்து பார்க்கும் போது, பூமி முழுவதுமாக மாறி வேறுபட்டு வெறுமையாகக் காட்சி அளித்தது. தங்களை காப்பாற்றியதற்காக முதன் முதலாக அவர்கள் தேவனுக்கு நன்றி சொல்லி ஜெபம் செய்தார்கள். வானவில் வானத்தில் தோன்றியது. இதற்கு முன்னர் மழை பெய்யாததால், அவர்கள் வானவில்லைக் கண்டதில்லை.

ஒவ்வொரு முறையும் வானவில்லைப் பார்க்கும் போது, அவரோடு செய்த உடன்படிக்கையை அவர்கள் நினைக்க வேண்டும் என்று தேவன் சொன்னார். இனிமேல் முழு பூமியையும் ஜலப்பிரளயத்தினால் அழிக்கமாட்டேன் என்றும் தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தார். இந்த வாக்குத்தத்தம் இன்றளவும் உண்மையாக உள்ளது. ஆதியாகமம் 9 :8-17

எப்பொழுதெல்லாம் நாம் வானவில்லைக் காண்கிறமோ, அப்போதெல்லாம் பூமியில் உள்ள எல்லா உயிரினங்களை அழிக்க இனி ஜலப்பிரளயம் வராது என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை நமக்கு தேவன் நினைவுப்படுத்துகிறார்.



# முதல் உலகம் முடிவடைந்தது

இதுதான் முதல் உலகின் முடிவாகும். பூமி இன்னும் இருந்தது, ஆனால் வெறுமையாக இருந்தது. நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் மீண்டும் எல்லாவற்றையும் ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் வீடுகளை கட்டி,காய்கறி செடிகளை நட்டு, எப்படி வாழ வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மாமிசத்தை சாப்பிட ஆரம்பிக்கலாம் என்று தேவன் முதன் முதலாக அவர்களுக்கு சொன்னார். அந்நாள் வரை யாரும் மாமிசத்தை உண்ணாமல், பழங்கள் மற்றும் காய்கறிகளை மட்டுமே உண்டு வாழ்ந்தனர்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாம் படைக்கப்பட்டதிலிருந்து 1656 ஆண்டுகள் கடந்து விட்டன.

தற்போது நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் புதிய உலகில் வாழ ஆரம்பித்தனர். அவர்களுக்கு அநேக பிள்ளைகள் இருந்தன. அதன் பின்னர் அப்பிள்ளைகள் வளர்ந்து திருமணம் செய்ததால், அவர்களும் அநேக பிள்ளைகளைப் பெற்றனர். இதன் பின்னர் பல ஆண்டுகள் கடந்து சென்ற பிறகு, ஜனங்கள் நோவாவையும் அவர் ஜலப்பிரளயத்தில் இருந்து காப்பாற்றபட்டதையும் மறந்தனர். அவர்கள் பெரிய நகரங்களையும் உயரமான கட்டிடங்களையும் கட்டினார்கள். இதனால் ஜனங்கள் தேவனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் மறக்க ஆரம்பித்தனர். பாபேல் கோபுரம் என்ற மிகப்பெரிய கட்டிடத்தை கட்டினார்கள். இனிமேல் ஜனங்கள் சேர்ந்திருக்கக் கூடாது என்று தேவன் விரும்பினார். மக்கள் எல்லோரும் பூமி முழுவதும் பரவ வேண்டும் என்று தேவன் விரும்பினார். இதனால் அவர்கள் பேச பல்வேறு மொழிகளை தேவன் உருவாக்கினார். இதனால் ஒரே மொழியை பேசியவர்கள் ஓரிடத்திலும், வேற்று மொழி பேசுபவர்கள் வேறு இடத்திலும் குடிப்பெயர்ந்தனர்...

ஆதியாகமம் 9: 3 ; 11: 1 -9





பாபேல் கோபுரத்தைக் கட்டுதல்

# முதலாம் உலகம்

# அப்பொழுது இருந்த உலகம்

## ஆதாம் ஏவாள் தொடங்கி
## ஜலப்பிரளயம் வரை





# பூமி முழுவதும் ஜனங்கள் பரவினார்கள்

இதனால் மக்கள் அதிக தூரம் பயணம் செய்யத் தொடங்கினர். ஒரே மொழியை பேசிய ஜனங்கள் சேர்ந்தே வாழ்ந்ததால், அவர்கள் ஒரு இனமாக ஆகினர், இந்த இனங்கள் பெருகி, நிறைய நாடுகளாக உருவாகினர்.

ஜலப்பிரளயத்தில் இருந்து நோவாவையும் அவர் குடும்பத்தையும் காப்பாற்றிய உண்மையான தேவனை ஜனங்கள் மறந்து போயினர். பல்வேறு மிருக ஜீவன்களை சிலைகளாக வடித்து, அவற்றைக் கடவுளாக வணங்கி, தாங்கள் நம்பின கடவுளின் பெயர்களை அதற்கு இட்டனர். ஆனால் இவை எதுவும் உண்மையான தெய்வம் இல்லை.

உண்மையான தேவனை மட்டும் விசுவாசிக்கக் கூடிய ஒரு மனிதன் இருந்தார். ஆபிரகாம் என்று பெயரை உடைய ஒருவர் "ஊர்" என்ற நகரத்தில் வாழ்ந்து வந்தார். ஆபிரகாம் தம்மீது நம்பிக்கை மற்றும் அதிக விசுவாசம் வைத்ததினால், தாம் செய்யச் சொல்லும் அனைத்து காரியங்களையும் செய்வார் என்று தேவனுக்கு முன்னமே தெரியும்.

பொய்யான கடவுள்களை வணங்கி வந்த அந்நாட்டு மக்களையும் அவ்விடத்தையும் விட்டு வெளியேறும்படி தேவன் ஆபிரகாமிடம் கூறினார். ஆபிரகாமை அவர்களிடம் இருந்து பிரித்து, அவரையும் அவர் குடும்பத்தாரையும் உண்மையான தெய்வத்தை வணங்கச் செய்து தம்முடைய ஜனமாக ஏற்றுக் கொள்ள தேவன் விரும்பினார்.

இதனால் ஆபிரகாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து தன் குடும்பத்தை வேறொரு தேசத்திற்கு கொண்டு போனதால், அவர்கள் அங்கு ஒரே உண்மையான தேவனைக் கீழ்ப்படிந்து வணங்கினார்கள். கடவுள்களாக கருதப்பட்ட சிலை மற்றும் "விக்கிரகத்தை" வணங்க அவர்கள் விரும்பவில்லை. ஆதியாகமம் 9:9 ;12:1-3



# ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம்

*தாம் செய்யச் சொன்னதை எல்லாம் ஆபிரகாம் செய்து முடித்ததை எண்ணி தேவன் மிகவும் மகிழ்ந்தார். தேவன் மீது அதிகப்படியான விசுவாசம் வைத்திருந்ததால், எந்தவொரு கேள்வியையும் தேவனிடம் ஆபிரகாம் கேட்டதில்லை மற்றும் அவர் செய்யச் சொன்னதை எல்லாம் செய்தார்.*

*தனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் அந்த மகன் மூலமாக உலகில் உள்ள அனைத்து ஜனங்களும் ஆசிர்வதிக்கப்படுவார்கள் என்று தேவன் ஆபிரகாமுக்கு சொன்னார். தனக்கு பிள்ளை இல்லாததாலும், பிள்ளை ஒன்று தனக்கு தேவைப்படுவதாலும், இதைக் கேட்ட ஆபிரகாம் மிகவும் சந்தோஷப்பட்டார். ஆனால் பல காலம் சென்றது. ஆபிரகாமுக்கோ இன்னும் பிள்ளையில்லாமல் இருந்தது. ஆபிரகாமுக்கு ஒரு பிள்ளையை கொடுக்க தேவன் நெடுங்காலம் காக்க வைத்தார். ஆபிரகாம் 100 வயது மற்றும் சாராள் 90 வயது ஆகும் வரைக்கும் தேவன் காத்திருந்தார். இந்த வயதில் தங்களுக்குப் பிள்ளை பிறக்குமா என்று அவர்கள் எண்ணத் துவங்கினர். ஆனால் தேவன் எப்போதும் தம் வாக்குறுதியை நிறைவேற்றுவார்.*

*அவர்களுக்கு ஓர் மகன் பிறந்தான். அவனுக்கு "ஈசாக்கு" என்று பெயரிட்டார்கள். அதற்கு சிரிப்பு என்று அர்த்தமாம். ஆதியாகமம் 17:1-19*



# ஆபிரகாம் சோதனையை வெற்றி கொண்டார்

ஆபிரகாமும் அவருடைய மனைவி சாராளும் தங்கள் பிள்ளையைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டனர். பல காலம் பொறுத்திருந்து தங்களுக்கென ஒரு பிள்ளையைப் பெற்றதால், எல்லா பெற்றோரும் தம் பிள்ளைகளிடம் அன்பு செலுத்துவதைப் போல அவர்களும் ஈசாக் மீது அன்பு செலுத்தினார்கள். ஒரு நாள் கடினமான காரியத்தை ஆபிரகாம் செய்யும்படி, தேவன் அவரிடம் கேட்டார். ஈசாக்கை ஒரு பலிபீடத்தின் மேல் தமக்குப் பலியாகக் கொடுக்க வேண்டும் என்று அவரிடம் தேவன் சொன்னார். மேலும் ஈசாக்கை பலியிட எந்த இடத்திற்கு சென்று பலிபீடத்தை கட்டவேண்டும் என்றும் தேவன் அவரிடம் கூறினார். ஆபிரகாம் மோரியா மலைக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இதனால் ஆபிரகாம் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாயிருப்பார். இந்த பிள்ளையை தான் ஆபிரகாமின் நூறாவது வயதில் தேவன் அவருக்கு கொடுத்தார். இந்த பிள்ளையின் மூலமே பூமியிலுள்ள சகல ஜனங்களும் ஆசிர்வதிக்கப்படுவார்கள் என்பதும் ஆபிரகாமுக்கு நன்கு தெரியும். ஆபிரகாம் இந்த காரியத்தை செய்யும்படி தேவன் ஏன் விரும்பப்பட்டார்?

ஆதியாகமம் 22:1-19



தேவன் ஏதோ நன்மைக்கே செய்ய சொல்கிறார் என்று ஆபிரகாம் எண்ணினார். மேலும் மரித்த நிலையில் இருப்பவர்களை உயிர்த்தெழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்று ஆபிரகாம் நினைத்தப்படியால், ஈசாக்கை கூட்டிக் கொண்டு மோரியா மலைக்குச் சென்றார்.

தனது அன்புக்குரிய மகனான ஈசாக்குடன் ஆபிரகாம் செல்லும் போது எவ்வளவு அஞ்சியிருப்பார் என்று சற்று நினைத்து பாருங்கள். தனது தகப்பன் என்ன செய்யப் போகிறார் என்று ஈசாக்கிற்குத் தெரியாது. பலியிடுவதற்கு தேவையான ஆடு எங்கிருக்கிறது என்று ஆபிரகாமை பார்த்து ஈசாக் கேட்டான். தேவன் மீது முழு நம்பிக்கை வைத்திருந்ததால், பலியிடுவதற்குத் தேவையான ஆட்டுக்குட்டியை தேவன் கொடுப்பார் என்று ஆபிரகாம் சொன்னார்.

தேவன் சொன்ன மோரிய மலைக்கு சென்ற பின்பு, கற்களால் ஆன பலி பீடத்தைக் கட்டி, அதில் ஈசாக்கை ஆபிரகாம் கட்டிப் போட்டார். ஈசாக் மிகவும் எளிதாக ஓடியிருக்கலாம், ஆனால் அவனோ முழுமனதுடன் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான்.

ஈசாக்கை பலியிட ஆபிரகாம் தன் கத்தியை ஓங்கிய போது, தேவதூதன் அவர் கையை தடுத்து நிறுத்தினார். ஆபிரகாம் தாம் செய்யச் சொன்ன எல்லாவற்றையும், தமக்காக செய்வார் என்று தேவன் அறிந்திருந்தபடியால், ஈசாக்கை பலியிட தேவன் ஆபிரகாமை விடவில்லை. செடியில் சிக்கியிருந்த ஆட்டுக் கடாவை கண்ட ஆபிரகாம், ஈசாக்கிற்கு பதிலாக அதை பலியிட்டார்.

அந்த நாள் மிகவும் சந்தோஷமான நாளாக நிச்சயம் மாறியிருக்கும்! தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை பலியிடுவதை இது குறிக்கின்றது. ஆபிரகாம் செய்ய வேண்டிய முக்கிய காரியத்தை, தேவன் செய்யச் சொன்னார். இயேசு இறந்த இடமும் மோரியா மலைக்கு மிக அருகில் இருந்தது.

இதன் பின்பு ஆபிரகாம் மற்றும் அவருடைய மகனின் மூலமாக பூமியில் உள்ள சகல ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை மீண்டும் தேவன் சொன்னார். ஆபிரகாம் பயணம் செய்த இடங்களை எல்லாம் நிச்சயமாக ஒரு நாள் பெற்றுக் கொள்ளுவார் என்றும் தேவன் அவருக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும் பூமியின் கடற்கரை மணலைப் போலவும் திரளான பிள்ளைகள் ஆபிரகாமுக்கு கிடைக்கப் பெறும் என்றும் அவருக்கு மேலும் வாக்குத்தத்தத்தைத் தந்தார். இவையெல்லாம் மிகவும் அதிசயமான வாக்குத்தத்தங்கள். தேவன் எப்போதும் தாம் கூறின வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

# முற்பிதாக்களின் யுகம்

## ஜலப்பிரளயத்தில் இருந்து யாக்கோப்பின் மரணம் வரை





# ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு

சில காலம் சென்ற பின்பு, ஏசா மற்றும் யாக்கோபு என்று இரண்டு மகன்கள் ஈசாக்கிற்குப் பிறந்தனர். பூமியிலுள்ள சகல மக்களும் ஆசர்வதிக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்திற்கு ஏசா முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆனால் யாக்கோபிற்கோ இந்த ஆசிர்வாதம் தேவைப்பட்டது. இதனால் முதற்பேறான ஏசாவின் புத்திர சுவிகாரத்தை பெற்று ஈசாக்கிடம் இருந்து ஆசிர்வாதங்களை பெற யாக்கோபு எண்ணினார். யாக்கோபிற்கு 12 மகன்களும், ஒரு மகளும் இருந்தனர். பிள்ளைகளுக்குள் யோசேப்பே யாக்கோபிற்கு மிகவும் பிடித்த பிள்ளையாயிருந்தார். இதனால் யோசேப்பு மீது பொறாமை கொண்ட அவருடைய சகோதரர்கள், அவரை எகிப்தில் அடிமையாக விற்றனர்.

எகிப்தில் அடிமையாக வாழ்வது மிகவும் கொடுமையான வாழ்க்கையாகும். யோசேப்பை அடித்து, சிறையில் தள்ளினர். தமது தகப்பன் மற்றும் குடும்பத்தாரை மீண்டும் பார்க்க யோசேப்பு மிகவும் ஆவலாய் இருந்தார். எகிப்தின் இராஜாவாகிய பார்வோனின் சொப்பனத்திற்கு விளக்கம் தர யோசேப்பை தேவன் பயன்படுத்தினார். இதனால் எகிப்தின் மீது யோசேப்பை பொறுப்பாளராக பார்வோன் நியமித்தான். எகிப்து தேசம் முழுவதும் கொடிய பஞ்சம் நிலவியதால் உணவு எங்குமில்லாமல் இருந்தது. உணவை வாங்க வேண்டுமானால், யோசேப்பின் குடும்பத்தார் எகிப்துக்கு வரவேண்டும். தமது தகப்பனோடும், குடும்பத்தாரோடும் யோசேப்பு மறுபடியும் ஒன்று சேர்ந்தார். எகிப்தின் மீது பொறுப்பாளராக இருந்ததால், தம்முடைய குடும்பத்தாருக்கு உணவு கொடுத்து உதவி செய்தார்.

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினபடி, ஆபிரகாமின் மகன்களில் ஒருவர், பூமியிலுள்ள சகல மக்களையும் ஆசிர்வதிப்பார் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால் இந்த ஆசீர்வதமானது எதிர்காலத்தில் இன்னும் வியத்தகு முறையில் நடக்கும்.

யாக்கோபு இறந்தார், இதன் பின் யோசேப்பும் மரணம் அடைந்தார். இதற்கு பின் எகிப்தில் ஆட்சி புரிந்த பார்வோனுக்கு யோசேப்பின் சொந்தங்களை பிடிக்காமல் போயிற்று. அவர்களை எல்லாம் அடிமைகளாக்கி, தமக்கென நகரங்களை கட்ட, அவர்களை அடித்து, துன்புறுத்தி, மிகவும் கடுமையாக வேலை செய்ய வைத்தான். இதன் பின் எபிரேயர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் தன்னுடைய மக்களை நிலை குலைய செய்வார்கள் என்று பார்வோன் எண்ணினான். அதனால் எபிரேயர்களுக்குப் பிறந்த அனைத்து ஆண் பிள்ளைகளையும் கொல்ல வேண்டும் என்று பார்வோன் கூறினான். ஆதியாகமம் 25:19-28;37, யாத்திராகமம் 1.

# மோசே காக்கப்பட்டார்

அந்த சமயத்தில் ஓர் இளம் தாயிற்கு சிறிய ஆண் குழந்தை இருந்தது. அந்த ஆண் குழந்தை மிகவும் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தது. அக்குழந்தையின் உயிரைக் காப்பாற்ற சிறிய பேழைக்குள் ஒளித்து வைத்து நதியில் உள்ள புல்களில் மறைத்து வைக்கலாம் என்று அந்த தாய் நினைத்திருந்தாள். பார்வோனின் மகள் நீந்திக் கொண்டிருந்த இடத்திற்கு அச்சிறிய பேழைச் சென்றது. ஒரு அழகான ஆண் குழந்தை அப்பேழைக்குள் இருப்பதை பார்வோனின் மகள் கண்டாள். அதனால் அக்குழந்தையை தன்னுடன் வைத்துக் கொள்ள விருப்பப்பட்டதால், "மோசே" என்று அக்குழந்தைக்கு பெயரிட்டாள். இஸ்ரயேல் எனப்படும் 'யாக்கோபின்' மகனும் எபிரேயனானவனுமாகிய மோசே அவளுக்கு மகனும் பார்வோனுக்கு பேரனுமாக வளர்ந்து வந்தார். யாத்திராகமம் 2:1-10



# மோசே வளர்ந்தார்

பார்வோனின் மகள் மோசேயை தத்தெடுக்க தீர்மானித்தாள். எனவே அவள் அவரை தன்னுடைய மகனாக ஆக்கினாள். ஆனால் மோசேயின் சகோதரி அச்சிறிய பேழைக்கு என்ன நடந்தது என்பதை கவனித்து, பார்வோனின் மகளிடம் ஓடிச்சென்று, அக்குழந்தையை வளர்க்க ஒரு வளர்ப்பு தாய் தேவைப்படுமா? என்று அவளை கேட்டாள். பார்வோனின் மகள் "ஆம்" என்று கூறினாள். இதன் பின் மோசேயின் சகோதரி மிரியாம் அவளுடைய தாயிடம் ஓடிச் சென்றாள். மோசேயின் தாயான யோகபேத் பார்வோனின் மகளுக்காக மோசேயை வளர்த்தாள். மோசேக்குத் தன்னுடைய குடும்பத்தாரை பற்றியும் ஆபிரகாமின் மகனாக விளங்கக் கூடிய அவனுடைய வரலாற்றையும் கற்பித்தாள்.

மோசே வளர்ந்த போது தன்னுடைய குடும்பத்தார்கள் அடிமைகளாக நடத்தப்படுவதை பார்க்க விரும்பவில்லை. அடிமைப்படுவதில் இருந்தும் மற்றும் கடுமையாக உழைப்பதில் இருந்தும், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று மோசே விரும்பினார். தன்னுடைய குடும்பத்தாரில் உள்ள எபிரேய அடிமையை எகிப்தியன் ஒருவன் அடிப்பதை கண்டு, அவனைக் கொன்று மண்ணில் புதைத்தார். ஆனால், இதற்காக தண்டிக்கப்படுவோம் என்று பயந்து எகிப்தை விட்டு ஓடினார். பாலைவனத்தில் வாழும் சிறு கூட்டத்தாரோடு 40 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தார். எகிப்திற்கு திரும்பிச் செல்ல அவர் விரும்பவில்லை. ஆனால் மோசே எகிப்திற்குத் திரும்பிச் சென்று தன்னுடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க இதுவே சரியான தருணம் என்று தேவன் முடிவு செய்தார்.

தேவன் ஒரு நாள் மோசேயிடம் பேசினார், ஆனால் அது வழக்கத்திற்கு மாறாக இருந்தது. தம்முடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சமயத்தில், ஒரு செடியானது கொழுந்துவிட்டு எரிவதை மோசே கண்டார். ஆனால், அச்செடி எரிந்து அழியாமல், எரிந்துக் கொண்டே இருந்தது. இது பெரும் விநோதமாக இருந்தது. மோசே செடியை பார்த்துக் கொண்டிருக்கும் போதே, செடியின் நடுவிலிருந்து ஓர் குரலை கேட்டார். யாத்திராகமம் 2:9, 3:15

தேவனையும், தூதர்களையும் எந்த ஆவிக்குரிய ஜீவியையும் நாம் பார்க்க முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாம் அவர்களை காண வேண்டும் (அல்லது) அவர்களின் சத்தத்தை கேட்க வேண்டும் என்றால், அவர்கள் விருப்பப்பட்டால் மட்டுமே நாம் அவர்களை பார்க்க முடியும் (அல்லது) அவர்களை சத்தத்தை கேட்க முடியும். அந்த புதரிலிருந்து மோசேயிடம் பேச தம்முடைய தூதர்களில் ஒருவரை தேவன் அனுப்பி வைத்தார்.

தேவ தூதர் அங்கு செடியாக இல்லை. செடி (அல்லது) நெருப்பு போலவும் இல்லை. தேவன் மற்றும் தூதர்களின் உடல்களை நாம் காணவும் முடியாது, புரிந்து கொள்ளவும் முடியாது. அச்செடியிலிருந்து வெளிப்பட்ட சத்தமானது, மோசேயை நோக்கி, எகிப்தில் தம்முடைய மக்களாகிய எபிரேயர்கள் அடிமைகளாக இருக்கிறார்கள் என்றும் அவர்களை விடுதலை செய்ய தேவன் விரும்புகிறார் என்றும் கூறியது. ஆபிரகாமின் பிள்ளைகளாக இருந்ததால், எபிரேயர்கள் தேவனுடைய மக்களாக எண்ணப்பட்டார்கள். ஆபிரகாமின் பிள்ளையின் மூலமாக பூமியிலுள்ள சகல மக்களும் ஆசிர்வதிக்கப்படுவார்கள் என்று தேவன் ஏற்படுத்தின வாக்குத்தத்தத்தை சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். தேவன் அதிசயம் செய்து ஈசாக்கை பிறக்க வைக்கவில்லை என்றால் ஆபிரகாமுக்கு பிள்ளை இருந்திருக்காது. அதனால் தேவனுடைய ஜனமாகிய எபிரேய மக்கள் தேவனின் அதிசயமாகவே எண்ணப்படுவார்கள்.

தம்முடைய மக்களை மிகவும் கொடுமைப்படுத்தியதால் பார்வோன் மற்றும் எகிப்தியர் மீது தேவன் மிகவும் கோபம் கொண்டார். இஸ்ரயேல் ஜனங்களை விடுதலை செய்ய தேவன் விருப்பப்பட்டார். இதனை செய்து முடிக்க மோசேயை தமது ஊழியக்காரனாக ஆக்க தேவன் விருப்பப்பட்டார்.



# மோசே மீண்டும் எகிப்திற்குச் செல்லுதல்

எகிப்திற்கு திரும்பிச் சென்று பார்வோனிடம் பேச மோசே மிகவும் பயந்தார். பாலைவனத்தில் 40 வருடங்கள் வாழ்ந்ததால் அவர் மிகவும் மாறியிருந்தார். மோசே அங்கு வளர்ந்திருந்தாலும் தாம் தேவனோடே பேசியதை பார்வோனிடம் கூறி நம்ப வைக்க இயலாது என்று மோசே நினைத்தார். தான் பலவீனமாக இருப்பதை மோசே உணர்ந்தார். ஆனால் மோசே என்ன பேச வேண்டும் என்பதை தாம் சொல்வதாக தேவன் அவரிடம் உத்திரவாதம் தந்தார். மோசேயின் சகோதரனான ஆரோன், பார்வோனிடம் மோசே பேசுவதற்கு உதவுவார் என்றும் தேவன் கூறினார். இதனால் மோசே திரும்பிப் போனார்.

யாத்திராகமம் 4 :1 -20

பார்வோனின் முன்பு மோசே அதிசயம் ஒன்று செய்ய தேவன் கட்டளையிட்டார். அவருடைய சகோதரனாகிய ஆரோன் தன்னுடைய கோலைத் தரையிலே போட்டார். அப்போது அது விஷமுள்ள சர்ப்பமாக மாறியது. இதை ஆரோன் பார்வோன் முன் செய்து, தம்முடைய மக்களை விடுவிக்கும்படி தேவன் தனக்கு கூறியதாக பார்வோனிடம் கூறினார். பார்வோனின் மந்திரவாதிகளும் இதே போன்ற அதிசயத்தை செய்ததால், ஆரோனின் அதிசயம் பார்வோனை மனம் மாறச் செய்யவில்லை.



# மோசே அதிசயங்கள் செய்தார்

தேவனின் மற்றுமொரு அதிசயத்தை செய்ய மோசே தயாரானார். எகிப்தின் நதி மீது ஆரோன் தன் கோலை நீட்டினார். அப்போது நதியின் தண்ணீர் உடனே இரத்தமாக மாறியது. நதியின் நீர் மட்டும் இரத்தமாக மாறவில்லை மாறாக கோப்பைகளிலும், பானைகளிலும் இருந்த தண்ணீரும் இரத்தமாக மாறியது. இதனால் மக்கள் அதிக ஆழமாக ஊற்று தோண்டி, அதில் இரத்தம் கலக்காத தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்தார்கள்.

இதே போன்ற அடையாளங்களை தன்னுடைய மந்திரவாதிகளும் செய்ததால், பார்வோன் இதனை பெரிதாக்க எடுத்துக் கொள்ளவில்லை. இந்த அதிசயம் 7 நாட்கள் நீடித்தது. இதே போன்ற அடையாளங்களை பார்வோனின் மந்திரவாதிகள் செய்தாலும், அவர்களால் அவற்றை திரும்ப பெற வல்லமையில்லாமல் போயிற்று. மோசே மற்றும் ஆரோன் மூலமாக தேவன் மட்டும் அந்த அடையாளங்களை திரும்பப் பெற முடிந்தது. யாத்திராகமம் 7:1-25



# மோசே மூன்றாவது அடையாளத்தை செய்தல்

இப்பொழுது தம்முடைய மக்களை விடுதலை செய்யும்படி பார்வோனை மோசே திரும்பவும் கேட்டார். ஆனால் பார்வோனோ இதற்கு செவி சாய்க்கவில்லை. இதனால் இன்னும் அதிக அடையாளங்களான வாதைகளை எகிப்தின் மீது மோசே அனுப்பினார். மூன்றாவது அடையாளமான, தவளைகளின் வாதையை மோசே மூலமாக தேவன் அனுப்பினார். ஆரோன் தன் கோலை நதியின் மீது நீட்டியவுடன் ஆயிரக்கணக்கான தவளைகள் நதியிலிருந்து பெருகி வந்து தாவி தாவி அனைத்து இடங்களிலும் பரவியது. இதனால் எகிப்தின் மக்கள் உண்ணவோ, தூங்கவோ, சமைக்கவோ மற்றும் எந்தக் காரியத்தையும் செய்யமுடியவில்லை. ஏனெனில் எல்லா இடங்களிலும் தவளைகள் ஓடிக்கொண்டிருந்தது. யாத்திராகமம் 8

இதை போன்று பார்வோனின் மந்திரவாதிகளும் செய்ததால், மோசேயின் பேச்சைப் பார்வோன் கேட்கவில்லை.



# மோசே நான்காவது அடையாளத்தை செய்தல்

அடுத்த அடையாளமான பேன்களை தேவன் அனுப்பினார். நம்முடைய முடியில் பேன்கள் இருந்தால் எவ்வளவு அரிப்பு ஏற்படும் என்று உங்களுக்குத் தெரியும். அதே சமயம் அதை நீக்குவதும் எவ்வளவு கடினம் என்பதும் உங்களுக்குத் தெரியும். மிகவும் சிறியதாக இருப்பதால், அவைகள் தூசிகள் போல இருந்தன. பூமியில் உள்ள தூசிகள் மீது ஆரோன் தன் கோலை நீட்டினார். அப்போது தூசிகள் எல்லாம் பேனாக மாறி நகரத் தொடங்கியது.

இந்த அடையாளங்களை அதே போல் செய்ய முதல் முறையாக மந்திரவாதிகள் முயற்சி செய்தனர். ஆனால் அவர்களால் அதை செய்ய முடியவில்லை. மோசே இவ்வடையாளத்தை எப்படிச் செய்தார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை . அப்போது மந்திரவாதிகள் பார்வோனை நோக்கி, நிச்சயமாக இது "தேவனுடைய விரல்" என்று கூறினார்கள். யாத்திராகமம் 8:16



# ஐந்தாவது அடையாளம்

இதற்கு அடுத்த அடையாமாக தேவன் வண்டுகளை அனுப்பினார். வண்டுகள் இங்கும் அங்கும் பறந்து எல்லாவற்றின் மீதும் ஊறிச்சென்றால் எவ்வளவு மோசமாக இருக்கும் என்று சற்று நீங்கள் எண்ணிப் பாருங்கள். நாம் சுற்றுலா செல்லும் சமயத்தில், வண்டுகள் அங்கு இருந்தால் நமக்கு எவ்வளவு எரிச்சலாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். உங்கள் உணவில் இருந்து அவற்றை விரட்ட நீங்கள் நினைப்பீர்கள். இரவு தூக்கத்தில் நம் தலை அருகே ரீங்காரமிட்டு, அவைகள் பறந்து கொண்டிருக்கும் போது நம்மால் தூங்கவும் முடியாது.

வண்டுகளை நிறுத்தும் படி பார்வோன் மோசேயை நோக்கிக் கூறினான். மேலும், தேவனின் ஜனங்களை விடுவிப்பதாகவும் பார்வோன் கூறினான். இதனால் வண்டுகளை தடுத்து நிறுத்தும்படி, தேவனை நோக்கி மோசே விண்ணப்பம் செய்தார். ஆனாலும் பார்வோன் மிகவும் கடின மனதாயிருத்தான் இருந்தான். வண்டுகள் தடுத்து நிறுத்தப்பட்டவுடன், பார்வோன் மோசேக்கு செவிசாய்க்கவில்லை. இதனால் இன்னொரு அடையாளத்தை செய்யும் மோசே தயாரானார். யாத்திராகமம் 8:21



# வித்தியாசமான சில நிகழ்வுகள்

இதுநாள் வரை எகிப்தின் மக்களும், எபிரேய மக்களும் இரத்தமாக மாறின தண்ணீர், தவளைகள் மற்றும் பேன்களோடு சேர்ந்தே வாழ்ந்தனர். ஆனால் வண்டுகளின் வாதையை அனுப்பும் போது, எகிப்தின் மக்கள் மற்றும் தம்முடைய மக்களான எபிரேயர்கள் இடையே வித்தியாசம் காட்டப்போவதாக தேவன் கூறினார். இனிமேல் வாதைகளோடு வாழவேண்டிய அவசியம் எபிரேயர்களுக்கு இல்லாமல் போயிற்று. இதன் பின் வரக்கூடிய வாதைகள், எகிப்தின் மக்கள் மற்றும் அவர்களின் பிராணிகள் மேல் மட்டும் வரும் படியாக தேவன் செய்தார்.

இதனால் எபிரேயர்கள் மற்றும் அவர்களின் பிராணிகளை வண்டுகள் தாக்கவில்லை. இன்னும் அதிகமான வாதைகள் அனுப்பப்பட்டன. அந்தகார வாதையை தேவன் அனுப்பினார். அவை எகிப்தியர்களின் மேல் மட்டும் வந்தது. கொப்பளங்கள் வாதையை அனுப்பினார். ஆலங்கட்டி மழை மற்றும் வெட்டுக்கிளி வாதைகளையும் அனுப்பினார். மோசேயின் மூலமாக எகிப்தின் மக்கள் மீது மொத்தமாக பத்து வாதைகளை தேவன் அனுப்பினார். யாத்திராகமம் 8:22-10:29.



# பத்தாவது வாதை

கடைசி வாதை மிகவும் மோசமாக இருந்தது. வீட்டில் இருக்கும் முதற்பேறான பிள்ளைகள் கொல்லப்படும் என்பதே அந்த வாதை ஆகும். இதிலிருந்து தப்பிக்க ஒரே வழி மட்டும் இருந்தது. ஒவ்வொரு குடும்பமும் சின்ன ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுத்து பலியிட்டு சாப்பிட வேண்டும். எந்த வீட்டின் கதவு நிலைகளில் இந்த இரத்தம் இருக்கிறதோ, அந்த வீடு வாதையிலிருந்து பாதுகாக்கப்படும்.

எல்லா எபிரேயர்களும் இதைச் செய்ததால் காப்பாற்றப்பட்டனர். எகிப்தின் மக்கள் இதனைப்பற்றி கவலைப்படவில்லை. இதனால் எகிப்தில் இருந்த பார்வோன் குடும்பத்திலும் மற்றும் ஒவ்வொரு குடும்பத்திலும் தலைச்சன் ஆண்பிள்ளை கொலை செய்யப்பட்டது. யாத்திராகமம் 11,12



# தேவனுடைய மக்கள் விடுதலை செய்யப்பட்டனர்!

பார்வோனின் தலைச்சன் ஆண்பிள்ளை இறந்த போது அவன் நடுராத்திரியில் மோசேக்குத் தூது அனுப்பினான். அவன் மோசேயை நோக்கி, உம்முடைய மக்கள் தங்களுடைய எல்லா பொருட்களையும் கட்டிக்கொண்டு கிளம்பலாம் என்றும் திரும்பவும் இங்கு வரவே கூடாது என்று கூறினான். எகிப்தில் அவர்கள் ஏறக்குறைய 200 வருடங்கள் வாழ்ந்தார்கள். தற்போதோ அவர்கள் அனைவரும் எகிப்தை விட்டு வெளியேறப் போகிறார்கள்!

இந்தச் செய்தி விரைவாகப் பரவியது. எபிரேய மக்கள் தங்களிடம் இருந்த அனைத்தையும் கட்டிக்கொண்டு, விலங்குகளோடு கிளம்பத் தயாரானார்கள். அவர்களின் எகிப்திய பக்கத்து வீட்டுக்காரர்கள் தங்கம், வெள்ளி, நகைகள், பட்டுத்துணிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை அவர்களுக்கு பரிசாகக் கொடுத்தனர்.

அந்த நாளின் விடியற் காலையிலே அவர்கள் பிரயாணத்தை தொடங்கினர். அவர்கள் எல்லோரும் அடுத்த நாள் ஓர் இடத்தில் கூடியதால் அனைவரும் ஒரேடியாக கிளம்ப ஏதுவாயிற்று. மறுநாள் இரவு அனைவரும் கிளம்பத் தயாரானார்கள். அக்கினி ஸ்தம்பம் மூலமாக தேவன் அவர்கள் முன்னே நடந்ததால், ஜனங்கள் அனைவரும் தாங்கள் அனைவரும் எங்கே செல்கிறோம் என்று பார்க்க முடிந்தது. பகல் நேரத்தில் அக்கினிஸ்தம்பம் மேகஸ்தம்பாக மாறும் போது, அவர்கள் அதனை கண்டு தொடர்ந்து சென்றார்கள். விரைவில் செங்கடலின் கரையை அடைந்தார்கள். இதற்குள்ளாக ஏழுநாள் பிரயாணம் செய்திருந்தார்கள். பார்வோன் இதை குறித்து யோசித்து, அவர்களைப் பின் தொடர முடிவு செய்தான். எகிப்தின் மீது அதிகப்படியான வாதைகள் வந்ததால் ஏற்பட்ட பிரச்சினையை நினைக்கும் போதெல்லாம், பார்வோன் கடுங்கோபம் கொண்டான். அதனால் தன்னுடைய இராணுவ வீரர்கள் எல்லோரையும் கூட்டிக் கொண்டு குதிரையின் மூலமாகப் பின் தொடர்ந்தான். சுற்றி வளைக்கப்பட்டதாக எபிரேயர்கள் எண்ணினர். அவர்கள் எங்கு செல்ல முடியும்? பார்வோனும் அவனுடைய சேனையும் அவர்களுக்கு பின்னாக உள்ளது. கடலோ அவர்களுக்கு முன்னதாக உள்ளது. யாத்திராகமம் 12:31-14:14



# செங்கடல்

ஆனால் தேவன் ஒரு அற்புதத்தைச் செய்தார். மோசே தன்னுடைய கோலை செங்கடலுக்கு எதிராக நீட்டினார். அப்போது கடல் இரண்டாகப் பிரிந்து, நடுவிலே வெட்டாந்தரை உருவானதால், ஜனங்கள் தப்பிக்க ஏதுவாய் அமைந்தது. இருபுறமும் தண்ணீர் சூழ்ந்துள்ள சமயத்தில் வெட்டாந்தரையில் நடந்து கடலைக் கடந்து சென்றனர். ஒரே சமயத்தில் அவர்களுக்கு பயமும், உற்சாகமும் உண்டானது! அக்கினி ஸ்தம்பம் அவர்களுக்கு பின்னாக வந்ததால், பார்வோனும் அவனுடைய படையும் அவர்களை நெருங்க முடியவில்லை. யாத்திராகமம் 14:15 – 31

கடலின் மறுமுனைக்கு ஜனங்கள் சென்ற உடன் அக்கனிஸ்தம்பம் விலகியது. இதனால் பார்வோனும் அவனுடைய குதிரை வீரர்களும் கடலின் வழியாக அவர்களைப் பின் தொடர்ந்து சென்றனர். மிக அதிக நேரம் கடலை தேவன் பிளக்கவில்லை. கடல் நீர் மீண்டும் சேரும்படி தேவன் செய்தார். கடல் நீரில் மூழ்கி பார்வோனும் அவனுடைய சேனையும், குதிரைகளும் மூழ்கியது. என்ன ஒரு அதிசயமாக அது இருந்திருக்க வேண்டும்!



# தேவனுடைய மக்கள் விடுவிக்கப்பட்டனர்!

எவ்வளவு பிரம்மிப்பாக அக்காரியம் இருந்திருக்கும் என்று நீங்கள் சற்று எண்ணிப்பாருங்கள். எப்படிப்பட்ட பெரிய மீட்பு அந்நாளில் மோசேயால் ஏற்படுத்தப்பட்டது. உண்மையில் தேவனே அதைச் செய்தார். மோசே தன் கோலை நீட்டும் போது தேவன் அதிசயம் செய்தார்.

இந்த அதிசயங்கள் எல்லாம் நடந்து முடிந்த பிறகு, ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேறிய ஆதாம் மற்றும் ஏவாளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் குறிப்பிட்ட பெரிய இரட்சகர் மோசே தான் என்று மக்கள் எண்ணியிருக்கக்கூடும். ஆதாம் மற்றும் ஏவாளின் ஒரு குமாரன் சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் என்று தேவன் முன்னமே கூறியிருந்ததை நினைவில் கொள்ள வேண்டும். ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் தண்டனையிலிருந்து அவர்கள் தப்பிக்கொள்ள முடியும் என்று தேவன் கூறியிருந்தார்.

ஆனால் மோசேயோ அந்த பெரிய இரட்சகர் இல்லை. பிரதான மிகப்பெரிய இரட்சகரை ஒரு நாள் தேவன் எழுப்புவார் என்று ஜனங்களிடம் மோசே கூறினார்.



# பத்து கட்டளைகள்

செங்கடலைத் தாண்டியவுடன், ஜனங்கள் அனைவரும் தேவனை துதித்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர். பார்வோனிடமிருந்தும் மற்றும் அடிமைத்தனத்திலிருந்தும் தேவன் தங்களை விடுவித்தார் என்பதில் அவர்களுக்கு சிறிதளவும் ஐயமில்லை. அவர்களுக்கு முன்பாக மேகஸ்தம்பம் சென்றதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த மேகஸ்தம்பத்தை தொடர்ந்து சென்றதால், தாங்கள் எங்கு செல்லவேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். இரவில் அது அக்கினிஸ்தம்பாக மாறியது. ஸ்தம்பத்திற்குள்ளாக தேவனுடைய தூதன் தங்கி வழிநடத்தினார். மோசே கொளுந்து விட்டு எரிந்த செடியை பார்த்த மலைக்கு தேவன் அவர்களை வழிநடத்தி சென்றார்!

மோசே மலையில் ஏறி, மக்கள் கடைப்பிடிக்க தேவன் தந்த பத்துக் கட்டளைகளை தேவனிடம் இருந்து பெற்றுக் கொண்டார். இவை அல்லாமல் இன்னும் அதிக கட்டளைகளை தேவன் அவர்களுக்கு கொடுத்தார். தம்மை ஜனங்கள் வணங்க மோசே ஒரு இடத்தைக் கட்ட வேண்டும் என்று தேவன் கூறினார். அந்த இடம் தேவனும், மனுஷனும் சந்திக்க கூடிய இடமாக இருந்ததால், அவற்றிற்கு ''ஆசாரிப்புக் கூடாரம்'' என்று பெயரிட்டார்கள். யாத்திராகமம் 15:1-17; 19, 20



# பொன் கன்றுக்குட்டி

இந்த அதிசயங்களை பார்த்தும் பார்வோனின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெற்றும், எபிரேயர்கள் தேவனை மறக்கமாட்டார்கள் என்று நாம் நினைக்கலாம். ஆனால் அப்படியில்லை. தேவனிடம் பேசி. பத்து கட்டளைகளை பெற மோசே சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக மலையிலே தங்கி இருந்தார். மோசேக்காக மக்கள் மிக அதிக நாளாக காத்திருந்ததால் மிகவும் சோர்வுற்றனர். மோசே இறந்துவிட்டார் என்றும், இனி திரும்ப வரமாட்டார் என்றும் எண்ணத் துவங்கினார்கள். அதனால் பொன்னால் ஆன கன்றுகுட்டியின் விக்கிரகத்தை செய்ய ஆரோனை ஜனங்கள் கேட்டுக்கொண்டனர்.

இந்த ஒரு செயலைத் தான் அவர்கள் செய்யக் கூடாது என்று தேவன் கருதியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு விக்கிரகத்தை தேவன் என்று எண்ணி துதிக்கவோ, ஆராதிக்கவோ கூடாது. இதன் மூலம் தேவனும், மோசேயும் கடுங்கோபம் கொண்டார்கள். இதைப்பார்த்த பின்னர் மோசே பத்து கட்டளைகளின் சாட்சிப் பலகைகளைத் தூக்கி எறிந்ததால், அவை உடைந்தது. **யாத்திராகமம் 20:23; 32:1-19**



# பத்து கட்டளைகள்

I

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

II

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்.

III

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக

IV

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.

V

உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

VI

கொலை செய்யாதிருப்பாயாக.

VII

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

VII

களவு செய்யாதிருப்பாயாக.

IX

பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக.

X

இச்சியாதிருப்பாயாக.

# தேவனின் மன்னிப்பு

பொன் கன்றுக்குட்டியை செய்து வணங்கியதால், தேவன் கோபப்பட்டு பிறகு மன்னித்தார். ஆனால் அது அழிக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக மக்கள் அனைவரும் ஒன்று கூடி தேவனிடம் மன்னிப்பு பெற ஒரு சிறப்பான இடத்தை கட்டினார்கள். இது "ஆசாரிப்பு கூடாரம்" (அல்லது) "சந்திக்கும் கூடாரம்" என்று அழைக்கப்பட்டது. அந்த இடத்தில் தான் தேவன் பலிகளையும், அவருடைய ஜனங்களின் துதி மற்றும் வணங்குதலையும் ஏற்றுக்கொண்டார்.

பகல் நேரத்தில் ஆசாரிப்புக் கூடாரத்தின் மேல் மேகஸ்தம்பம் நிற்கும். இரவில் ஆசாரிப்பு கூடாரத்தின் மேல் அக்கினிஸ்தம்பம் நிற்கும்.

மக்கள் அனைவரும் கூடாரங்களை அமைத்து வாழ்ந்தனர். அந்தக் கூடாரங்கள் எல்லாம் ஆசாரிப்பு கூடாரத்தை சுற்றி அமைக்கப்பட்டது. அவர்களின் கூடாரங்களுக்கு நடுவே ஆசரிப்புக் கூடாரம் இருந்தது. ஆரோன் முதல் பிரதான ஆசாரியனாக ஆனார். மோசே மற்றும் ஆரோன் மூலமாக தம் மக்களிடம் தேவன் பேசினார். தம்முடைய மக்கள் தேவனுக்காகக் கொண்டு வந்த விலங்குகளை ஆரோன் பலியிட்டார். நீங்கள் பார்த்து கொண்டிருக்கும் நெருப்பின் இடமாகிய பலிபீடத்தின் மேல் தகனபலியாகக் கொடுப்பார். யாத்திராகமம் 40:18-38



# எரிகோவின் மதில்கள்

பாலைவனத்தில் ஆசாரிப்பு கூடாரத்தைச் சுற்றி, ஜனங்கள் நாற்பது வருடங்கள் வாழ்ந்தனர். மேகஸ்தம்பம் எப்போது நகர்கிறதோ, அப்போதெல்லாம் ஜனங்கள் தங்கள் கூடாரங்களை கழற்றி அதனுடைனே செல்வார்கள். மேகஸ்தம்பம் எங்கு நிற்கிறதோ, அங்கு திரும்பவும் கூடாரங்களை அமைத்து வாழ்வார்கள்.

அவர்களுக்கு தேவையான உணவையும், தண்ணீரையும் தேவன் தந்தார். அவர்களுடைய துணியும், செருப்பும் தேயவுமில்லை, கிழியவுமில்லை.

40 வருடங்களுக்கு பிறகு, ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்குப் செல்லும் நேரம் வந்தது. இதனால் யோர்தான் நதியை அவர்கள் கடக்க வேண்டியிருந்தது. மீண்டும் யோர்தான் நதியை தேவன் இரண்டாக பிளந்ததால், அவர்கள் கடந்து சென்றனர். இதற்குள் மோசேயும், ஆரோனும் இறந்தார்கள். அவர்களுக்கு புதிய தலைவராக யோசுவா இருந்தார்.

அவர்கள் முதன் முதலாக எரிகோ என்ற இடத்தை கைப்பற்ற வேண்டியதாயிற்று. அந்த நகரத்தை சுற்றி ஒரு வாரம் நடந்தார்கள். இறுதி நாளில் எரிகோவின் மதில்கள் நொறுங்கி விழுந்ததால், எபிரேயர்கள் எரிகோவைக் கைப்பற்றினர். யோசுவா:1-6



# வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வாழ்தல்

இந்த அதிசயங்களுக்குப் பிறகு, ஆதாம் ஏவாளுக்கு சொல்லப்பட்ட பெரிய இரட்சகர் யோசுவா தான் என்று நிச்சயம் மக்கள் எண்ணியிருக்கக் கூடும். ஆனால் யோசுவா அந்த பெரிய இரட்சகர் இல்லை. யோசுவா என்றால் 'இரட்சகர்' என்று அர்த்தமாகும். ஆனால் ஆதாம் மற்றும் ஏவாளுக்கு சொல்லப்பட்ட பெரிய இரட்சகர் இன்னும் வரவேண்டியதாக இருந்தது.

ஜனங்களைக் கொண்டு யோசுவா நிறைய நகரங்களைப் பிடித்தார். இதனால் அவர்கள் தேசத்தில் தங்கி, விவசாயம் செய்து, தங்களுடைய உணவை பெருக்கிக் கொண்டார்கள். இதற்கு மேலாக தேவன் அவர்களுக்கு பாலைவனத்தில் உணவு தந்தது போல் செய்யவில்லை. ஏனெனில் தற்போது அவர்கள் தோட்டங்கள், விவசாய நிலங்களைப் பெற்றதால், தங்களுக்குத் தேவையான உணவை பயிரிட்டுக் கொண்டார்கள்.

ஆனால் தேசத்தில் தங்கியிருந்த மற்றவர்கள் விக்கிரகத்தையும், சிலையையும் வணங்கினர். எபிரேய மக்களையும் இதைப்போல செய்யத் தூண்டினர். அவர்கள் இனிமேல் எபிரேயர் என்று அழைக்கப்படாமல், இஸ்ரயேல் மக்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆபிரகாமின் பேரனும், ஈசாக்கின் மகனும் மற்றும் அவர்களின் முன்னோருமான யாக்கோபிற்கு இஸ்ரயேல் என்று மற்றொரு பெயரும் இருந்தது.

இஸ்ரயேல் மக்கள் தங்கள் தேசத்திற்கு நல்லபடியாக கொண்டு வந்து சேர்த்த மெய்யான தேவனை மறந்து பொய்யான கடவுள்களை வணங்கியதால், தேவன் கடுங்கோபம் கொண்டார். விழுந்த போன தூதர்கள் என்பவர்கள் ஜலப்பிரளயத்திற்கு முன்பு பூமியில் தள்ளப்பட்டு, மனுஷ குமாரத்திகளை மணந்து, இராட்சதர்களைப் பெற்றவர்கள் ஆவர். அவர்களது பிள்ளைகளாகிய இராட்சதர்கள் ஜலப்பிரளயத்தில் அழிக்கப்பட்டார்கள். ஆனால் பாவம் செய்த தூதர்கள் மேலும் மக்களை மோசம் போக்கிக் கொண்டு வந்தார்கள். தங்களை கடவுளாகக் காட்டிக் கொண்டு, ஜனங்கள் தங்கள் மீது நம்பிக்கை வைக்க அவர்களை ஒத்துக் கொள்ள வைத்தனர்.

இஸ்ரயேல் மக்கள் பொய்யான கடவுள்களை நம்ப ஆரம்பித்ததால், பல வழிகளில் அவர்களை தேவன் தண்டித்தார். சத்துருக்களின் படைகளை அனுப்பி இஸ்ரயேலர்களை தண்டிப்பது தேவனின் ஒரு முறையாக இருந்தது. அவர்கள் சத்துருக்களோடு மோதி, போரில் தோற்று அடிமைகளாக ஆக்கப்பட்டார்கள். இஸ்ரயேலர்களின் பயிறுகளையும், பிராணிகளையும் தங்களுக்கென எடுத்துக் கொண்டு, இஸ்ரயேல் மக்களை தங்களுக்காக வேலை செய்ய வற்புறுத்துவார்கள். இவை ஏற்பட்ட உடன், இஸ்ரயேல் மக்கள் உண்மையான தேவனை நோக்கி உதவி கேட்டு ஜெபம் செய்வார்கள்.

# கிதியோன்

இஸ்ரயேல் மக்கள் உண்மையான தேவனை நோக்கி விண்ணப்பம் செய்யும்போது, தேவன் அவர்களின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களுக்கு பதில் கூறுவார். அவர்களுக்கு ஒரு நியாயதிபதியை அனுப்பி தம் எதிரிகளிடம் இருந்து தேவன் காப்பாற்றுவார். அந்த நியாயதிபதிகளில் ஒருவர் தான் கிதியோன்.

கிதியோனிடம் தேவதூதன் தோன்றி, படைகளை தயார்படுத்திக் கொண்டு, மீதியானியர்களுக்கு எதிராக இரவில் செல்ல வேண்டும் என்றார். வெறும் 300 வீரர்களே அப்படையில் இருந்தனர்; அவர்களில் ஒவ்வொருவனும் தீவெட்டியை வைத்திருந்தான். தீவெட்டியின் நெருப்பை மறைக்க, மண்ணால் செய்யப்பட்ட பானை ஒன்றையும் எடுத்து சென்றார்கள். அந்த மண்பானையை உடைக்கும் பொழுது நெருப்பு மிக பிரகாசமாக எரியும். இதனால் மீதியானியர்கள் தூக்கத்தில் இருந்து எழும்பி, ஒருவரை ஒருவர் கொலை செய்தார்கள். கிதியோனும் அவருடைய படைகளும் மீதியானியர்களை துரத்திச் சென்று விரட்டியடித்தனர். இஸ்ரயேலர்கள் அவர்களிடமிருந்து விடுதலை ஆனார்கள். நியாயதிபதிகள் 6, 7



# சிம்சோன்

இந்த விடுதலைக்கு பிறகு, சர்ப்பத்தின் தலையை நசுக்கித் தங்களை மரணத்தில் இருந்து விடுதலை பெற்று தரும் ஸ்திரியின் வித்தாக கிதியோன் இருப்பார் என்று இஸ்ரயேலர்கள் நிச்சயமாக எண்ணியிருப்பார்கள். ஆனால் கிதியோன் இறந்தார். இதன் பின்பு இஸ்ரயேல் மக்கள் திரும்பவும் பொய்யான கடவுள்களை வணங்க ஆரம்பித்தார்கள்.

சிம்சோன் என்ற இன்னொரு இரட்சகனை தேவன் அனுப்பினார். இந்த சமயத்தில் தான் பெலிஸ்தியர்கள் இஸ்ரயேல் மக்களுக்கு எதிரியாக இருந்தனர். சிம்சோன் மிகவும் பலசாலியாய் இருந்தார். அவன் பிறக்கின்ற சமயத்தில், தேவதூதன் சிம்சோனின் பெற்றோர்களை நோக்கி அவர் வாழும் வரைக்கும் அவருடைய தலைமுடியை வெட்டாமல் இருந்தால், அவர் பலசாலியாக இருப்பார் என்றும் கூறினார்கள்.

ஆனால் சிம்சோனிற்கோ மிகவும் மோசமான ஒரு பெண் துணையாக இருந்தாள். ஏன் சிம்சோன் இவ்வளவு பலசாலியாக இருக்கிறார் என்று அவள் அறிய விருப்பப்பட்டாள். சிம்சோன் மீது அவளுக்கு உண்மையான அன்பு இல்லை. இஸ்ரயேலுக்கு உதவும் சிம்சோனை பெலிஸ்தியர்கள் பிடிக்க வேண்டும் என்று எண்ணினாள். அப்படி நடந்தால், இஸ்ரயேலர்களுக்கு சிம்சோன் உதவி செய்ய முடியாது என்றும் நினைத்தாள். தன்னிடம் உள்ள ஏழு ஜடைகளில் தான் பலம் இருக்கிறது என்ற இரகசியத்தை அவளுக்கு வெளிப்படுத்தினார். தன் முடிகள் வெட்டப்பட்டால், பலம் முழுவதும் போய் விடும் என்றும் கூறினார்.

இரவில் சிம்சோன் தூங்கின பிறகு முடியை வெட்டினாள். சிம்சோனைப் பிடிக்கப் பெலிஸ்தியர்களை தயாராக இருக்கும்படி கூறினாள்.




# சிம்சோன் பிடிக்கப்பட்டார்

*சிம்சோனை கைது செய்தவுடன், அவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். அவருடைய கண்கள் பிடுங்கப்பட்டு குருடாக்கப்பட்டார். தங்கள் தானியங்களை அரைக்கும் படி மிருக ஜீவன்களை போல அவர்கள் அவரை நடத்தினர். மீதமிருந்த நாட்கள் முழுவதும் அரவை எந்திரத்தை சக்கரம் கொண்டு இயக்கி வந்தார். பலசாலியாக, சுதந்திரமாக இருந்த சிம்சோன், இப்போது குருடனாக, பலவீனனாக, அடிமையாக இருப்பது மிகவும் கொடுமை.*

*ஒருநாள் பெலிஸ்தியர்கள் பெரிய விழாவைக் கொண்டாடினார்கள். அவர்கள் மிகவும் மது அருந்திவிட்டு, பொழுதுபோக்கிக் கொண்டிருந்தனர். சிம்சோனை வரவழைத்து கேலி செய்ய எண்ணினார்கள்.*

*இதன் பின்பு அவருடைய நீண்ட முடி மறுபடியும் வளர ஆரம்பித்தது. தம்முடைய எதிரி மற்றும் தம் மக்களின் எதிரிகளை வெற்றிக் கொள்ளும்படி, ஒரே ஒரு தரம் மட்டும் பலம் தரும்படி தேவனை நோக்கி விண்ணப்பம் செய்தார். தூண்களுக்கு மத்தியில் அவரை வழிநடத்தி செல்லும்படி சிம்சோன் கேட்டுக் கொண்டார். சிறுவன் ஒருவன் சிம்சோன் சொன்னப்படியே செய்தான்.*

*தன்னுடைய பலத்தை கடைசியாக உபயோகப்படுத்தி, தூண்களை எல்லாம் தகர்த்து, பெலிஸ்தியர்கள் எல்லோரையும் கொன்று, தானும் இறந்தார். பெலிஸ்தியர்களிடமிருந்து இஸ்ரயேல் மக்களை சிம்சோன் காப்பாற்றினார்.*



# தாவீது

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் 450 வருடங்கள் வாழ்ந்த பிறகு, மற்ற தேசங்களைப் போல தங்களுக்கும் ஒரு இராஜா வேண்டும் என்று இஸ்ரயேல் மக்கள் முடிவு செய்தனர். அந்த சமயம் வரை நியாயதிபதிகளே இருந்தனர். இராஜா இருக்கவில்லை. தேசம் முழுவதும் பிரயாணம் செய்து இஸ்ரயேல் மக்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் தேவனுக்கேற்றபடி எப்படி வாழவேண்டும் என்றும் நியாயதிபதிகள் அவர்களுக்குக் கற்பித்தனர்.

தங்களுக்கு இராஜா வேண்டும் என்று அவர்கள் விண்ணப்பம் செய்ததில், தேவன் விரும்பவில்லை. தேவனே இராஜாவாக இருக்கிறார். ஆனாலும் நியாயாதிபதியாகிய சாமுவேல் ஒரு இராஜாவைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று தேவன் அவனிடம் கூறினார்.

பிரதிஷ்டை செய்வது என்றால், தேவன் தேர்ந்தெடுத்த ஒரு மனிதனின் தலையில் எண்ணெய் ஊற்றுவது மூலம் தேவன் அந்த மனிதனை இராஜாவாக தெரிந்து கொண்டதைக் குறிக்கிறது. சவுல் என்ற வாலிபனை சாமுவேல் கண்டு, அவன் தலையில் எண்ணெய் ஊற்றி, இராஜாவாகத் தேர்ந்தெடுத்தார். ஆனால், சவுலோ பொல்லாத இராஜாவாக மாறினதால், அவனை நீக்க வேண்டும் என்று தேவன் முடிவு செய்தார்.

அதனால் சவுலிற்குப் பதிலாக இன்னொரு இராஜாவை தேர்ந்தெடுக்க தேவன் சாமுவேலை அனுப்பினார். ஆடு மேய்ப்பவனாகிய தாவீதை அவர் கண்டார். தாவீது மிகுந்த பலசாலி மற்றும் தைரியமான ஒரு இளைஞனாய் இருந்தார். அவர் தனது ஆடுகளை பாதுகாக்க ஒரு சிங்கத்தோடும் ஒரு கரடியோடும் போராடினார்.

இஸ்ரயேல் படைகள் அவர்கள் எதிரியான பெலிஸ்தியர்களிடத்தில் போர் செய்யும்போது, தாவீது ஒரு நாள் அதை காணச் சென்றார். அவைகளை பார்த்தவுடன் தாவீது மிகவும் பிரமித்து போனார். பெலிஸ்தியர் படையில் மிகப் பெரிய இராட்சத போர் வீரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் கோலியாத். அவன் இஸ்ரயேல் படைகளுக்கு முன்பாக நின்று, இஸ்ரயேல் படைகளையும் தேவனையும் இகழ்ந்து பேசினான். தன்னிடம் சண்டை போட தயாராகும் யாரையும் கொல்லுவேன் என்று கூறினான்.

தாவீது மிகவும் அதிர்ச்சியடைந்தார். உண்மையான தேவனை கோலியாத் இகழ்ந்துப் பேசுவதைக் தாவீதால் ஏற்றுகொள்ள முடியவில்லை. தானே முன் சென்று, கோலியாத்திடம் சண்டை போடுவதாக கூறினார். தாவீது முட்டாள் தனமாக செய்கிறார் என்று எல்லோரும் நினைத்தார்கள். தாவீது சிறிய வாலிபனாக இருந்தாரே தவிர, பயிற்சிப் பெற்ற போர் வீரனாக இல்லை. அவரிடம் எந்த ஆயுதமும் இல்லை. அவரிடம் வாள், கவசம் மற்றும் வேறு ஆயுதங்கள் எதுவும் இல்லை.

ஆனால் தாவீதோ மிகவும் திடமாக இருந்தார். ஒரு மேய்ப்பவனாக தன்னுடைய ஆடுகளை எப்படி காப்பாற்ற முடியும் என்று அவருக்குத் தெரியும். தன்னால் சிங்கம் மற்றும் கரடியுடன் தனியாக சண்டையிட முடியும் என்று நன்றாகவே அறிந்திருந்தார். 1 சாமுவேல் 8 -17; அப்போஸ்தலர் 13-20

சவுலைப் பார்க்க தாவீது சென்றார். சவுலே இன்னும் இராஜாவாக இருந்தான். தனக்கு பதிலாக தேவன் தாவீதை தேர்ந்தெடுத்து உள்ளார் என்று சவுலிற்குத் தெரியாது. கோலியாத்திடம் சண்டை போட தாவீதுக்குத் தன்னுடைய கவசத்தையும், வாளையும் சவுல் கொடுத்தான். ஆனால் தாவீதுக்கோ அவற்றை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று தெரியாது. தன்னுடைய ஆடுகளை காப்பாற்ற அவர் கவண் கல்லை உபயோகப்படுத்துவது வழக்கம். இதனால் கோலியாத்தை எதிர்த்து போரிட வாளும், கவசமும் தனக்கு தேவை இல்லை என்று சவுலையும், மற்ற போர் வீரர்களையும் பார்த்துச் சொன்னார். உண்மையான தேவனுடைய வல்லமை, ஞானம் மற்றும் கவண்கல்லை வைத்து கோலியாத்திடம் சண்டை போடுவதாக கூறினார்.

கையில் வாளும், கவசமும் இல்லாமல் தாவீது தன்னிடம் சண்டையிட வருவதைப் பார்த்து, கோலியாத் கேலியாக சிரித்தான். தன்னுடைய தலையை பின்பக்கமாக சாய்த்து கோலியாத் தாவீதை பார்த்து சிரித்தான். கோலியாத் பின் பக்கமாக சாய்ந்த பொழுது அவன் நெற்றி தெரிந்தது. தாவீது கவண்கல்லை எடுத்து, கோலியாத்தின் நெற்றியில் வேகமாக அடித்ததால், கீழே சரிந்தான். கீழே விழுந்தவுடன், கோலியாத்தின் வாளை எடுத்து தாவீது அவன் தலையை வெட்டினார். பெலிஸ்திய போர்வீரர்கள் இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்து பயந்து ஓடினார்கள். இஸ்ரயேல் படைகள் அவர்களை துரத்திச் சென்றதால், சில காலமாக இஸ்ரயேலர்களுக்கு விரோதமாக பெலிஸ்தியர்கள் போர் செய்ய வரவில்லை.
*சாமுவேல் 17*



# தேவாலயத்தைக் கட்டுதல்

இந்த பெரிய விடுதலைக்குப் பிறகு, தாவீது இஸ்ரயேல் தேசத்திற்கு இராஜாவாகி, 40 வருடங்கள் அரசாண்டார். தன்னுடைய வாழ்நாள் முடிவதற்குள், உண்மையான தேவனை வணங்க ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்பினார். பாலைவனத்தில் கட்டப்பட்ட ஆசாரிப்பு கூடாரம் உங்களுக்கு ஞாபகம் வருகிறதா? இன்னும் அது அவர்களிடம் இருந்தது. அது பல நூற்றாண்டு காலம் பழமையானதாக விளங்கியது! அதற்கு பதிலாக ஒரு அழகான ஆலயம் கட்ட வேண்டும் என்று தாவீது விருப்பப்பட்டார்.

இந்த காரியம் செய்ய தாவீது நினைத்ததை குறித்து தேவன் மிகவும் மகிழ்ந்தார், ஆனால் பல போர்களில் சண்டை செய்த இராஜாவாய் தாவீது இருந்தார். அதனால் போரில் பல பேரை கொன்றதால், ஆலயம் கட்டவேண்டாம் என்று தேவன் அவரிடம் கூறினார். இதனால் தாவீதின் மகன் தனக்காக ஆலயம் கட்டுவார் என்றும் தேவன் தாவீதிடம் கூறினார். தாவீது இராஜா இறந்த பின்பு, சாலமோன் இஸ்ரயேல் தேசம் மீது இராஜாவாகி, இஸ்ரயேலின் தலைநகரமான எருசலேமில் பெரிய அதிசயக்கத்தக்க ஆலயத்தைக் கட்டினார். 1 இராஜாக்கள் 5



# சாலமோன் இராஜா

தாவீதின் மகனாகிய சாலமோன் இஸ்ரயேல் தேசத்தின் மீது இராஜாவாக ஆனவுடன், சிறப்பான ஒரு சொப்பனம் கண்டார். சொப்பனத்தில் தேவன் அவரிடம் வந்து, தான் அவனுக்கு என்ன கொடுக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டார். சாலமோன் இராஜா செல்வந்தராகவும் மற்றும் வல்லமை பெற்றவராகவும் இருக்க தேவனிடம் கேட்கவில்லை. தான் ஒரு நல்ல இராஜாவாக இருக்க தனக்கு ஞானம் வேண்டும் என்று கேட்டார். அவருடைய விண்ணப்பத்தைக் கேட்டு தேவன் மகிழ்ந்து, இஸ்ரயேல் தேசத்தில் இதுவரை இல்லாத மிக ஞானமிக்க இராஜாவாக அவரை ஆக்கினார். *1 இராஜாக்கள் 3 : 5-28*

ஒரு நாள் இரண்டு தாய்கள் சாலமோனிடம் ஒரு கேள்வி கேட்க வந்தார்கள். அந்த இரண்டு தாய்களும் ஒரே இடத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இரண்டு பேருக்கும் குழந்தைகள் இருந்தன. ஒருநாள் பகல் வேளையில் அந்த தாய்களில் ஒருத்தி எழுந்து, தன்னுடைய பிள்ளை இராத்திரியில் இறந்து போனதை அறிந்தாள். இதனால் இறந்து போன தன் குழந்தையை இன்னொரு தாயின் கரத்தில் வைத்துவிட்டு, அந்த உயிருள்ள குழந்தையை எடுத்துக்கொண்டாள்.



இன்னொரு தாய் விழித்தெழுந்து பார்க்கையில், தம் கையில் இருக்கும் இறந்த போன குழந்தை தன்னுடைய குழந்தை அல்ல என்று அறிந்தாள். உயிரோடிருக்கும் பிள்ளை அவளுடையது. ஆனால் முதல் தாயோ, உயிரோடிருக்கும் பிள்ளை தன்னுடைய பிள்ளை என்று கூறினாள்.

இதனால் இரண்டு தாய்களும் சாலமோனிடம் சென்று, யார் உண்மையான தாய் என்பதை அறிய முற்பட்டார்கள். அப்போது சாலமோன் தன்னுடைய வேலையாட்களை வாள் ஒன்றை கொண்டு வரும்படி கூறி, உயிரோடிருக்கும் பிள்ளையை இரண்டாக வெட்டி, இரண்டு தாய்களுக்கும் ஒவ்வொரு பாதியை கொடுக்கும்படி கூறினார். இதனால் அந்த பிள்ளையின் தாய் குழந்தையை வெட்ட வேண்டாம் என்றும் மற்றொரு தாயிடமே அக்குழந்தையை உயிரோடு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாள். இதனால் உண்மையை அறிந்த சாலமோன் உயிரோடிருக்கும் பிள்ளையை உண்மையான தாயிடம் ஒப்படைத்தார்.

அவருடைய ஞானம் பற்றிய செய்திகள் உலகம் முழுவதும் பரவின. பெரிய செல்வந்தராகவும் சாலமோன் ஆனார். வேற்று தேசத்தின் இராஜாக்களும், ராணிகளும் அவரை சந்திக்க வந்து, மிகவும் கடினமான கேள்விகளைக் கேட்டு, பதிலையும் பெற்று, அவருக்கு நிறையப் பரிசுப் பொருட்களைக் கொண்டு வந்தனர்.

இதனால் ஆதாம், ஏவாள், ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு மற்றும் மோசேக்கு, தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பெரிய இரட்சகர் சாலமோன் தான் என்று இஸ்ரயேல் மக்கள் நிச்சயமாக நினைத்திருப்பார்கள்.

ஆனால் சில காலத்திற்கு பிறகு, சாலமோன் வழி விலகிப் போனார். உண்மையான தேவனுக்கு ஆலயம் கட்டின சாலமோன், பொய்யான கடவுள்களுக்கு நிறைய ஆலயம் கட்டினார். உண்மையான தேவனை வணங்காமல் பொய்யான கடவுள்களை வணங்கும் பல பெண்களை சாலமோன் திருமணம் செய்தார். இதனால் தங்கள் கடவுள்களை தாங்களும் எருசலேமில் வணங்கும்படி அவரை ஏதுவாக்கினார்கள்.

சாலமோனிடம் இருந்து தேவன் விலகினார். இதனால் அவர் தன்னுடைய பெரிய ஞானத்தை இழந்தார். ஆபிரகாமின் வித்தாகிய பெரிய இரட்சகர் வரும் வரைக்கும் இஸ்ரயேல் ஜனங்கள் காத்திருக்க வேண்டும்.

இதன்பின் பல இராஜாக்கள் இஸ்ரேல் தேசத்தில் வந்தார்கள், இறந்தார்கள். சில இராஜாக்கள் நல்லவர்களாக, உண்மையான தேவனை விசுவாசித்து வணங்கி வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பாவம் செய்த இராஜாக்களாக சிலைகளையும், விக்கிரகத்தையும் பொய்யான விழுந்து போன தூதர்களையும் கடவுளாக வணங்கினார்கள்.

இஸ்ரயேல் மக்களின் கிளர்ச்சியின் நிமித்தம் வரக்கூடிய தண்டனைகளை, தேவன் தீர்க்கத் தரிசிகளைக் கொண்டு முன்னமே எச்சரித்தார்.

இஸ்ரயேல் தேசத்தில் 513 வருடங்கள் இராஜாக்கள் அரசாண்டனர். பின்பு தேவன் எருசலேமையும், பெரிய ஆலயத்தையும் அழிக்க அனுமதி கொடுத்தார். அனைத்து இஸ்ரயேல் மக்களும் அடிமைகளாக, பாபிலோன் மற்றும் அசீரியா தேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அது மிகப் பெரிய அசம்பாவிதமாக அமைந்தது.

# எலியாவும் எலிசாவும்

தம்முடைய மக்களை எச்சரிப்பதற்காக, தேவன் உபயோகப்படுத்திய தீர்க்கதரிசிகளில் ஒருவர் தான் எலியா. உண்மையான தேவனின் மிகுந்த விசுவாசமிக்க ஊழியக்காரனாக எலியா விளங்கினார். பொய்யான கடவுள்களை வணங்கக் கூடாது என்று இஸ்ரயேலின் மிக மோசமான இராஜாவாக இருந்த ஆகாபை எச்சரிப்பதற்காக தேவன் எலியாவை அனுப்பினார். ஆனால் ஆகாப் அவருக்கு செவி சாய்க்கவில்லை.

எலியாவின் மரணத்தை வழக்கத்திற்கு மாறாக நடத்த வேண்டும் என்று தேவன் முடிவு செய்தார். அவருடைய நண்பனாகிய எலிசாவிடம் சேர்ந்து, யோர்தான் நதியின் அக்கரைக்கு எலியா வந்தார். அந்த நாளிலே எலியா எடுத்துக் கொள்ளப்படுவார் என்பது எலிசாவிற்கு முன்னமே தெரியும். அவர்கள் இரண்டு பேரும் நடந்துச் செல்லும் போது, எலியாவின் அங்கி தனக்கு தேவை என்று எலிசா கேட்டார். எலியா அவருக்கு பிரதியுத்திரமாக தான் எடுத்துக் கொள்ளப்படுவதை எலிசா பார்த்தால் தன்னுடைய அங்கியை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறினார். யோர்தான் நதியின் கரைக்கு வந்தபோது, அந்நதியை அவர்களால் கடக்க முடியவில்லை. எலியா தன்னுடைய அங்கியை நதியின் மீது ஓங்கி அடித்தார். மோசே செங்கடலை பிளந்தது போல், யோர்தான் நதியும் இரண்டாகப் பிளந்தது!



எலியாவும், எலிசாவும் நதியைக் கடந்து சென்றனர். இரண்டு பேரும் நடந்து கொண்டிருக்கும் சமயத்தில், ஒரு பெரிய அக்கினி இரதம் வானத்தில் இருந்து இறங்கி, அவர்கள் இரண்டு பேரையும் பிரித்தது. எலியா அவருடைய அங்கியை கீழே போட்டதால், எலிசா அதை பிடித்துக்கொண்டார். எலியா காற்றோடு எடுத்துக் கொள்ளப்பட்டார். எலிசாவிற்கு என்ன ஒரு அதிர்ச்சி! தற்போது எலிசா தனியாக இருந்தார். யோர்தான் நதிக்கு திரும்பிச் சென்றவுடன், எலிசா அந்த அங்கியை எடுத்து, யோர்தான் நதியை மறுபடியும் ஓங்கி அடித்ததால், நதி திரும்பவும் இரண்டாம் தரம் இரண்டாக பிளந்தது! ஆனால் தற்போதோ எலிசா மட்டும் தனியாக நடந்து சென்றார். அந்த நாள் முதல், தேவனின் உண்மையான தீர்க்கதரிசிகளில் ஒருவராக எலிசா எண்ணப்பட்டார். 2 இராஜாக்கள் 2 :1-15

# யோனா

தேவனின் தீர்க்கதரிசிகளில் ஒருவர் அவிசுவாசியாக இருந்தார். அவர் பெயர் யோனா. மக்கள் தங்கள் பாவத்தை நிறுத்த வேண்டும், இல்லையென்றால் நகரம் அழிக்கப்படும் என்று நினிவேயின் ஜனங்களிடம் சொல்ல தேவன் யோனாவை அனுப்பினார். யோனா அதை செய்ய விரும்பவில்லை. அதனால் எதிர் திசையில் ஓடிச் சென்றார்! தேவன் செய்யச் சொன்னதில் இருந்து தப்பிக்க கப்பலில் ஏறி தப்பிச் சென்றார். தனக்கு பதிலாக தேவன் இன்னொருவனை அனுப்பலாம் என்று அவர் எண்ணியிருக்கலாம். ஆனால் தேவனிடமிருந்து விலகிச் செல்வது ஏற்புடையதல்ல. தேவன் பெரிய சூறைக் காற்றை அனுப்பியதால், கப்பலில் இருந்த அனைவரும் பயந்தார்கள். தேவன் தனக்கு தந்த தண்டனை இது என்று அவர்களைப் பார்த்து யோனா சொன்னதால், கடலில் பிரயாணம் செய்தவர்கள் அவரை கடலில் தூக்கி எறிய முடிவு செய்தார்கள். யோனாவை கடலில் தூக்கி அவர்கள் போட்டவுடன், சூறைக் காற்று நின்றது.

யோனா நீரில் மூழ்காமல் இருக்க, அவனை விழுங்கத்தக்கதாக ஒரு பெரிய மீனை தேவன் அனுப்பினார். அந்த பெரிய மீனின் வயிற்றுக்குள், மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகள் யோனா இருந்தார். மீனின் வயிற்றுக்குள் இருந்த அந்த காலம் மிக மிக நீண்ட காலம் அல்லவா! ஆனால் யோனா பாடம் கற்றுக் கொண்டார் என்று அறிந்தவுடன், யோனாவை மீன் கக்கும்படி தேவன் செய்தார். இதன்பின் நினிவேயிற்கு செல்ல யோனா தயாரானார்.

யோனா நினிவேயிற்கு சென்று, அங்குள்ள இராஜாவைப் பார்த்து, தங்களுடைய பாவ வழிகளை மக்கள் நிறுத்தாவிட்டால், நினிவே முழுவதையும் தேவன் அழிப்பார் என்று எச்சரித்தார். இதற்கு செவி சாய்த்த நினிவேயின் இராஜா, மக்கள் அனைவரும் தேவனிடம் பாவ மன்னிப்பு கேட்டு மனம் மாற வேண்டும் என்று கூறினார். பாவ மன்னிப்பு கேட்டு மனம் மாற வேண்டும் என்றால் தேவன் செய்யச் சொல்லாத பொல்லாத காரியங்களை செய்யாமல் இருப்பதே ஆகும். முழு நகர மக்களும் தங்கள் வழிகளை மாற்றிக் கொண்டனர். இதனால் அனைவரும் காப்பாற்றப்பட்டார்கள்!



# சாத்ராக், மேஷாக் & ஆபேத்நேகோ

எருசலேமில் இருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தள்ளி உள்ள பாபிலோன் தேசத்தில் நமது அடுத்த கதை தொடர்கிறது.

தேவனுடைய மக்கள் பொய்யான கடவுள்கள் மீது நம்பிக்கை வைத்ததால், அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். தேவாலயமும் அழிக்கப்பட்டது, அனைத்து மக்களும் கைதிகளாக பாபிலோனிற்கு சிறைப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள். இந்த பிரயாணம் அவர்களுக்கு மிகவும் மோசமான, நீண்ட தூரப் பயணமாக அமைந்தது.

இவர்களுள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று மூன்று பேர்கள் இருந்தனர். பாபிலோனிற்கு கொண்டு செல்லும் போது, அவர்கள் இளம் வயதினராக இருந்தனர். இவர்களை படிக்க வைத்து, முக்கிய வேலைகளில் அமர வைக்க வேண்டும் என்று நேபுகாத்நேச்சார் இராஜா விரும்பினான். இதனால் தன்னுடைய அரசாங்கத்தில் அவர்களை பெரிய அதிகாரிகளாக ஆக்க எண்ணியிருந்தான்.

ஒரு நாள் நேபுகாத்நேச்சார் இராஜா மிக பெரிய, உயரமான பொன் சிலையை செய்து பெரிய சதுர மேடையில் வைத்தான். அவனுடைய அரசாங்கத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளும் அச்சிலையை வணங்க வேண்டும் என்றான். ஆனால் மூன்று எபிரேயர்களான சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ அச்சிலையை வணங்க மறுத்து விட்டனர். உண்மையான தேவனை மட்டும் வணங்க வேண்டும். வேறு எந்த தெய்வத்தையும் மற்றும் சிலையையும் வணங்க கூடாது என்று நியாயப் பிரமாணம் அவர்களுக்கு வலியுறுத்தி சொல்லியுள்ளது.



இதனால் அவர்கள் மீது நேபுகாத்நேச்சார் கடுங்கோபம் கொண்டான். இராஜாவிற்கு முன்பாக அவர்கள் நிறுத்தப்பட்டு, இன்னொரு வாய்ப்பும் கொடுக்கப்பட்டது. இசை கேட்கும்போது, மூன்று பேரும் மண்டியிட்டு, தன்னை சுட்டிக்காட்டும் பெரிய பொன் சிலையை வணங்க வேண்டும் என்று இராஜா கூறினான். தானியேல் 3

# பயமுறுத்தும் அக்கினிசூளை

இசை கேட்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் அச்சிலையை வணங்கவில்லை.

இதனால் எரிகிற அக்கினி சூளையில் அவர்கள் தூக்கிப் போடபடுவார்கள் என்று இராஜா எச்சரித்தான். அதற்கு அவர்கள் பிரதியுத்திரமாக "எங்கள் தேவன் நெருப்பிலிருந்து எங்களை காக்க வல்லவராயிருக்கிறார் என்று எங்களுக்கு தெரியும். எமது தேவன் காப்பாற்றாமற் போனாலும் சிலையை வணங்க மாட்டோம்" என்றார்கள்.

இந்த வார்த்தைகள் நேபுகாத்நேச்சாரை மிகவும் கோபப்படுத்தியது. அக்கினி சூளையை மேலும் ஏழு மடங்கு சூடாக்க இராஜா உத்தீரவிட்டான். வேலையாட்கள் அந்த மூவரையும் கட்டி, அக்கினி சூளையில் தூக்கிப் போட்டனர். அக்கினி சூளை மிகவும் அதிகமாக எரிந்ததால், வேலையாட்கள் அந்த சூட்டினால் இறந்து போனார்கள். ஆனால் மூன்று பேரும் இறக்கவில்லை. அவர்களோடு நான்காவது நபர் இருப்பதை கண்ட இராஜா, அவர்கள் இங்கும் அங்குமாக உலாவுவதையும் கண்டான். அந்த நான்காவது நபர் தேவகுமாரனின் சாயலில் இருந்தார்.

இராஜா மிகவும் வியப்படைந்தான். அவர்களை சூளையில் இருந்து வெளியில் கொண்டு வந்த இராஜா, இனி அனைவரும் எபிரேயர்களின் உண்மையான தேவனை மட்டும் வணங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தான்!



# தானியேல்

நமது அடுத்த கதை மேதிய - பெர்சியா தேசத்தில் ஆரம்பிக்கிறது. இந்த மூன்று எபிரேயர்களைத் தவிர நிறைய பேர் கைதிகளாக இருந்தனர். இவர்களில் ஒருவர் தான் தானியேல் என்பவர். அவர் அடிமையாகப் பிடிக்கப்பட்ட சமயத்தில் சிறிய வயது உடையவனாக இருந்தார். தரியு இராஜாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஊழியக்காரனாக விளங்கியதால், மேதிய - பெர்சியா அரசாங்கத்தில் முக்கிய வேலையில் தானியேல் அமர்த்தப்பட்டார். ஆனால் தானியேல் மீது பொறாமை கொண்டு, அவரை கொலை செய்ய நிறைய பேர் வஞ்சகமாக அலைந்தார்கள். தானியேல் மிகவும் நேர்மையாகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருந்ததால், அவர்களால் அவர் மீது எந்த தவறான காரியத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனால் தரியு இராஜா தானியேலை கண்டிக்க வேண்டும் என்று சூழ்ச்சி செய்தார்கள். இதனால் தரியு இராஜாவை தவிர வேறு யாரையும் வணங்க கூடாது, அப்படி செய்தால் அவர்கள் சிங்கத்திற்கு இரையாக்கப்படுவார்கள் என்று இராஜா ஆணையிட ஒத்துக் கொள்ள வைத்தார்கள். ஆனபோதும் தானியேல் உண்மையான தேவனை மட்டும் வணங்கி, எல்லோரும் பார்க்கும் வண்ணம் விடாமல் தொடர்ந்து ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார். இதனால் தானியேல் கைது செய்யப்பட்டு, இராஜா முன்னதாக நிறுத்தப்பட்டார். இதன்பின்னர் இவையெல்லாம் சூழ்ச்சி என்று இராஜா அறிந்தான். ஆணையை மதிக்காததால், தானியேலை சிங்க கெபியில் போட இராஜா உத்தரவிட்டான். ஆனால் தானியேலை அதிகமாக விரும்பிய, தரியு இராஜாவிற்கு இந்த நாள் மோசமாக நாளாக அமைந்தது.



# சிங்கக் கெபி

*அந்த நாளும் வந்தது. தானியேல் சிங்கங்களின் கெபிக்குள் தள்ளப்பட்டார். அந்த சிங்கங்களுக்கு உணவு எதுவும் தராததால், அவையெல்லம் மிக அதீக பசியில் இருந்தது. ஆனாலும் இரவு முழுவதும் சிங்கங்கள் தானியேலை ஒன்றும் செய்யவில்லை.*

*இராஜா பகல் வேளையில் சிங்கக் கெபிக்கு சென்று, தானியேல் உயிரோடு இருக்கிறாரா என்பதை அறிய அவரை கூப்பிட்டான். தானியேல் அவனுக்கு பிரதியுத்தீரமாக தேவன் சிங்கத்தின் வாயை கட்டிப் போட்டதால், அவை என்னை ஒன்றும் செய்யவில்லை. தேவன் என்னை காப்பாற்றினார் என்று கூறினார். இராஜா மிகவும் சந்தோஷப்பட்டான்! சூழ்ச்சி செய்த அதிகாரிகளின் மேல் இராஜா கடுங்கோபம் கொண்டான். அதனால் அவர்களை எல்லோரும் கெபியிலே போட்டார்கள். சிங்கங்கள் அனைவரையும் தின்றது. அது ஒரு பெரிய அதிசயம்!*



# எருசலேமிற்கு திரும்புதல்


*மேதிய – பெர்சியா இராஜாவான கோரேஸ் பாபிலோனை கைப்பற்றிய போது, எபிரேய கைதிகள் அனைவரையும் விடுதலை செய்தான். என்ன ஒரு அதிசயமான விடுதலை! பாபிலோனில் அவர்கள் 70 வருடங்கள் வாழ்ந்தனர். ஆனால் இப்பொழுது எருசலேமிற்குத் திரும்பி செல்ல அனுமதிக்கப்பட்டனர்.*

*எருசலேமிற்குத் திரும்பியவர்களுள் முதன்மையானவர் செருபாபேல் ஆவார். நேபுகாத்நேச்சாரின் வீரர்களால் அழிக்கப்பட்ட தேவலாயத்தை, செருபாபேல் எருசலேமிலே கட்டத் துவங்கினார்.*

*மேலும் எருசலேமிற்கு இரண்டு பேர் திரும்பி வந்தார்கள். அவர்கள் எஸ்றா மற்றும் நெகேமியா ஆவார்கள். ஆசாரியனாக இருந்த எஸ்றா, மோசே மூலமாக தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்தை இஸ்ரயேல் மக்களுக்கு மீண்டும் கற்பித்து வந்தார்.*

*அர்த்தசாஷ்டா இராஜாவின் அரசாங்கத்தில் அதிகாரியாக நெகேமியா வேலை செய்தார். அர்த்தசாஷ்டா இராஜாவிற்கு நெருக்கமான நண்பனாக நெகேமியா விளங்கினார். அதனால் எருசலேமைச் சுற்றி மதில் சுவர் அமைக்க நெகேமியாவை இராஜா நியமித்தான்.*

*தேவாலயமும், மதில் சுவரும் கட்டின பின்பு, எருசலேம் ஒரு பெரிய நகரமாக மீண்டும் உருவானது. எபிரேய மக்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் தற்போது யூதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். தங்களுக்கென மீண்டும் ஒரு தேசத்தைத் உருவாக்கினார்கள். புறஜாதி மக்களிடம் அடிமைகளாக இருந்தபோது, மிகக் கடுமையான பாடங்களைக் கற்றுக் கொண்டனர்.*



*இதன் பின்னர் அவர்கள் பொய்யான தெய்வங்களையோ, சிலையையோ வணங்கவில்லை. தங்களுக்கு தேசம் திரும்பி கிடைக்கப் பெற்றதற்கு நன்றி தெரிவித்து, உண்மையான தேவனை புது தேவாலயத்தில் வணங்க ஆரம்பித்தனர்.*

*எஸ்றா 1*

# பழைய ஏற்பாடு

நாம் இதற்கு முன்னர் படித்தவைகளை எல்லாம் தற்போது திரும்பவும் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம். பழைய ஏற்பாடு காலத்தில் நடந்த சம்பவங்களை பற்றி நாம் நிறைய பேசினோம். உலகத்தின் தோற்றம் காலம் முதல் இஸ்ரயேலில் உள்ள எருசலேமிற்கு யூதர்கள் திரும்பி வரும் வரைக்கும் பழைய ஏற்பாடு கூறுகிறது.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் வாழ்ந்த சமயத்தில் இருந்து பூமியில் முதலாம் யுகம் தொடங்குகிறது. அந்த யுகம் தேவன் ஏற்படுத்திய ஜலப்பிரளயத்தோடு முடிகிறது. பூமி அழிக்கப்படவில்லை மாறாக பூமியில் இருந்த அனைத்தும் முற்றிலுமாக மாறியது. வேதாகமம் இதனை அப்போதிருந்த உலகம் என்று கூறுகிறது. 2 பேதுரு 3 :6

நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் பேழையில் இருந்து வெளியே வந்து, ஜலப்பிரளயத்திற்குப் பிறகு புது வாழ்வை வாழத் தொடங்கினர். இதிலிருந்து இரண்டாம் உலகம் ஆரம்பிக்கின்றது. நாம் இன்னும் இப்பூமியில் இரண்டாம் உலகத்திலேயே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். வேதகாமம் இந்த உலகத்தை "இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகம்" என்று கூறுகிறது. கலாத்தியர் 1:4

பூமியில் உள்ள சில முக்கியமான தனிப்பட்ட நபர்களிடம் தேவன் பிரியமாக இருந்ததிலிருந்து ஒரு புது யுகம் ஆரம்பிக்கிறது. இந்த நபர்கள் எல்லோரும் தேவன் மீது மிகவும் விசுவாசம் வைத்திருந்தார்கள். இதில் முக்கியமானவர்களில் ஒருவர் நோவா ஆவார். இதன்பின் ஆபிரகாம், ஈசாக் மற்றும் யாக்கோபு வந்தார்கள். இவர்களை "முற்பிதாக்கள்" என்று நாம் கூறலாம். இந்த யுகத்தை "முற்பிதாக்களின் யுகம்" என்று நாம் அழைக்கலாம்.

யாக்கோபு இறந்த பிறகு இந்த யுகமும் முடிவடைந்தது, புது யுகம் ஆரம்பித்தது. யாக்கோப்பின் பிள்ளைகளாகிய எபிரேயர்களாகிய இஸ்ரயேல் தேசத்தோடு தேவன் நட்பாக இருந்த காலத்தில் இருந்து அப்புது யுகம் ஆரம்பிக்கிறது. அந்த யுகத்தை "யூத யுகம்" என்று அழைக்கலாம். அதனால் தான் யூத மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவித்தார். அதனால் தான் நியாயப் பிரமாணத்தை சீனாய் மலையில் தேவன் அவர்களுக்குக் கொடுத்தார். அதனால் தான் அவர்களை இஸ்ரயேலுக்கு தேவன் அழைத்துக் கொண்டு வந்தார். அதனால் தான் தீர்க்கதரிசிகளை அனுப்பி அவர்களுக்குக் கற்பித்தார். அதனால் தான் அவர்களுக்கு நியாயதிபதிகளையும், இராஜாக்களையும் கொடுத்தார். எப்போது யூத தேச மக்களைத் தம்முடைய ஜனமாக தேவன் ஏற்றுக் கொண்டாரோ, அப்போதே யூத யுகத்தின் முடிவிற்கு நாம் வந்து விட்டோம்.

இதற்கு அடுத்த பக்கத்தில், தற்போது நாம் பேசின காலத்தின் வரைபடம் உள்ளது. இதன் பின்னால் நாம் அடுத்த யுகத்தையும் மற்றும் புதிய ஏற்பாட்டைப் பற்றியும் பார்க்கலாம்!

# யூத யுகம்

யாக்கோப்பின் மரணம் தொடங்கி இயேசு கிறிஸ்து
ஞானஸ்நானம் பெறும் வரை உள்ள காலப்பகுதி





# முதல் இரண்டு உலகங்களின் அட்டவணை..... இதற்கு பின் மூன்றாம் உலகம் வருகிறது !!



# எல்லோருக்குமான

# தேவனுடைய திட்டம்

## புதிய ஏற்பாடு



# புதிய ஏற்பாட்டின் துவக்கம்

நமது கடைசி கதையில் இருந்து, 450 வருடங்கள் கடந்து வந்துள்ளோம். யூத மக்கள் எருசலேமில் தொடர்ந்து வாழ்ந்து, இஸ்ரயேலில் அதிகமான நகரங்களைக் கட்டினார்கள்.

நமது அடுத்த பகுதி மிகவும் அதிசயத்தக்க கதையில் இருந்து தொடர்கிறது. இயேசு எப்படி பிறந்தார் என்பதே அக்கதையாகும்.

ஒரு தேவதூதன் மரியாள் என்ற இளம் பெண்ணிடம் தோன்றி, அவளுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றார். அவள் அக்குழந்தைக்கு இயேசு என்று பெயரிட்டு அழைக்க வேண்டும். தான் இளம் வயதாகவும், திருமணம் ஆகாமலும் இருந்ததால் இதனைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டாள். ஆனால் இதை அவள் செய்யும்படி தேவன் முடிவு செய்ததால், அந்த மகனை சந்தோஷத்துடன் பெற்றுக் கொள்ள விரும்பினாள். இது ஒரு பெரிய அதிசயமாக எண்ணப்பட்டது. ஏனெனில் அக்குழந்தைக்குத் தகப்பன் இல்லை. தேவனே அக்குழந்தையின் தகப்பனாக விளங்கினார். இதற்கு முன் இதுபோன்று நடந்தது இல்லை.

மரியாள் யோசேப்பை மணக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததால், யோசேப்பு இயேசுவை தன்னுடைய மகனாக தத்து எடுத்துக் கொண்டார். மத்தேயு 1, 2



# மரியாளும் யோசேப்பும் பெத்லகேமிற்குச் செல்லுதல்

யோசேப்பும், மரியாளும் பெத்லேகமிற்குச் சென்று கொண்டிருக்கும் போது, அந்த இராத்திரி வேளையில் தனக்குப் பிள்ளை பிறக்கப் போகிறது என்பதை மரியாள் உணர்ந்தாள். அந்த இராத்திரியில் தங்க, ஒரு நல்ல இடத்தை தேடிப் பார்த்தனர். அவர்கள் தங்க அப்படி ஒன்றும் நல்ல இடம் கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் மாட்டுக் கொட்டகையில் தங்க வேண்டியதாயிற்று! மாடுகளுக்கு நடுவே அக்குழந்தை எப்படி பிறந்திருக்கும் என்று சற்று நினைத்துப் பாருங்கள்? இவை விநோதமாக இருந்தாலும், தேவன் அவர்களோட இருந்தார். குழந்தை பிறந்தது. அக்குழந்தையை மெல்லிய துணிகளால் சுற்றி, முன்னணையில் கிடத்தி தூங்க வைத்தார்கள்.

அந்த இரவு நேரத்தில் வயல்வெளியில் இருந்த மேய்ப்பர்கள் முன்பாக தோண்றிய தேவதூதர்கள் ஒரு அதிசய குழந்தை பிறந்துள்ளதாக கூறினார்கள். செய்தியைக் கேட்டவுடன் குழந்தை இயேசுவை பார்க்க மேய்ப்பர்கள் விரைந்து சென்றனர்! லூக்கா 2



# இயேசு பிறந்தார்!

யோசேப்பு, மரியாள் மற்றும் புதிய குழந்தையான இயேசுவைப் பார்க்க மேய்ப்பர்கள் தொழுவத்திற்கு வந்து, தலைவணங்கி அச்சிறுகுழந்தையை வணங்கினார்கள். இந்த சிறுகுழந்தைதான் உலகத்தை மாற்றி அனைத்து மக்களையும் ஆசிர்வதிக்கப் போகிறது என்று தேவதூதர்கள் அவர்களுக்கு கூறினர்.

ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தை விட்டு வெளியேறிய போது தேவன் என்ன சொன்னார் என்பதை நினைத்துப் பாருங்கள்? ஏவாளின் பிள்ளை ஒன்று சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் அவர்களுக்கு கூறினார். இதனால் சர்ப்பத்தினால் இழந்து போன அனைத்தையும் திரும்ப பெற ஒரு நாள் வரும் என்று இதன் மூலமாக நம்பிக்கை கொண்டிருந்தார்கள். தம்முடைய ஜீவனை இழந்தார்கள், பரிபூரண ஏதேன் தோட்டத்தை இழந்தார்கள், தேவன் ஒவ்வொரு நாளும் வந்து அவர்களை பார்த்துச் செல்வதையும் இழந்தார்கள்.

இயேசு என்ற இச்சிறு குழந்தையே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாகும். நாம் கதையை படித்துக் கொண்டிருக்கும் போதே, இவை எப்படி நடக்க வாய்ப்புள்ளது என்பதை அறிந்துக் கொள்ளலாம்.



# சாஸ்திரிகள் வருதல்

தானியேல் பெர்சியாவில் வாழும்போது, அங்கு உண்மையான தேவனை வணங்கி வந்தார் என்பதை நினைத்தீர்களா? தானியேலால் இன்னும் சில பேர் தேவனுடைய தீர்க்கதரிசனங்களை படிக்க ஆரம்பித்தனர். அங்கிருந்த இராஜாக்கள் இயேசு பிறந்த இடத்தை அடையாளம் காட்டும் நட்சத்திரத்தை வானத்திலே கண்டார்கள். அந்த நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து செல்ல அவர்கள் முடிவு செய்தனர். பிறந்த சிறிய இராஜாவிற்காக பரிசுப் பொருட்களை எடுத்துக் கொண்டு, பெத்லகேமிற்கு நெடுந்தூரப் பயணத்தை மேற்கொண்டார்கள். இயேசு பிறந்த இடத்திற்கு செல்ல அவர்களுக்கு நிறைய நாட்கள் தேவைப்பட்டது. ஆனால் அங்கு சென்றவுடன் இயேசுவிற்கு மூன்று பரிசு பொருட்களைத் தந்தனர். அந்தப் பரிசு பொருட்கள் மிகவும் விலையேறப் பெற்றதாகும். ஒன்று பொன், மற்றொன்று விலை உயர்ந்த தூபவர்க்கம், இன்னொன்று விலை உயர்ந்த வாசனை பொருளான வெள்ளை போளமாகும். ஆச்சரியமான அப்பரிசுகள் யாவும் மாட்டுக் கொட்டகையில் பிறந்த ஏழை சிறுகுழந்தைக்காக கொடுக்கப்பட்டதாகும். ஆனால் வெளி ஊருக்கு செல்லப் போகும் இச்சிறிய குடும்பத்தினருக்கு இப்பரிசு பொருட்கள் தேவை என்று தேவன் அறிந்திருந்தார். மத்தேயு 2



# சிமியோனும் அன்னாளும்

இயேசு பிறந்து எட்டு நாட்கள் ஆனபோது, யோசேப்பும் மரியாளும் தேவாலயத்திற்குக் கூட்டிக் கொண்டு சென்றனர். இது இஸ்ரயேலில் ஒரு சட்டமாக இருந்தது. தேவனுக்காகவும் அவருடைய ஊழியத்திற்காகவும் அப்பிள்ளை அர்ப்பணிக்கப்பட்டது.

அவரை பெற்றுக்கொள்ள வயதான மனிதன் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சிமியோன். மேசியாவை காணாமல் அவர் இறக்க மாட்டார் என்று தேவன் அவனிடம் கூறியிருந்தார். மேசியா என்றால் "இரட்சகர்" என்று அர்த்தமாகும். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்ற இன்னொரு அர்த்தமும் இப்பெயருக்கு உண்டு. இச்சிறுப்பிள்ளைதான் உலகில் உள்ள அனைவரின் பாவங்களையும் போக்க வல்லவர் என்று சிமியோன் உடனே தெரிந்து கொண்டார். கடைசியாக மேசியாவைக் கண்டதினால் சிமியோன் மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

அன்னாள் என்ற பெயர் கொண்ட வயதான பெண் ஒருவர் இருந்தார். இயேசுவைக் காண வேண்டும் என்று மிகவும் ஆவலோடு இருந்தார். தேவனுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகிறவரும், ஆபிரகாமின் உண்மையான



சந்ததியானாகிய மேசியாவைக் கடைசியாக காணவேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் காத்திருந்தாள், பின்னாளில் அவரைக் கண்டால் எப்படி உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று சற்று நினைத்துப் பாருங்கள். அந்த நாளில் தேவலாயத்தை விட்டு யோசேப்பும், மரியாளும் வெளியே செல்லும் போது மகிழ்ச்சியுடனும், சந்தோஷத்துடனும் சென்றிருப்பார்கள். எப்படிப்பட்ட ஆசிர்வாதத்தை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! லூக்கா 2: 25 -39

# யோசேப்பு, மரியாள் & இயேசு தப்பிச் செல்லுதல்

குழந்தை இயேசுவை வணங்க சாஸ்திரிகள் வந்ததை அறிந்த ஏரோது இராஜா கடுங்கோபம் கொண்டான். தன்னுடைய இராஜ்யத்தை வேறு இராஜா யாரும் அபகரித்து விடுவார்களோ என்று பயந்தான். இதனால் பெத்லகேமில் உள்ள அனைத்து குழந்தைகளையும் கொல்ல ஆணைப் பிறப்பித்தான். என்ன ஒரு பயங்கரமான நாளாக இருந்திருக்கும்! ஆனால் குழந்தை இயேசு அங்கு இல்லை.

இரவிலே யோசேப்பு ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் மரியாளையும், இயேசுவையும் எகிப்துக்கு கொண்டு செல்லும் படி தேவன் கூறினார்.

இஸ்ரயேல் மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக அடிமையாக வாழ்ந்த இடம் எகிப்து தேசமாகும் என்பதை நினைத்துப் பாருங்கள். ஆன போதிலும், அவர்கள் ஒளிந்து கொள்ள எகிப்து ஒரு நல்ல இடமாக அமைந்தது. ஏரோது இராஜா பயங்கர ஆணையை பிறப்பிக்கும் முன்னே, இரவில் எழுந்து விரைவாக யோசேப்பும், மரியாளும் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு சென்றனர். எவ்வளவு நாட்கள் அவர்கள் பிரயாணம் செய்தார்கள் என்று நமக்குத் தெரியாது, ஆனால் ஏரோது இறக்கும் வரைக்கும் எகிப்திலே தங்கி இருந்தனர் என்று நமக்கு தெரியும்.

ஏரோது இராஜா இறந்தவுடன், யோசேப்புக்கு இன்னொரு கனவு வந்தது. இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பி செல்லும் படி தேவன் யோசேப்புக்கு கட்டளையிட்டார். இயேசுவைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தவர்கள் இறந்து விட்டார்கள் என்று தேவன் அவனிடம் கூறினார். இதனால் அவர்கள் இஸ்ரயேல் தேசத்திற்குத் திரும்பி, நாசரேத் என்னும் கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள்.

மத்தேயு 2



# இயேசுவிற்கு பன்னிரெண்டு வயது ஆனது

இயேசுவிற்கு பன்னிரெண்டு வயது ஆனதை பற்றி நாம் அடுத்த காரியமாக படிக்கப் போகிறோம். ஒவ்வொரு வருடமும் செல்வது போல், இயேசுவும் அவருடைய பெற்றோரும் தேவலாயத்திற்குச் சென்றனர். அங்கிருந்து புறப்பட்டு வீடு செல்லும் வழியில், மக்கள் கூட்டத்தோடு இணைந்து பிரயாணம் செய்தார்கள். மக்களோடு இயேசு இருக்கிறாரா என்று அவர் பெற்றோர் பார்த்தார்கள். ஆனால் இயேசுவை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் அவர்கள் மிகவும் சோகமாகி, எருசலேமிற்குத் திரும்பி, அவரை அங்கு தேடினார்கள்.

எல்லா இடத்திலும் தேடினார்கள். கடைசியாக அவர்கள் நினைத்தது போல, இயேசு தேவாலயத்தில் போதகர்களோடும், மதக்குருமார்களோடும் தேவனுடைய வார்த்தையையும், மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் பற்றி பேசிக் கொண்டிருந்தார். தங்களை மிகவும் பயப்பட வைத்ததால், இயேசுவின் மீது அவரின் பெற்றோர்கள் மனச்சோர்வாகினர். தங்களை விட்டுப் பிரிந்து சென்றதாலும், வீட்டிற்கு வராததாலும், இயேசுவின் பெற்றோர்கள் அவரைத் திட்டினர் . அவர்கள் சோகமடைந்ததைக் கண்டு இயேசு மிகவும் ஆச்சரியப் பட்டார். தேவாலயத்தில் அதிக நாள் தங்கி, தம்முடைய பிதா பற்றியும் தமக்காக பிதா வைத்து உள்ள காரியங்களைப் பற்றியும் அறியவே தாம் தங்கியிருப்பது தன் பெற்றோர்களுக்கு நிச்சயமாக தெரிந்திருக்கும் என்று நினைத்திருந்தார். இது யோசேப்பிற்கும் மரியாளுக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆனால் இயேசு அவர்களுடன் வீடு திரும்பினார். லூக்கா 2



# இயேசு ஞானஸ்நானம் பெறுதல்

இதன் பின்பு ஞானஸ்நானம் பெற இயேசு 18 வருடங்கள் காத்திருந்தார் என்பது நமக்குத் தெரியும். அவருடைய வாழ்க்கையைப் பற்றி நிறைய நமக்கு அதிகமாகத் தெரிய வாய்ப்பில்லை, இருந்தாலும் அவர் தன்னுடைய பரமபிதாவான தேவனை பற்றிய விசுவாசத்திலும், ஞானத்திலும், புத்தியிலும் அதிகமாக வளர்ந்திருந்தார். அவரை நன்கு தெரிந்திருந்த அனைவரும் அவரை நேசித்தனர்.

இயேசுவின் 30வது வயதில், யோர்தான் நதியின் அருகே யோவான் என்ற பெயர் கொண்ட ஒருவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். தங்களுடைய பாவத்திற்காக வருத்தப்பட்ட அனைவருக்கும் யோவான் ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். ஞானஸ்நானம் என்றால் ஒருவரை தண்ணீரில் மூழ்கச் செய்து, பின்பு நீரை விட்டு வெளியே வரும்போது, அவர்கள் புது வாழ்வைத் தொடங்குவதாக அடையாளப் படுத்துகிறது.

தேவன் மீதும் அவருடைய நியாயப்பிரமாணம் மீதும் ஏற்கெனவே விசுவாசம் கொண்டுள்ள இயேசுவைப் பற்றி அறிந்த யோவான், தம்மிடம் இயேசு ஞானஸ்நானம் எடுக்க வந்ததை பார்த்து ஆச்சரியப்பட்டார். இயேசு மன்னிப்பு பெற அவரிடம் எந்த பாவமும் இல்லை என்று யோவான் நன்கு அறிந்திருந்தார். அவருக்கென்று புது தொடக்கம் தேவையில்லை!



இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின்பு, வானத்தில் இருந்து ஒரு புறா இறங்கி வந்தது. "இவர் என்னுடைய குமாரன். இவர்மேல் பிரியமாய் இருக்கிறேன்" என்று கூறும் சத்தத்தை யோவான் கேட்டார்.

அந்த நாளில் அங்கு நிகழ்ந்தது எப்படி இருந்திருக்கும் என்று சற்று நினைத்துப் பாருங்கள்?

யோவான் 3:22

# இயேசு சோதிக்கப்பட்டார்

இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின்பு, தம்முடைய பரமப்பிதாவை பற்றி நினைக்கவும், ஜெபம் செய்யவும் மற்றும் அவருடன் தனிமையாகவும் இருக்க விரும்பினார்.

இதனால் பாலைவனத்தில் நாற்பது நாட்கள் தங்கி இருந்தார். அந்த நாட்கள் முழுவதும் பிதாவாகிய தேவன் பற்றி நினைத்து, ஜெபம் செய்து வந்ததால், அவர் சாப்பிடவும், நீர் அருந்தவுமில்லை.

உண்மையான தேவனை வணங்காமல், இயேசு தன்னை வணங்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரை சோதனைக்குட்படுத்த சாத்தான் விருப்பப்பட்டான். தான் செய்ய விருப்பப்படுவதை இயேசு செய்ய வேண்டும் என்றும், தேவன் விருப்பப்படுவதை செய்ய அவரை அனுமதிக்கக் கூடாது என்றும் முயற்சி செய்தான்.

இதனால் இயேசு சில கற்களை அப்பமாக மாற்றி சாப்பிட ஏதுவாக செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டான். இவை ஒன்றும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றே தெரிகிறது. ஏனெனில் அவர் நாற்பது நாட்களாக எதுவும் சாப்பிடவில்லை! ஆனால் அதனையே தாம் செய்ய வேண்டும் என்று சாத்தான் விரும்பியதை எண்ணி, இயேசு அதைச் செய்யவில்லை. தேவனுடைய வல்லமையை தனக்குரிய காரியங்களில் செயல்படுத்த விருப்பப்படாமல், மற்றவர்களுக்காகவே இயேசு உபயோகப்படுத்தினார். இயேசு தன்னை வணங்க வேண்டும் என்று சாத்தான் விருப்பப்பட்டான். ஆனால் இயேசுவோ அதனை மறுத்துவிட்டார். லூக்கா 4



# இயேசு திரும்பவும் சோதிக்கப்பட்டார்

இயேசு மறுபடியும் சாத்தானால் சோதனைக்குட்படுத்தப்பட்டார். இயேசு மலையில் இருந்து குதித்தால், எல்லோரும் பார்க்கும் படியாக தேவன் அவரை காப்பாற்றுவார் என்ற எண்ணத்தில் இயேசுவை அச்செயலை செய்ய சாத்தான் விருப்பபட்டான். இப்படி ஒரு செயல் அவர் செய்வதை தேவன் விரும்பமாட்டார் என்று இயேசுவிற்கு தெரியும். ஆனால் இயேசுவோ இச்செயலைச் செய்ய மறுத்துவிட்டார். இயேசுவின் நல்ல காரியங்கள் மூலமாகவே அவரை மேசியா என்று மக்கள் அறிந்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் விருப்பப்பட்டாரே தவிர, மாய மந்திரங்கள் மூலமாக அல்ல.



கடைசியாக தான் சொல்லும் எதையும் இயேசு செய்யமாட்டார் என்பதை அறிந்த சாத்தான், அவரை விட்டு வெளி யேறினான். இதன் பின்னர் தேவ தூதர்கள் வந்து, இயேசுவை தேற்றி, அவருக்கு சாப்பிட உணவையும், தண்ணீரையும் கொடுத்தார்கள்.



# இயேசு திருமணத்திற்கு செல்லுதல்

நாற்பது நாளுக்கு பிறகு, இயேசு தம்முடைய வீட்டிற்குச் சென்றார். அவர் வீட்டின் அருகாமையில், திருமணம் ஒன்று நடந்தது. அதில் கலந்து கொள்ளும்படி இயேசுவும் அவருடைய தாயாரும் அழைக்கப்பட்டிருந்தனர். திருமணத்தின் போது திராட்சரசம் குறைவாக இருந்தது. இதனை நாம் ஒரு மோசமான காரியமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் அவர்கள் அனைவரும் திராட்சரசத்தை மட்டுமே குடிப்பார்கள் என்று நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு திருமண விருந்தில் குடிக்க ஒன்றும் இல்லை என்றால் எப்படி இருக்கும் என்று நாம் கற்பனை செய்ய வேண்டும். இயேசுவின் தாயாரான மரியாளோ அக்குடும்பத்தார் வருத்தப்படக் கூடாது என்று விருப்பப்பட்டாள். அதனால் அவ்விஷயத்தைப் பற்றி இயேசுவிடம் கூறினாள். தன்னுடைய பசியை போக்குவதற்காக இயேசு கற்களை அப்பமாக மாற்றவில்லை என்பதை நாம் நினைக்க வேண்டும். தேவனுடைய வல்லமையை அவர் தனக்காக உபயோகப்படுத்தியது கிடையாது. ஆனால் தேவனுடைய வல்லமையை அடுத்தவருக்காக மட்டுமே உபயோகித்தார். எனவே தண்ணீர் நிரப்பபட்ட ஜாடிகளின் அறைக்கு சென்றார். அங்கே அவர் தண்ணீரை திராட்ச இரசமாக மாற்றினார். இதுவே இயேசு செய்த முதல் அதிசயமாகும். இதிலிருந்து அவர் தேவனுடைய தெய்வீக வல்லமை பெற்றுள்ளார் என்பதை அக்கணம் முதல் மக்கள் அறிய ஆரம்பித்தார்கள். யோவான் 2



# இயேசு யார்?

பிதாவாகிய தேவனிடமிருந்து இயேசு ஒரு விஷேித்த வல்லமையைப் பெற்றுள்ளார் என்பது நமக்கு தெரியும். அதிசயமாக அவர் பிறந்தார் என்பதும் நமக்கு தெரியும். ஆனால் இயேசு பெரிய மனிதன் மாத்திரம் இல்லை. அவர் தீர்க்கத்தரிசிகளில் ஒருவராக மாத்திரம் இல்லை. அவர் தேவனுடைய ஒரே பேறான குமாரன்.

தேவன் தனிமையாக இருந்த போது என்று நீங்கள் படித்த முதல் பாடத்தை நினைத்துப் பாருங்கள். இதன் பின்பு தேவன் தமக்கென ஒரு குமாரனை உருவாக்கி, தன் மகனுக்கு லோகாஸ் (அல்லது) தேவனுடைய வார்த்தை என்று பெயரிட்டார். இந்த தேவகுமாரன் தான் மாட்டுத் தொழுவத்தில் குழந்தையாக பிறந்து, இயேசு என்று பெயரிடப்பட்டார். பிதாவாகிய தேவனுடைய வல்லமையான மகனாக விளங்கிய இவர், பூமியில் மனித குழந்தையாக பிறந்து, நம்முடைய மீட்பர் ஆனார். ஆனால் நம்மை போல அவர் சாதாரணமான மனிதன் இல்லை. அவர் பரிபூரணமானவர். அவர் நம்மை போன்று பாவியாக பிறக்கவில்லை. ஆதாமும், ஏவாளும் தங்களுடைய கீழ்ப்படியாமைக்கு முன்னர் எப்படி பாவம் இல்லாமல் இருந்தார்களோ, அதேபோல் இயேசுவும் பிறக்கையில் பாவம் இல்லாமலே பிறந்தார். ஆதாமும், ஏவாளும் சாத்தானால் சோதிக்கப்படுவதற்கு முன்னரே, தம்முடைய ஒரே பேறான குமாரனை பூமிக்கு அனுப்பி, பாவம் மற்றும் மரணத்திலிருந்து மக்களை மீட்கும் பொருட்டு தம் மகனை அனுப்ப தேவன் முடிவு செய்தார். இயேசு மேய்ப்பவராகவும், எப்போதும் அவரால் காக்கப்பட்டு வருகின்ற நாம் அவருடைய ஆடுகளாகவும் இருக்கிறோம் என்பது நாம் அறிந்ததே.

*யோவான் 11; 1 தீமோத்தேயு 2 :5; எபிரேயர் 13 :20*



# இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும்

இதற்கு அடுத்தக்கட்டமாக இயேசு தம்மை பின்பற்றி தன்னுடன் வேலை செய்ய 12 பேரைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

கலிலேயா கடலில் படகில் அமர்ந்தவாறு மீன் பிடிக்கும் சிலரை இயேசு கண்டார். இரவு முழுவதும் வலை வீசியும், அவர்களுக்கு மீன் கிடைக்கவில்லை. படகிற்கு மறுமுனையில் வலையை வீசும்படி அவர்களைப் பார்த்து இயேசு சொன்னார். அவர்களும் அதனை செய்ததால், அதிக மீன்களைப் பிடித்தார்கள். நிறைய மீன்கள் இருந்ததால், படகு மூழ்கும் நிலைக்குச் சென்றது. இது ஒரு அதிசயம் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

எல்லா மீன்களையும் அவர்கள் கடற்கரைக்கு கொண்டு வந்தவுடனே, இயேசு அவர்களை நோக்கி, எல்லாவற்றையும் விட்டு விட்டு, என்னைப் பின்பற்றி வாருங்கள் என்றார். அதிக விசுவாசம் இருந்ததால் அவர்கள் தங்கள் வேலை, குடும்பங்களை விட்டு, அவர்களுக்கு தெரியாத ஒருவரை பின்பற்ற ஆரம்பித்தார்கள்.

அப்போஸ்தலர்களின் பெயர்கள்: பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆவார்கள். பேதுரு மற்றும் அந்திரேயா இருவரும் சகோதரர்கள் ஆவார்கள். யாக்கோபு மற்றும் யோவான் இருவரும் சகோதரர்கள் ஆவர். லூக்கா 5:1-11, மத்தேயு 4:18-22.



# கர்த்தரின் ஜெபம்

இயேசு கற்பித்துக் கொண்டிருந்த போது, அவரைப் பின்பற்றுபவர்கள் இயேசுவை நோக்கி, எப்படி ஜெபம் செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இயேசு அதற்கு பிரதியுத்திரமாக பல பேர் பார்க்கும் படி நாம் ஜெபம் பண்ணக் கூடாது என்றார். அதாவது மக்கள் முன்னால் நாம் ஜெபம் செய்வோமானால், எந்த அளவிற்கு ஜெபம் செய்கிறோம் என்பதை மற்றவர்கள் பார்ப்பார்கள். கீழே கொடுத்துள்ளபடி இருதயத்திலிருந்து ஜெபம் செய்யவேண்டும்: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளை நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென். மத்தேயு 6 : 9-13.

இப்படித்தான் ஜெபம் பண்ண வேண்டும் என்று தேவன் நமக்கு கூறுகிறார். நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்று தேவன் விருப்பப்படுகிறார். அவருடைய இராஜ்யம் பூமியில் அமைக்கப்படுவதை நாம் எதிர் பார்த்து இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவருடைய சித்தம் பரலோகத்தில் இருக்கும் தேவ தூதர்களோடு செய்யப்படுவது போல, பூமியிலும் அவருடைய சித்தம் செய்யப்பட வேண்டும். நமது பாவங்களுக்காக நாம் அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அதேபோல் அடுத்தவர்களின் பாவங்களையும் நாம் மன்னிக்க வேண்டும். நாம் சரியாகவும், நல்லவர்களாகவும் விளங்க அவர் எதிர்ப்பார்க்கிறார். சாத்தானை எதிர்த்து போராட நமக்கு அவருடைய உதவி தேவைப்படுகிறது என்பதை நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். ஏனெனில் நம்மால் சாத்தானை தனியாக எதிர் கொள்ள முடியாது. நம்மைவிட, சாத்தான் மிகவும் வல்லமையானவன்.



இயேசுவின் நாமத்தில் ஒவ்வொரு நாளும் இந்த ஜெபத்தை ஏறெடுப்போமாக.

# இயேசுவும் திமிர்வாதக்காரனும்

*கலிலேயா கடலின் கரைக்கு அருகே இருக்கும் கப்பர்நகூம் என்ற நகரத்தில் இயேசு சில நாட்கள் தங்கி இருந்தார். ஒரு நாள் சில மனிதர்கள் நடக்க முடியாத ஒரு மனிதனை படுக்கையிலே கிடத்தி இயேசுவிடம் கொண்டு வந்தார்கள். இயேசுவைக் கேட்டுக் கொண்டால், அவர் அவனை குணமாக்குவார் என்று அவர்கள் விசுவாசித்தனர். இதனால் தம் மீதும் தம்முடைய வல்லமை மீதும் அவர்கள் வைத்திருந்த விசுவாசத்தைக் கண்டு இயேசு மிகவும் மகிழ்ந்தார். இதனை அவர் "விசுவாசம்" என்று கூறினார். அந்த திமிர்வாதத்காரனை நோக்கி "உன் படுக்கையை எடுத்து, வீட்டிற்கு போ" என்று இயேசு கூறினார். அந்த மனிதனும் எழுந்து வீட்டிற்குச் சென்றான். இதனைப் பார்த்த அனைத்து மக்களும் வியந்தனர். இயேசுவிற்கு வல்லமை தந்த தேவனை துதித்து மகிமைபடுத்தினார்கள்.*

*இதுபோன்ற பல அதிசயங்களை ஆண், பெண் மற்றும் குழந்தைகளிடம் இயேசு செய்தார். வியாதி கொண்டவர்களை மக்கள் இயேசுவிடம் அழைத்து வந்ததால், அவர்கள் அனைவரையும் குணமாக்கினார். இது ஒரு நல்ல சாட்சியாக அமைந்தது. இயேசுவே வாக்குத்தத்தத்தின் மூலமாக வந்தவர் என்பதை மக்கள் அனைவரும் நம்பினார்கள். மத்தேயு 9 :1-7.*



# இயேசுவும் குருடனும்

இயேசு பெத்சாய்தா என்ற ஊரில் தங்கி இருந்தார். சில மனிதர்கள் இயேசுவிடம் ஒரு குருடனை கொண்டு வந்து அவனை குணமாக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அவன் கையை பிடித்து ஊருக்கு வெளியே இயேசு அவனை கொண்டு சென்றார். பின்னர் அவன் கண்ணில் உமிழ்ந்து, அவன் மேல் கைகளை வைத்தார். இதன் பின்னர் அவனால் எதையாவது காண முடிகிறதா என்று இயேசு கேட்டார். அதற்கு அவன் "நடக்கிற மனுஷரை மரங்களைப் போலக் காண்கிறேன்" என்றான். இயேசு திரும்பவும் தன்னுடைய கைகளை அவன் கண்களில் வைத்தார். அதன்பின் அவனால் நன்றாகப் பார்க்க முடிந்தது. அவன் ஊருக்குள் செல்லாமல் வீட்டிற்கு செல்லும்படி இயேசு அவனிடம் கூறினார். இந்த அதிசயம் பற்றி மக்கள் தெரிந்துக்கொள்ளுவதற்கு இன்னும் இயேசு விருப்பப்படவில்லை. தம்மை பிடித்து அவர்களுடைய இராஜாவாக ஆக்கிவிடுவார்கள் என்று எண்ணினார்! இதுபோன்று வியாதிகளை குணமாக்கி, மரித்தவர்களை உயிர்த்தெழுப்ப ஒரு இராஜா தேவை என்று ஜனங்கள் விருப்பப்பட்டனர். மாற்கு 8 : 22-26.



# இயேசு அனைவருக்கும் உணவளித்தார்

அதே போன்று தங்களுக்கு உணவளிக்க ஒரு இராஜா தேவை என்று ஜனங்கள் விருப்பப்பட்டார்கள். ஒரு நாள் இயேசு 5,000 பேர் கொண்ட மக்கள் கூட்டத்திடம் பேசிக் கொண்டிருந்தார். சாப்பிடும் நேரம் வந்தவுடன், அனைவருக்கும் பசி எடுத்தது. ஆனால் அவர்களிடம் உணவு எதுவுமில்லை. யாரிடமாவது உணவு இருக்கிறதா என்று இயேசுவை பின்பற்றுபவர்கள் தேடிப் பார்த்தார்கள். அப்போது ஒரு சிறு பையன் 5 அப்பத் துண்டுகளையும், இரண்டு சிறிய மீன்களையும் கொடுத்தான். 5,000 பேருக்கு உணவளிக்க நிச்சயம் இது போதாது. ஆனால் இயேசு அதனை எடுத்து, எல்லோரும் நன்றாக சாப்பிடும்படிக் கொடுத்தார். சாப்பிட்டபின் இன்னும் மிச்சமாக இருந்தது. அப்போஸ்தலர்கள் வியந்தனர். இதுபோன்று அவர்கள் எதையும் பார்த்ததில்லை. இதுபோன்ற ஒருவரையே பின்பற்றிச் செல்ல மக்கள் விரும்பினார்கள்.

ஆனால் நோயை குணப்படுத்துவது மற்றும் சாப்பிட உணவு கொடுப்பது போன்ற காரணங்களை மட்டும் கருத்தில் கொண்டு தம்மை மக்கள் பின்பற்றுவதை இயேசு விரும்பவில்லை. மாறாக மக்கள் அனைவரும் தம்மை நேசிக்கும்படி இயேசு விருப்பப்பட்டார். அவர்கள் அனைவரும் பிதாவாகிய தேவனிடம் அன்பாயிருக்க வேண்டும் என்று விருப்பப்பட்டார். தங்களுக்கு எந்த பயன் கிடைக்காவிட்டாலும், தேவனுடைய சித்தத்தை அவர்கள் செய்ய வேண்டும் என்று விருப்பப்பட்டார்.

மத்தேயு 14:13 - 21 ; லூக்கா 9 :12 -17



# இயேசுவின் வஸ்திரம் மூலம் குணமடைதல்

இயேசு விரும்பியதாலும், அவரிடம் தேவனின் வல்லமை இருந்ததாலும் இயேசு மக்களை குணப்படுத்தினார். ஆனால் ஒவ்வொரு முறையும் ஒருவனை குணப்படுத்தும் போதும் அல்லது உயிர்த்தெழுப்பும் போதும், அவருடைய வல்லமை சற்று குறைவதை அவர் உணர்ந்தார். அதனால் ஒவ்வொரு முறையும் அவர் பலவீனமாக உணர்ந்தார்.

ஒரு நாள் இறந்து போன சிறு பெண்ணை உயிர்த்தெழுப்ப, இயேசு போய்க்கொண்டிருந்த போது, திடிரென்று நின்று, சுற்றும் முற்றும் பார்த்து, யார் என்னை தொட்டார்கள்? என்று கேட்டார். அவரை நிறைய பேர் தொட்டதால், எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். ஆனால் இயேசு தம்முடைய வல்லமை குறைந்ததை உணர்ந்ததால், யாரோ குணமாகி உள்ளார்கள் என்று தெரிந்து கொண்டார்.

பல ஆண்டு காலமாக நோய்வாய் பட்டிருந்த ஒரு பெண் அவரைத் தொட்டாள். அவள் தனக்குதானே இப்படி பேசிக் கொண்டாள். "நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் " என்று தன் மனதில் கூறிக்கொண்டாள். அவள் மிக அதிகமாக விசுவாசித்ததால், தேவன் அவளை ஆசிர்வதித்து குணமாக்கினார். மத்தேயு 9 : 20 - 22



# இயேசுவும் சகேயுவும்

ஒரு நாள் இயேசு எரிகோவில் இருந்த பொழுது, தெருவின் வழியாக சென்று கொண்டிருந்த போது, அவருடைய வார்த்தைகளைக் கேட்க நிறைய பேர் கூடி வந்தார்கள். அப்போது அங்கு குள்ளமான ஒரு மனிதன் சகேயு என்ற பெயரில் இருந்தான். கூட்டம் அதிகமாக இருந்ததால், இயேசுவைக் காண அவனால் முடியவில்லை. மக்களிடம் இருந்து அதிகமான வரியை வசூலித்ததால், அவனை யாருக்கும் பிடிக்காமற் போனதால், இயேசுவைக் காண ஜனங்கள் அவனுக்கு வழிவிடவில்லை. இதனால் இயேசுவைப் பார்க்க சகேயு மரத்தில் ஏறினான்.

மனிதர்களுடைய நினைவுகளையெல்லாம் இயேசு நன்கு அறிந்திருந்த படியால், சகேயு தன்னைப் பார்க்க எவ்வளவு பிரயாசப்பட்டிருப்பான் என்பதை அவர் தெரிந்து இருந்தார். மரத்தின் முன் நின்று, சகேயுவை இயேசு பெயர் சொல்லி அழைத்தார். இயேசுவிற்கு தன்னைப்பற்றி தெரிந்தப்படியால், சகேயு மிகவும் ஆச்சரியப்பட்டான். அவன் வீட்டிலே இன்று இராத்திரியில் சாப்பிடப் போவதாக இயேசு சகேயுவை நோக்கி கூறினார். அந்த நாளிலே சகேயு இயேசுவின் சீடராக மாறி, தன்னுடைய பாவங்களுக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டான். தவறான முறையில் சேர்த்த பணத்தையும் திருப்பித் தரப்போவதாகவும் சகேயு இயேசுவிடம் கூறினான். லூக்கா 19:1 - 9.



# இயேசு தண்ணீர் மீது நடந்து வருதல்

ஒரு நாள் இரவு, தனிமையாக ஜெபம்பண்ண வேண்டும் என்று இயேசு விருப்பப்பட்டார். இதனால் அவர் அப்போஸ்தலர்களை படகு எடுத்துக் கொண்டு, கலிலேயா கடலுக்குச் செல்லும்படியாகவும், பிற்பாடு அவர்களை தாம் சந்திப்பதாகவும் இயேசு கூறினார். இரவு நேரமானதால், கடலில் பெரிய அலைகளும் சூறைக் காற்றும் அதிகமாக இருந்தது.

இயேசு கடலின் மீது நடந்துக் வருவதை அப்போஸ்தலர்கள் கண்டார்கள். தம்முடைய கண்களையே அவர்களால் நம்ப முடியவில்லை. இதைப் பற்றி பேதுரு நினைத்துக் கூட பார்க்கவில்லை. படகில் இருந்து குதித்து, இயேசுவைப் பார்க்க பேதுரு சென்றார். ஆனால் திடீரென்று தான் செய்ததை எண்ணி பயந்து, நீரில் மூழ்க ஆரம்பித்தார். இயேசு பேதுருவைப் பிடித்து, படகில் பத்திரமாக கொண்டு வந்து சேர்த்தார். இதன்பின் சூறைகாற்று நின்றதால், கடல் அமைதியானது. மத்தேயு 14:22 - 33.



# இயேசுவும் பிள்ளைகளும்

ஒரு நாள் ஜனங்களிடம் இயேசு போதித்து கொண்டிருந்தார். அப்போது அங்கு இயேசுவின் மடியில் உட்கார்ந்து, நிறைய குழந்தைகள் அவரோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். இயேசு அவர்களோடு அதிகமாக விளையாடிக் கொண்டிருந்ததால், அப்போஸ்தலர்கள் அவர்களை அந்த பக்கம் போகும்படியாக அதட்டினார்கள்.

எப்படி எல்லா மக்கள் மீதும் இயேசு அன்பு செய்தாரோ, அதேபோல் பிள்ளைகளையும் அதிகமாக நேசித்தார். எப்போதும் பிள்ளைகள் தம்மைச் சுற்றி இருக்க வேண்டும் என்று அவர் விருப்பப்பட்டார்.

இதன் மூலமாக இயேசு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்தார். ஒருவன் இயேசுவைப் பின்பற்றி வரவேண்டுமானால், அவன் பிள்ளைகள் போல் ஆக வேண்டும். அப்படி என்றால் என்ன? இயேசுவைப் பின்பற்றுகிறவன் தன்னடக்கம் கொண்டவனாகவும், தன்னைப்பற்றி உயர்வாக நினைக்காதவனாகவும் இருக்க வேண்டும். கடமை தவறாமல் இருக்க வேண்டும். அவன் மனதில் பட்டதை மட்டும் கூற வேண்டுமே தவிர மாயக்காரனாக இருக்கக் கூடாது. மத்தேயு 19:14,15



# இயேசு அப்போஸ்தலர்களை எச்சரித்தல்

தாம் இறக்கப்போவதைக் குறித்து அப்போஸ்தலர்களை இயேசு எச்சரிக்கத் தொடங்கினார். ஏன் அவர் அப்படி எச்சரித்தார் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இயேசுவிற்கு 33 வயது ஆகியிருந்தது. அவர்களுக்கு அவர் இராஜாவாக இருந்தார். தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மேசியாவாக அவர்களுக்கு இயேசு விளங்கினார். அவர் தமது இறப்பை குறித்து பேசவில்லை மாறாக தங்களிடம் விளையாட்டாக இயேசு பேசுகிறார் என்று அப்போஸ்தலர்கள் நினைத்தார்கள்.

ஆனால் இயேசுவோ மிகவும் அழுத்தமாகச் சொன்னார். தாம் கூடிய விரைவில் இறக்கப் போகிறோம் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். இந்த காரியத்திற்காகத் தான் இப்பூமிக்கு இயேசு மனிதனாக வந்தார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் செய்த பாவமே இன்று நாம் எல்லோரும், நமது பிள்ளைகளும் மரிக்க காரணமாகும். இதைப் போக்குவதற்காகவே ஆதாமிற்கு பதிலாக இயேசு தன் இன்னுயிரை ஈடுபலியாகக் கொடுக்க முன் வந்தார். யோனா தீர்க்கத்தரிசி எப்படி பெரிய மீனின் வயிற்றில் 3 நாட்கள் இருந்தானோ, அதேபோல் இயேசுவும் மூன்று நாட்கள் பூமியில் மரித்த நிலைமையில் இருந்து, பிற்பாடு உயிர்த்தெழுவார். மத்தேயு 12:40.



# இயேசுவின் கால்கள் கழுவப்படுதல்

ஒரு நாள் இயேசு தன்னைப் பின்பற்றுவர்களோடு இரவு நேர உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு பெண் அவர் அறையினில் நுழைந்து, அவருடைய கால்களைக் கழுவத் தொடங்கி, தன் தலைமுடியால் அவருடைய காலைத் துடைத்தாள். அவருடைய சீடர்களுக்கு இது மிக ஆச்சரியமாக இருந்தது. ஏன் அவளை அப்படி இயேசு செய்ய அனுமதித்தார் என்று எல்லோரும் வியந்தனர். ஆனால் அவளோ இயேசுவால் குணப்படுத்தப்பட்டவள். இதனால் தன்னுடைய நன்றியை அவருக்குத் தெரிவிக்க இப்படியாக செய்தாள். வஞ்சிக்கிற ஆவிகள் அவளிடம் இருந்து விரட்டியடிக்கப்பட்டது. இவை எதை உணர்த்துகிறது என்று உங்களுக்கு தெரிகிறதா?

ஜலப்பிரளயத்தின் கதைக்கு நாம் பின் செல்வோம். விழுந்து போன தூதர்கள் மனிதனாக உருமாறி, மனித பெண்களை மணந்து, பெரிய பாவிகளாக மாறினார்கள். இன்றும் விழுந்து போன தூதர்கள், மக்களுக்கு துன்பம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள். செய்யக்கூடாது என்று நினைக்கும் காரியங்களையே, ஜனங்களை செய்யும் படியாக இவர்கள் உந்துதல் கொடுப்பார்கள். இந்த ஏழை ஜனங்களோ அவர்களுக்கு உதவ முடியாது. இது தான் அப்பெண்ணுக்கு நடந்த காரியமாகும். வஞ்சிக்கிற பொல்லாத ஆவிகளின் பிடியில் இருந்து, இயேசு அவளை காப்பாற்றினார். இந்த ஆவிகள் இன்றும் ஜனங்களை தாக்கிக் கொண்டுதான் இருக்கிறது. இதனால்தான் நாம் சூனியக்காரர்களிடம் எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது. இவர்கள் மூலமாகவே இந்த ஆவிகள் ஜனங்களை பயமுறுத்தி வருகிறது. இந்த பொல்லாத ஆவிகள் மீது இயேசுவிற்கு இன்றளவும் வல்லமை உள்ளது. லூக்கா 7:37, 38.



# கைம்பெண்ணின் மகனை உயிர்த்தெழுப்புதல்

இயேசு செய்த அதிசயங்கள் எல்லாவற்றையும் விட, மிகவும் சிறந்த அதிசயம் மரித்த நிலையில் இருப்பவனை உயிர்த்தெழுப்பியது ஆகும்.

ஒரு நாள் இயேசு "நாயீன்" என்ற ஊருக்கு சென்று கொண்டிருக்கும் போது, அங்கு மரித்துப்போன தம் ஒரே மகனுக்காக, கைம்பெண் ஒருவள் அழுது கொண்டிருந்தாள். அதனைப் பார்த்து மனம் உருகின இயேசு, அவளை நோக்கி "அழாதே" என்று கூறினார். பாடை அருகே சென்று இறந்துபோன வாலிபனை நோக்கி எழுந்திரு என்றார். உடனே அந்த வாலிபன் உயிர்தெழுந்து, உட்கார்ந்து, பேசத் தொடங்கினான்!

அந்நாளில் அந்த தாய் எவ்வளவு சந்தோஷமடைந்திருப்பாள் என்று நினைத்து பார்க்க முடிகிறதா? தன் துயர் நீக்கப்பட்டதால் அந்த தாய் மிகுந்த மகிழ்ச்சியடைந்திருப்பாள். இந்த பெரிய அதிசயத்தை பார்த்த அனைவரும், இயேசு என்ற தீர்க்கத்தரிசி தேவனால் அனுப்பப்பட்டவர் என்று நம்பினார்கள். லூக்கா 7:11,17

இவை உண்மையில் நடக்கவில்லை என்று இயேசுவின் எதிரிகள் நம்பியதை நாம் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த வாலிபன் சாகவில்லை, மாறாக தூங்கியிருப்பான். அவனை இயேசு எழுப்பி இருப்பார் என்று எதிரிகள் நிச்சயமாக சொல்லியிருக்கக்கூடும். தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கத்தரிசி இயேசு இல்லை என்று அவரின் எதிரிகள் நம்பினர். இயேசு பொய்யர் என்றும் அவர்கள் நினைத்தனர்.

குணப்படுத்தப்பட்ட மற்றும் உயிர்த்தெழுப்பப்பட்ட மக்களுக்காக இயேசுவின் எதிரிகள் சந்தோஷப்படவில்லை. ஏழைகளுக்கு இயேசு உணவுக் கொடுத்ததைப் பார்த்து அவர்கள் சந்தோஷப்படவில்லை. அவர்கள் மோசமாக இருப்பதை இயேசு காண்பித்ததால், அவரை வெளியேற்ற வேண்டும் என்று இயேசுவின் எதிரிகள் விரும்பப்பட்டனர்.



# லாசரை உயிர்த்தெழுப்புதல்

ஒரு நாள் இயேசு பிரயாணம் செய்யும்போது, செய்தி சொல்பவன் ஒருவன் அவரிடம் வந்து, அவருடைய நண்பன் நோய்வாய்ப் பட்டிருப்பதாக கூறினான். அந்த நண்பனின் பெயர் லாசர் ஆகும். ஆனால் லாசரை குணப்படுத்த இயேசு உடனே செல்லவில்லை. மேலும், இரண்டு நாள் அங்கே தங்கினார். அதன் பின்னரே லாசரையும், அவன் சகோதரிகளையும் சந்திக்க இயேசு புறப்பட்டார். அவருடைய சீடர்களைப் பார்த்து லாசர் தூங்கிக் கொண்டிருப்பதாகக் கூறினார். உண்மையில் லாசர் இறந்து போனதையே இயேசு அவ்வாறாகக் கூறினார். ஏனெனில் இறப்பும் ஒரு தூக்கத்தைப் போலத் தான் இருக்கும். இறந்த போன மனிதன் இளைப்பாறுதலில் இருந்து கொண்டு, மீண்டும் விழிக்கிற வரைக்கும் ஒன்றும் தெரியாமல் இருக்கிறான். யோவான் 11.



இயேசு அங்கு சென்றபோது லாசர் ஏற்கனவே இறந்து, நான்கு நாட்களுக்கு முன்னதாகவே அடக்கம் செய்யப்பட்டிருந்தான். லாசருவின் சகோதரி மார்த்தாள் கூறுகையில், நீர் இங்கே இருந்திருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்று இயேசுவைப் பார்த்து கூறினாள். லாசர் மரித்த நிலையிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவான் என்று இயேசு மார்த்தாளைப் பார்த்துக் கூறினார். தேவனுடைய இராஜியத்தில் மரித்த நிலையில் இருக்கும் லாசரு உயிர்பிக்கப்படுவான் என்று மார்த்தாளிற்கு முன்னதாகவே தெரியும். ஆனால் அவன் இப்போதே உயிர்ப்பிக்கப் பட வேண்டும் என்று மார்த்தாள் விரும்பினாள்! லாசரு மற்றும் அவனின் குடும்பத்தாருக்காக இயேசு அழுததால், மக்கள் அனைவரும் சோகமானார்கள். லாசரின் கல்லறைக்கு அழைத்துச் செல்லும்படி இயேசு கூறினார். கல்லறை முன்பு இயேசு நின்று, ஜெபம் செய்து, "லாசருவே, வெளியே வா" என்று கூப்பிட்டார். லாசரு உயிரோடு எழுந்து வந்தான்!! அவன் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்ததால், அவிழ்த்துவிட வேண்டியதாயிற்று. ஆனால் அவன் உயிரோடு இருந்தான்! யாரும் இந்த அதிசயத்தை மறுக்க முடியாது. இதனை பார்த்த அனைவரும் இயேசு தேவனிடம் இருந்து வந்தவர் என்று விசுவாசிக்கத் தொடங்கினார்கள்!

# இயேசு எருசலேமிற்கு செல்லுதல்

எருசலேமில் இயேசு மரிக்கவேண்டும் என்ற தேவனின் சித்தத்தை அவர் முன்னமே அறிந்திருந்தார். அதனால் அங்கு செல்லத் தயாரானார். இஸ்ரயேலில் எருசலேம்தான் பெரிய நகரமாகும். 500 வருடங்களுக்கு முன்னர் தம்முடைய அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வந்த இஸ்ரயேல் மக்கள், அங்கு தான் தேவனுடைய ஆலயத்தைக் கட்டினார்கள். இயேசு எருசலேமுக்குள் சென்றவுடன், நிறைய பேர் கூடி வந்து அவருடைய பெயரைச் சொல்லி,வழி முழுவதும் குருத்தோலைகளை பரப்பி வைத்து, அவருடைய கழுதை நடக்க வழி விட்டனர். ''கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரயேலின் ராஜா ஸ்தோத்தரிக்கப்பட்டவர்'' என்று ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். வேதபாரகர்களும், போதகர்களும் இயேசு மீது பொறாமை கொண்டிருந்தார்கள். மக்களால் இயேசு அதிகமாக விரும்பப்படுகிறார் என்பதை அவர்கள் விரும்பவில்லை.

இயேசு சிலரை குணப்படுத்தி, சிலரை உயிர்த்தெழுப்பி, உணவளித்து, ஊக்கப்படுத்துவதால் மக்கள் அனைவரும் சந்தோஷப்பட்டார்கள் என்று நீங்கள் நினைக்க தோன்றும். ஆனால், இயேசு மிகுந்த பிரசத்திப் பெற்றவராக இருந்ததால், அவர்கள் அவரை வெறுத்தார்கள். அவரை கொலை செய்ய வழிவகை செய்ததை இயேசு நன்கு அறிந்திருந்தார். தேவனுடைய சித்தத்தின்படி தாம் மரிக்க வேண்டும் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

யோவான் 12 :12 -19.



# அப்போஸ்தலர்களின் கால்களை இயேசு கழுவுதல்

ஒரு வாரம் கழித்து, பஸ்காவை அனுசரிக்க மக்கள் தயாரானபோது, இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் எருசலேமில் பஸ்காவை அனுசரிக்கத் தயாரானார்கள். பத்து வாதைகளுக்கு பிறகு, இஸ்ரேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறும் சமயத்தில் நடந்த பஸ்காவின் கதையை சற்று நினைத்துப் பாருங்கள்? இன்றும் இஸ்ரயேல் மக்கள் அந்த பண்டிகையை ஒவ்வொரு வருடமும் அதே நேரத்தில் அனுசரித்து வருகின்றனர்.

ஒரு குடும்பம் போல இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் அன்று இரவில் கூடினார்கள். தான் இறக்கப்போவதைக் குறித்து இயேசு அவர்களுக்கு அடிக்கடி கூறி வந்தார். இதைக் கேட்டு அப்போஸ்தலர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். ஏன் இயேசு இதையே அடிக்கடி கூறுகிறார் என்று அறியாமல் இருந்தார்கள். அவர் நிச்சயம் இறக்கக்கூடாது என்று அப்போஸ்தலர்கள் குறியாக இருந்தனர்.

அப்போஸ்தலர்கள் சாப்பிடுவதற்கு முன்னே இயேசு எழுந்து, அவர்களுடைய கால்களைக் கழுவத் தொடங்கினார். இந்த வேலையை ஊழியர்கள் தவிர வேறுயாரும் செய்யமாட்டார்கள் என்று மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவும், கவனித்துக் கொள்ளவும் வேண்டும் என்று இயேசு அவர்களுக்கு இப்பாடத்தின் மூலமாக முன்னுதாரணத்தைக் காட்டினார். யோவான் 13:6.



# மிக முக்கியமான விருந்து

சீஷர்களின் பாதத்தை இயேசு கழுவின பின்பு, ஒன்றாகச் சாப்பிட ஆரம்பித்தார்கள். இஸ்ரயேலர்கள் தங்களுடைய முதல் பஸ்காவை அனுசரித்தது போல அவர்களும் ஆட்டுக்குட்டியை சமைத்து சாப்பிட்டார்கள். ஆனால் இதன் பின், மிகுந்த சிறப்பான ஒரு காரியத்தை இயேசு செய்தார். இயேசு அப்பத்தை எடுத்து, அனைத்து அப்போஸ்தலர்களும் பிட்டு சாப்பிடும் படி கொடுத்தார். தன்னுடைய சரீரத்தை அவர்கள் சாப்பிடுவதாக இயேசு சொன்னார். பின்பு இயேசு திராட்சரசத்தை எடுத்து. அப்போஸ்தலர்கள் குடிக்கும்படி கொடுத்தார். தன்னுடைய இரத்தத்தை அவர்கள் பருகுவதாகக் கூறினார்.

இயேசுவின் உண்மையான உடலையும், இரத்தத்தையும் அப்போஸ்தலர்கள் சாப்பிடார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஆனால் இல்லை. இவை மிக முக்கியமான வேறொன்றை நமக்கு உணர்த்துகிறது. அதாவது இயேசுவை பின் பற்றுவதால், அவருடைய சரீரம் மற்றும் இரத்தத்தில் அங்கமாகி, அனைவரும் ஒரே உடலாக இருப்பதை காண்பித்தார். அவர்கள் எல்லோரும் இயேசுவின் அங்கமாகவும் அவருடைய ஊழியத்தில் அங்கமாகவும் இருப்பதையும் அப்போஸ்தலர்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்று விருப்பப்பட்டார்.

இயேசுவின் மரணத்திற்கு முன், அவர்களோடு அவர் சாப்பிட்ட கடைசி விருந்து அதுவாகும். தன்னுடைய மரணத்தை ஒவ்வொரு வருடமும் நினைவு கூற வேண்டும் என்றும் நம்மை இவ்வாறாகச் செய்ய சொன்னார். இயேசுவை பின் பற்றுபவர்கள் இன்றளவும் பஸ்காவை ஒவ்வொரு வருடமும் அனுசரித்து வருகிறார்கள்.

மத்தேயு 26 :17-30



# இயேசுவின் கடைசி ஜெபம்


கடைசி இரவு விருந்தை அவர்கள் முடித்தவுடன், எல்லோரும் சேர்ந்து கெத்சமெனே தோட்டத்திற்குச் சென்றனர். மிகவும் அமைதியான இடமாக இருந்ததால், பிதாவாகிய தேவனை நோக்கி ஜெபம் பண்ண இயேசு அவ்விடம் செல்ல விருப்பப்பட்டார். தாம் கூடிய விரைவில் இறக்கப் போகிறோம் என்பதை அறிந்து, தேவனிடம் இதைக் குறித்து பேச விருப்பப்பட்டார்.

பூமியில் மனிதக் குழந்தையாக பிறப்பதற்கு முன்னே, தாம் இறப்பது நிச்சயம் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனாலும் அவை பயமுறுத்தும் காரியமாகவே இருந்தது. தேவன் செய்யச் சொன்ன அனைத்து காரியங்களையும் தாம் நிறைவேற்றி முடித்துள்ளதை உறுதிப்படுத்த விருப்பப்பட்டார். உலகத்தில் உள்ள அனைத்து காரியங்களை விட, தன்னுடைய பிதாவை மறுபடியும் பார்க்க ஆவலாக இருந்தார்.

தேவன் செய்யச் சொன்ன அனைத்து காரியங்களையும் வெற்றிகரமாக முடித்திருந்தால் மட்டுமே, தாம் உயிர்தெழுந்து திரும்பவும் வரமுடியும் என்று நிச்சயமாக இயேசு அறிந்திருந்தார். இதற்கு முன்னர் இருந்ததை விட அவர் அதிக மகத்துவத்தையும், வல்லமையையும் பெற உள்ளார்.

ஆனாலும் பூமியில் உள்ள அனைத்து மக்களை பாவம் மற்றும் மரணத்தில் இருந்து தம்மால் காப்பாற்ற முடியுமா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள விருப்பப்பட்டார். அதனாலே இயேசு இப்பூமிக்கு ஒரு பரிபூரண மனுஷனாக முதன்மையாக வந்தார்.

அவருடைய ஜெபத்திற்கு பதில் அளிக்கும் வகையில், தேவன் ஒரு தூதனை அனுப்பி அவரைத் தேற்றினார். மத்தேயு 26 : 36.



# இயேசு கைது செய்யப்படுதல்


கெத்சமெனே தோட்டத்தில் இயேசு ஜெபம் செய்து கொண்டிருக்கும் போதே, அவரைக் கைது செய்ய வீரர்கள் வந்தனர். அப்போஸ்தலர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத் அவர் இருக்கும் இடத்தை வீரர்களுக்குச் சொன்னான். வேதபாரகர்களும், போதகர்களும் இயேசுவின் மீது பொறாமை கொண்டதால், அவரைக் கொலை செய்ய எண்ணினார்கள். அவர்களோடு இயேசு முழு விருப்பத்தோடே சென்றார்.

இதுவே தேவனுடைய சித்தம் என்று இயேசுவிற்கு நன்கு தெரியும். ஆனால் அப்போஸ்தலர்களோ குழம்பி, பயந்துப் போனார்கள். அவர்கள் எல்லோரும் இயேசுவைத் தனியாக விட்டு ஓடிப்போனார்கள். இது நிச்சயம் நடக்கும் என்று இயேசுவும் நன்கு அறிந்திருந்தார். அவர்களை எச்சரிக்க இயேசு முயற்சி செய்தார், ஆனாலும் தேவனுடைய திட்டத்தை அவர்கள் இன்னும் அறியவில்லை.

இயேசு கைது செய்யப்பட்டு, போர் வீரர்களால் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் எந்த தவறும் செய்யாததால், வேதபாரகர்களும் போதகர்களும் இயேசுவின் மீது பொய்ப் பழியைச் சுமத்தினார்கள்.

இயேசு தனக்கென்று வாதாடமல் அமைதியாக இருந்தார். ஏனெனில் ஆதாமிற்கு பதிலாக அவர் ஈடுபலியாக மரணமடைய வேண்டியதாயிற்று.

அவருடைய எதிரியான சாத்தானும், அவர் இறக்க வேண்டும் என்று எண்ணினான். தேவனுடைய திட்டத்தில் இவை எல்லாம் இருந்ததால், இவை நடக்கும்படி தேவன் அனுமதித்தார். மத்தேயு 26:49



# இயேசு நியாயம் தீர்க்கப்படுதல்

இயேசுவைக் கைது செய்த போர் வீரர்கள், அவரை நேராக பிரதான ஆசாரியன், வேதபாரகர்கள் மற்றும் போதகர்களிடமும் கொண்டுச் சென்றார்கள். தேவனுடைய ஊழியக்காரர்களாக இவர்கள் எல்லோரும் இருப்பதால், இயேசுவிடம் அன்பு செய்திருப்பார்கள் என்று நீங்கள் எண்ணலாம். இயேசு தேவனுடைய குமாரன் என்பதை அவர்கள் நம்பவில்லை ஆனால் இயேசு தம்மை தேவனுடைய குமாரனாகக் கருதிக் கொண்டு, மக்களை ஏமாற்றுகிறார் என்று அவர்கள் நினைத்தார்கள். எப்படி இவ்வளவு அற்புதமான அதிசயங்களை இயேசு செய்தார் என்று அவர்களால் விளக்க முடியவில்லை. ஆனால் அதனைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

எருசலேமை ஆண்டு வந்த ரோம ஆட்சியாளர் பிலாத்துவிடம் இயேசுவை கொண்டு போனார்கள். இயேசு மீது பொறாமைக் கொண்டதால், அவருக்கு எதிராக ஜனங்கள் உள்ளதை பிலாத்து அறிந்தான். இயேசு தவறாக எதையும் செய்யவில்லை என்பதை பிலாத்து நன்கு அறிந்தான். அதனால் இயேசுவை காப்பாற்ற பிலாத்து விரும்பினான். ஆனால் வேதபாரகர்களும், போதகர்களும் இயேசு கொல்லப்பட வேண்டும் என்று எதிர்ப்பார்த்தார்கள். இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்று கூறினார்கள். மக்களை ஏவிவிட்டு, இயேசுவை கொலை செய்ய வழிவகை செய்தார்கள்.



மக்கள் மிகவும் கோபம் அடைந்ததால், தனக்கு எதிராக புரட்சி வெடிக்கும் என்று பிலாத்து பயந்தான். அதனால் இயேசுவை சிலுவையில் அறைய ஒத்துக்கொண்டு அனுப்பி வைத்தான். மத்தேயு 27:1-26

# இயேசு சிலுவையைச் சுமந்து செல்லுதல்

யாராவது சிலுவையில் அறையப்பட வேண்டுமென்றால், அவனுடைய கையும், காலும் மரத்தினால் ஆன சிலுவையில் ஆணிகளை கொண்டு அடிக்கப்படும். மிக பலமான மரத்திலான சிலுவையை, அவர் சுமந்துக் கொண்டு எருசலேம் வழியாக சென்று குற்றவாளிகள் சிலுவையில் அறையப்படும் இடம் வரை செல்ல வேண்டும். அந்த நாளில் இயேசுவும், இரண்டு குற்றவாளிகளும் சிலுவையில் அறையப்பட இருந்தார்கள்.

இயேசு ஒரு குற்றவாளி இல்லை.அவர் தேவனுடைய குமாரன் ஆவார். ஆனால் மக்களும், வேதபாரகர்களும் இதனை நம்பவில்லை.இயேசு பொய் சொல்கிறார் என்று நினைத்தார்கள்.அவர் பொய் சொல்வதாக எண்ணியதால், இயேசு கொலை செய்யப்பட வேண்டும் என்று நினைத்தார்கள்.


இவை நிச்சயமாக நடக்கும் என்று தேவன் அறிந்திருந்தார். தம்முடைய குமாரனைக் கொன்ற மக்களையும் தேவன் மன்னித்தார். ஆதாமிற்கு ஈடாக இயேசு இடம் பிடிப்பார் என்றும் தேவன் அறிந்திருந்தார். ஆதாமிற்கு ஈடாக இயேசு மரிக்கப் போவதால், ஆதாமும் அவருடைய பிள்ளைகளும் பாவம் மற்றும் மரணத்தில் இருந்து தப்பிக்கலாம் என்றும் தேவன் அறிந்திருந்தார். 1 கொரிந்தியர் 15 : 21, 22.



# இயேசு சிலுவையில் அறையப்பட்டார்

இயேசுவும், அந்த இரண்டு குற்றவாளிகளும் சிலுவையில் அறையப்பட்டார்கள். இயேசு மரணம் அடையும் சமயத்தில், அவர் தாயார் மரியாள் அவ்விடத்திற்கு வந்தாள். அப்போஸ்தனாகிய யோவானும் அவளோடு இருந்தார். இயேசுவைப் பின்பற்றி வந்த மற்றவர்களும் அங்கிருந்தார்கள். அந்த நாள் அவர்களுக்கு பயங்கரமான நாளாக அமைந்தது. மிகவும் குழம்பிப் போயிருந்தார்கள். என்ன தான் தாம் இறக்கப் போவதாக இயேசு சொன்னாலும், அவர்கள் அதை எதிர்ப்பார்க்கவில்லை. அவர்கள் பிரமித்தும், குழம்பியும் போனார்கள். இயேசு ஒரு இராஜாவாகி, தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து, ரோமர்கள் மற்றும் அவர்களுடைய சட்டங்களில் இருந்து தங்களை காப்பாற்றுவார் என்று நினைத்திருந்தனர்.

ஆனால் அதற்கு மாறாக, இயேசு இறந்து கொண்டிருந்தார். ரோமர்கள் மற்றும் அவர்களின் சட்டங்களை விட மிகவும் மோசமான காரியங்களில் இருந்து அவர்களை விடுதலை செய்யப்போகிறார். பாவம் மற்றும் மரணத்தில் இருந்து அவர்களை விடுதலை செய்யப்போகிறார். ஆனால் முதலில் இயேசுவோ மூன்று நாட்கள் மரண நிலைமையில் இருக்க வேண்டும்.



இயேசு இறப்பதற்கு முன்பு, ஆறு மணி நேரம் ஆனது. இயேசு இறந்தவுடன் அவரின் உடலை எடுத்து, அடக்கம் செய்ய வேண்டும் என்று பணக்காரனாகிய யோசேப்பு பிலாத்துவிடம் கேட்டான். இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டு போகும்படி, பிலாத்துவும் யோசேப்புக்கு உத்தரவு கொடுத்தான்.

மத்தேயு 27 : 35-57

# இயேசு புதைக்கப்படுதல்

இயேசுவின் உடலை புதைக்கச் சென்ற யோசேப்போடு, நிறைய பேர் வந்தார்கள். இயேசுவின் உடலை எங்கு எடுத்துச் செல்லப் போகிறார்கள் என்று அவரை பின்பற்றியவர்கள் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். இயேசுவின் உடலை அன்று புதைப்பதற்கும் அவர்களால் கூடாமற்போயிற்று. ஏனெனில் அன்று ஓய்வு நாளாக இருந்தது. பத்துக் கட்டளைகள் குறித்த பாடத்தை சற்று நினைத்துப் பாருங்கள்? அந்த பத்து கட்டளைகளுக்குள் ஒன்று ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசாரிக்க வேண்டும் என்பதாகும். அவை எதை உணர்த்துகிறது என்றால், அந்நாளில் யாரும் வேலை செய்யக் கூடாது என்பதே. அந்த நாள் ஓய்வு எடுப்பதற்கும் மற்றும் தேவனை வணங்குவதற்கும் முக்கிய நாளாக அமைந்தது. மத்தேயு 27:55-60

வெள்ளிக்கிழமை மதியானம் சுமார் 3 மணி அளவில் இயேசு இறந்தார். ஓய்வு நாளின் சாயங்காலம் 6 மணிக்கு ஆரம்பமாகும். இந்த இடைப்பட்ட நேரத்தில் இயேசுவின் உடலை எங்கு புதைக்க வேண்டும் என்று எண்ணி பார்ப்பதற்கே சற்று நேரம் மட்டும் தான் இருந்தது. இதன் பின் அவர்கள் அனைவரும் வீட்டிற்கு விரைவாக சென்று ஓய்வு நாளை ஆசாரிக்க வேண்டும்.



மிக இக்கட்டான ஓய்வு நாளாக, அந்நாள் அவர்களுக்கு அமைந்து இருக்கும். இயேசு சிலுவையில் இறந்த பிறகு, அவருடைய உடலைப் புதைக்க தயார்செய்வதற்கு கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. மிகவும் குழம்பி, சோகமானார்கள். இதனைப் பற்றி புரிந்து கொள்ள, நிச்சயம் அவர்கள் ஒன்றாக அந்நாள் முழுவதும் இருந்திருப்பார்கள்.

# இயேசுவின் உயிர்த்தெழுதல் !

அடுத்த நாள் அதிகாலையில், இயேசுவின் கல்லறைக்கு அவரைப் பின்பற்றின சில பேர் சென்றனர். அவருடைய உடலை மெல்லிய துணியாலும், சுகந்த வர்க்கத்தைக் கொண்டும் மூட அவற்றை கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் அங்கு வந்த பார்த்த போதோ, கல்லறைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த பெரிய கல் நகர்த்தப்பட்டிருந்ததைக் கண்டார்கள். அவர்கள் உள்ளே சென்று பார்க்கும்போது, இயேசுவின் உடல் அங்கு இல்லை. பிரேதச்சீலை மட்டும் கல்லறையில் இருந்தது. இயேசுவைச் சுற்றி வைக்கப்பட்டிருந்த மெல்லிய துணியும் கல்லறையில் அப்படியே இருந்தது. ஆனால் உடல் அங்கில்லை! இதன்பின் பிரகாசிக்கக் கூடிய வெள்ளை அங்கியை அணிந்திருந்த தூதனை அவர்கள் கண்டார்கள்.

அத்தூதன் பெண்களை பார்த்து, "இயேசு அங்கில்லை, அவர் உயிர்த்தெழுந்து விட்டார்" என்று கூறினார். இந்த செய்தியை அப்போஸ்தலரிடம் சொல்லுங்கள் என்றும் அந்த தூதன் அவர்களுக்கு சொன்னார். அந்த பெண்கள் மிகவும் சந்தோஷமடைந்தார்கள்! தூதனையும், அவர் சொன்ன செய்திகளையும் கேட்ட அவர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்பதை சற்று நீங்கள் நினைத்துப் பாருங்கள்? அப்போஸ்தலர்கள் கூடுகிற இடத்திற்கு அவர்கள் சென்று இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை பரப்பினார்கள். ஆனால் அப்போஸ்தலர்களோ அதனை நம்பவில்லை.

மாற்கு 16 : 1 – 8



# காலியாக இருந்த கல்லறை

இந்த செய்தியைக் கேட்டவுடன், அப்போஸ்தலராகிய பேதுருவும் மற்றும் யோவானும் விரைவாக ஓடி, அந்தப் பெண்கள் எதை பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணப்போனார்கள். அவர்கள் அங்கு தூதனைக் காணவில்லை, மாறாக இயேசுவின் உடலை சுற்றி வைக்கப்பட்டிருந்த பிரேதச் சீலை அவரின் உடல் அமைப்பு போன்று இருப்பதைக் கண்டார்கள். இதனால் இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்று நம்பினார்கள். இந்தக் காரியத்தை பார்க்கும் போது, உங்கள் மனம் நிச்சயம் ஒத்துக் கொள்ளும் அல்லவா? அதன்பின் அவர்கள் தங்கள் வீட்டிற்குச் சென்று விட்டனர்.

ஆனால் இயேசுவைப் பின்பற்றுபவளாகிய மகதலேனா மரியாள், கல்லறையருகே நின்று, அழுதுக் கொண்டிருந்தாள். இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்பதை இன்னும் புரிந்து கொள்ளாமல் இருந்தாள். அவள் கல்லறைகுள் பார்க்கும் போது, இயேசுவின் உடலை வைத்த இடத்தில், வெண்மையாக இருந்த இரண்டு தூதர்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் அவளை பார்த்து ஏன் அழுகிறாய் என்றனர். அதற்கு அவளோ, இயேசுவின் உடலுக்கு என்ன ஆனது என்று தூதர்களைப் பார்த்துக் கேட்டாள். இதன் பின்பு அவள் திரும்பி பார்க்கையில், இயேசு நிற்கிறதை கண்டாள். அப்போது இயேசு அவளை "மரியாளே" என்று அழைத்தார். உடனே அவள் தன்னை அழைத்தவர் இயேசு என்பதைத் தெரிந்துக் கொண்டாள்.

யோவான் 20:10 - 16



# எம்மாவுக்கு போகிற சாலை

அந்த நாளுக்கு பிறகு, இயேசுவைப் பின்பற்றி வந்த இருவர் எம்மாவு என்கிற ஊருக்கு செல்லக்கூடிய சாலையில் நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் அவர்களிடம் வந்து, அவர்களுடனே நடந்து வந்தார். ஏன் சோகமாக இருக்கிறீர்கள் என்று அவர்களிடம் அந்த மனிதன் கேட்டார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகிய இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றி அந்த மனிதன் எதுவும் தெரிந்திருக்கவில்லை என்று எண்ணி அவர்கள் மிகவும் வியந்தார்கள்.

உண்மையில் அந்த மனிதன் வேறு யாருமில்லை, உயிர்த்தெழுந்த இயேசு ஆவார். ஆனால் அவர்களால் அவரை அறிந்து கொள்ள முடியவில்லை. இயேசு ஒரு மனிதனாக உயிர்த்தெழுப்படவில்லை. மாறாக வல்லமையுள்ள ஆவியின் ஜீவியாகவே உயிர்த்தெழுந்தார். அவர்களால் கண்டுப்பிடிக்க முடியாத உடலைக் கொண்டு தோன்றினார். நம்முடைய அப்பாவாகிய ஆதாமிற்கு ஈடாக இயேசு ஒரு மனிதனாக தம் உயிரையே கொடுத்தார். நிஜத்தில் நிறைவேறின பல்வேறு வேதாகம தீர்க்கத் தரிசனங்களை அவர்களுக்கு அவர் கூறினார். அவர் தம்மைப் பற்றிய தீர்க்கத்தரிசனத்தைக் கூறி, கிறிஸ்து பாடுபட்டு இறக்க நேரிடும் என்று அவர்களுக்குக் கூறினார்.



அவர்கள் விடுதிக்கு வந்தவுடன், அவர்களுடன் சேர்ந்து அப்பத்தை பிட்டார். அதன்பின் மறைந்து போனார். இதன் பின்னர், கர்த்தர் என்று அவர்கள் தெரிந்து கொண்டார்கள்!

லூக்கா 24 : 17-27

# இயேசு தோன்றுதல்

அந்த ஞாயிற்றுக்கிழமை சாயங்காலத்திற்கு பிறகு, இயேசுவை பின் பற்றுபவர்கள் ஓர் இடத்தில் கூடிச் சேர்ந்து, கதவை தாழிட்டு உள்ளே இருந்தார்கள். அவருடைய சீடர்களாக இருந்ததற்கு கைது செய்யப்படுவோம் என்று பயந்தார்கள். திடீரென்று இயேசு அவர்கள் நடுவே தோன்றி "சமாதானம் உங்களோடு இருக்கக்கடவது" என்றார். நீங்கள் நினைப்பது போல் அவர்கள் அனைவரும் வியந்து மிக்க மகிழ்ச்சியாய் இருந்திருப்பார்கள். தன் கையில் இருந்த சிலுவையின் ஆணியால் ஏற்பட்ட காயங்களை அவர்களுக்கு இயேசு காட்டினார். இயேசு ஒரு வல்லமைபெற்ற ஆவியின் ஜீவியாக இருப்பதை சற்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் அடையாளம் காணத்தக்கதாக உடலை கொண்டு அவர்கள் முன் தோன்றினார். இதன் மூலமாக மரித்த நிலையிலிருந்து தாம் உயிர்த்தெழுந்துவிட்டதை, அவர்கள் நம்ப வேண்டும் என்பதற்காகவே இப்படி செய்தார். ஆனால் ஒரு அப்போஸ்தலர் அங்கில்லாமல் இருந்தார். அவர் பெயர் தோமா. அப்போஸ்தலர்கள் நடுவே இயேசு தோன்றினார் என்ற செய்தியை கேட்ட போது அவர் நம்பவில்லை. இயேசுவை தன் கண்களால் கண்டால் மட்டுமே நம்புவதாக தோமா கூறினார்.



ஒரு வாரம் கழித்து இயேசு மறுபடியும் அவர்களிடம் தோன்றும் போது, தோமாவும் அங்கு இருந்தான். தன் காயங்களைத் தொட்டுப் பார்க்கும்படி இயேசு தோமாவை பார்த்துக் கூறினார். இதனால் உயிர்த்தெழுந்த இயேசு இவர்தான் என்று தோமா நம்புவார்!

*யோவான் 20 : 24-29*

# இயேசு பரலோகத்திற்கு ஏறி செல்லுதல்

தாம் உயிர்த்தெழுந்த நாளிலிருந்து, இயேசு அவர்களுக்கு 11 தடவை தோன்றியுள்ளார். சிலசமயம் அவர்கள் எல்லோரும் இருக்கும்போது தோன்றியுள்ளார். சிலசமயம் ஒரே ஒரு அப்போஸ்தலன் மட்டும் பார்க்கத் தோன்றியுள்ளார். அவர் உயிர்த்தெழுந்த பின், 40 நாட்கள் கடந்த சென்றது. தம்முடைய பிதாவாகிய தேவனிடம் செல்ல இயேசு தயாரானார். அப்போஸ்தலர் களுடன் இருக்கும் சமயத்தில், அவர்களில் சிலர் இராஜியம் எப்போது அவரால் ஸ்தாபிக்கப்படும் மற்றும் இஸ்ரயேல் மீண்டும் ஒரு தேசமாக எப்போது உருவாகும் என்று இயேசுவிடம் கேட்டார்கள். அந்த காலம் பற்றிய இரகசியம் பிதாவிற்கு மட்டுமே தெரியும் என்று அவர்களிடம் இயேசு கூறினார். அந்த காலம் எப்போது வரும் என்று இயேசுவிற்கு இன்னும் தெரியவில்லை. தேவனிடம் இருந்து வல்லமை பெறும் வரைக்கும், எருசலேமிலே தங்கும்படி இயேசு அவர்களிடம் கூறினார். இதன்பின்பு, உடனே இயேசு வானத்தின் மேலே சென்றார். இயேசு வானத்தின்மேல் செல்வதை அவர்கள் அனைவரும் கண்டார்கள். அதன் பின் மேகங்கள் அவரை சூழ்ந்ததால், அவர்களால் இயேசுவைப் பார்க்க முடியவில்லை. என்ன ஒரு விநோதமான காட்சியாக இவை இருந்திருக்கும்! இதன் பிறகு தாம் இனிமேலும் தோன்றப் போவதில்லை என்பதை அவர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று இயேசு விருப்பப்பட்டார்.



அவர்கள் அங்கேயே நின்றுக் கொண்டு வானத்தை பார்த்துக் கொண்டிருந் தார்கள். அப்போது இரண்டு தூதர்கள் அவர்கள் முன் தோன்றினர். இனிமேல் வானத்தைப் பார்ப்பதால் ஒன்றும் ஆகப்போவதில்லை என்று கூறினார்கள். இதனால் அவர்கள் எருசலேமிற்குத் திரும்பி, அங்கு காத்திருந்தார்கள்.

அப்போஸ்தலர் 1:4-11

# அப்போஸ்தலர்கள் வல்லமையை பெறுதல்

இயேசு கூறினபடி, அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் எருசலேமில் காத்திருந்தார்கள். 10 நாட்கள் அங்கு காத்திருந்தார்கள். இயேசு பரலோகத்திற்கு ஏறின 10-வது நாளுக்கு பிறகு, எல்லோரும் ஒன்று கூடினார்கள். அந்த நாளில் பெந்தகோஸ்தே பண்டிகை கொண்டாடப்பட்டது. உடனே அங்கு பலத்த காற்று போல அடிக்கிற முழக்கம் ஒன்றை அவர்கள் கேட்டார்கள். அது வீடு முழுவதும் பரவிற்று. அவர்கள் பார்த்து கொண்டிருக்கையில், ஒவ்வொருவர் தலையின்மீதும் அக்கினி இறங்கியது. இங்கு அக்கினியானது, பரிசுத்த ஆவியை அடையாளமாக குறிக்கிறது. தேவனுடைய வல்லமைக்காக காத்திருங்கள் என்று இயேசு அவர்களுக்கு சொன்னதை சற்று நினைத்துப் பாருங்கள். இதுவே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய வல்லமை. இதைக் கொண்டே தேவனுடைய வேலையை அவர்கள் செய்யப் போகிறார்கள்.

தேவனுடைய வல்லமை (அல்லது) பரிசுத்த ஆவியை அவர்கள் பெற்றப்பின், இயேசு தங்களிடம் சொல்ல வந்ததைத் தற்போது புரிந்துக் கொண்டார்கள். மனிதனை பிடிக்கிறவர்களாக உங்களை ஆக்குவேன் என்று இயேசு கூறியதை அப்போது புரிந்து கொண்டார்கள். அவர்கள் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார்கள். மேலும் அவர்களுக்கு அந்நிய பாஷைகள் தெரியாமல் இருந்தாலும், அவற்றை எல்லாம் பேசத் தொடங்கினார்கள். இதுவே அவர்கள் செய்த முதல் அதிசயமாகும். தங்களுக்கு தேவன் என்ன வேலையை வைத்துள்ளார் என்பதை அப்போது அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அப்போஸ்தலர் 2



# சுவிசேஷம் பிரசிங்கப்படுவதின் துவக்கம்

தேவனுடைய இராஜ்யத்தை பூமியில் அமைப்பது இயேசுவிற்கு மிகவும் சுலபமானது என்று அப்போஸ்தலர்கள் நினைத்தார்கள். இஸ்ரயேலில் தொடங்கி, பூமியில் உள்ள அனைத்து தேசங்களிலும் அவற்றின் மீதான வேலை துவங்கும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் அவை நடக்கிறதற்கு முன்னே, சில மிக முக்கியமான வேலைகளை முடிக்க வேண்டும் என்று தற்போதுதான் அவர்கள் அறிய ஆரம்பித்தார்கள். இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றி, பல்வேறு தேசங்களில் இருந்து "அவருடைய நாமத்தில் ஜனங்களை" கொண்டு வர அவர் அழைப்பு விடுத்துள்ளார் என்பதை தற்போது புரிந்து கொண்டார்கள். இந்த ஜனங்களே பரலோகத்தில் இயேசுவின் மணவாட்டியாக இருப்பார்கள். இவர்களே இயேசுவோடு கூட இருந்து இராஜ்யத்தை ஸ்தாபித்து, அவருடனே கூட ஆட்சி செய்வார்கள். அதனால் சாட்சியின் வேலையையும் மற்றும் அதற்கான சீடர்களை எல்லா தேசங்களில் இருந்தும் அழைக்கப்படுவதை உடனே தொடங்கப்பட வேண்டும்.

அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே இந்த வேலை தொடர்ந்து நடைபெற்று கொண்டு வருகிறது. அவர்கள் பிரசிங்கிக்க ஆரம்பித்தார்கள், பரம அழைப்பைப் பற்றி இன்றும் நாம் பிரசிங்கித்து கொண்டு வருகிறோம். இயேசு பூமியில் இராஜியத்தை அமைக்கும் போது, அவருடனே ஆளுகை செய்வதற்காக, அவருடைய மணவாட்டியின் ஒரு பங்காக இருக்க யாரெல்லாம் விருப்பப்படுகிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் நாம் அழைப்பு விடுகிறோம். அப்போஸ்தலர் 2



# அப்போஸ்தலர்கள் குணமாக்குதல்

ஜனங்கள் அப்போஸ்தலர்களை நம்ப வேண்டும் மற்றும் இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டார் என்பதையும் நம்ப வேண்டுமென்றால், இயேசு உபயோகப்படுத்திய அதே வல்லமையை அப்போஸ்தலர்களும் பெறவேண்டும் என்று தேவன் அறிந்து வைத்திருந்தார். இதனால் அப்போஸ்தலர்களுக்கு பல வல்லமைகளையும், செயல் திறன்களையும் தேவன் கொடுத்தார். மரித்த நிலையில் இருந்த பலரை உயிர்த்தெழுப்பி, முடமானவனையும், குருடனையும் குணமாக்கினார்கள். அதிசயத்தக்க வகையில், பல்வேறு மொழிகளைப் பேசினார்கள். மக்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களால் கணிக்க முடிந்தது.

ஒரு நாள் பேதுருவும், யோவானும் ஆலயத்திற்குச் சென்று தேவனை வழிப்பட எண்ணினார்கள். அப்போது ஆலயத்தின் வாயிலில், பிறந்தது முதல் முடவனாக இருக்கும் ஒருவனை பார்த்தார்கள். அவனால் நடக்க முடியவில்லை. பேதுருவையும், யோவானையும் பார்த்தவுடன் அவன் அவர்களிடம் கொஞ்சம் பணம் கேட்டான். ஆனால் பேதுருவோ "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினிலே, நீ எழுந்து நட" என்று அவனை பார்த்து கூறினார்.




உடனே அனைவரும் வியக்கத் தக்க வகையில் அவன் பெலன் கொண்டு, எழுந்து, முதன் முதலாக நடக்க ஆரம்பித்தான். இந்த அதிசயத்தைப் பார்த்து அனைத்து மக்களும் தேவனை மகிமைப்படுத்த ஆரம்பித்தார்கள். ஏனெனில் பல வருடங்களாக அவன் பிச்சை எடுத்து வந்ததை எல்லோரும் அறிவார்கள்.

*அப்போஸ்தலர் 3*

# பேதுரு பரிசுத்த ஆவியைக் கொடுத்தல்

அப்போஸ்தலனாகிய பேதுரு பிரயாணம் செய்து, பிரசங்கம் செய்து கொண்டிருக்கும்போது, அவர் பல கிறிஸ்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, அந்த புது கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரங்களை கொடுத்தார். அப்போஸ்தலர்கள் பெற்ற வரங்களில் இவையும் ஒன்றாகும். அதாவது அடுத்தவர்களுக்கு இவ்வரங்களை பரிசாக அப்போஸ்தலர்கள் கொடுக்கலாம். இதனை எல்லோராலும் செய்ய முடியாது. ஒரு நாள் அப்போஸ்தலராகிய பேதுரு ஒருவன் மேல் கையை வைக்கும்போது, அந்த மனிதன் புதிய மொழியை பேசியதை இன்னொருவன் பார்த்தான். அந்த மனிதனின் பெயர் சீமோன் ஆகும். அவன் நெடுங்காலமாக மந்திரதந்திரங்களை செய்வதன் மூலம் ஜனங்களை வியப்பில் ஆழ்த்தினான்.

இதைப் பார்த்த சீமோனும் அந்த வல்லமையை பெற ஆசைப்பட்டான். அப்போஸ்தலராகிய பேதுருவிடம் இருந்து அவ்வல்லமையை பணம்கொடுத்து வாங்கி விடலாம் என்று நினைத்தான். அப்போஸ்தலராகிய பேதுரு பெரிய மந்திரவாதியாக இருப்பார் என்று எண்ணினான். பரிசுத்த ஆவியினைப் பெறுவதற்காக பேதுருவிடம் பணம் கொடுத்தான். இதனால் அப்போஸ்தலராகிய பேதுரு கடுங்கோபம் கொண்டார். மந்திரங்கள் மூலமாக இந்த வல்லமையை தாம் பெற்றதாக யாரும் நினைத்து விடக் கூடாது என்று பேதுரு நினைத்தார்! இது தேவனால் அவனுக்கு கொடுக்கப்பட்ட வல்லமையாகும். அது விலைக்கு விற்கப்படுவது அல்ல! இதனால் அப்போஸ்தலனாகிய பேதுரு அவனை நோக்கி "உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக் கடவது" என்றார். இதனால் சீமோன் தான் தண்டிக்கப்படாதபடி தனக்காக ஜெபம்செய்யுமாறு அப்போஸ்தலரை கேட்டுக் கொண்டார்!
அப்போஸ்தலர் 8



# சவுல் குருடாகுதல்

சவுல் என்ற பெயர் கொண்ட ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் யூதர்களுக்கு மத்தியில் மிகப் பிரசித்தி பெற்ற மனிதனாக விளங்கினான். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை அவன் நம்பவில்லை. அப்போஸ்தலர்கள் பொய் பிரசங்கம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் நினைத்தான். கிறிஸ்தவர்களின் பிரசங்கத்தை தடுத்து நிறுத்துவதற்காக, தமஸ்குவை நோக்கி சவுல் பிரயாணம் செய்தான். போகிற வழியில், அவன் மிகவும் பிரகாசமான வெளிச்சத்தை கண்டதால், குதிரையில் இருந்து கீழே தரையிலே விழுந்தான். அப்போது அவன் திடீரென்று ஒரு குரலை கேட்டான். அக்குரல் அவனை நோக்கி "சவுலே, ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?" என்று கேட்டது. இது இயேசுவின் குரலாகும். சவுலோ அந்த குரலைப் பார்த்து, நீவிர் யார்? என்று வினவினான். உடனே அவர் "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றார். சவுல் எவ்வளவு அதிர்ச்சி அடைந்திருப்பார் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். அப்போஸ்தலர்களின் பிரசங்கத்தை தடுத்து நிறுத்துவதன் மூலம், தான் நல்ல காரியங்களை செய்து கொண்டிருப்பதாக சவுல் எண்ணினான்.



சவுல் எழுந்து பார்த்தவுடன், அவனால் எதையும் காண முடியவில்லை. அவன் குருடன் ஆனான். அவனுடைய நண்பர்கள் அவனைத் தமஸ்குவிற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு அவர் கிறிஸ்தவனான அனனியாவைச் சந்தித்தார். அனனியா அவனுடைய குருட்டுத் தன்மையை குணமாக்கினார். இதனால் சவுல் கிறிஸ்தவனாக மாறினான். சவுல் என்ற அவன் பெயரை பவுல் என்று தேவன் மாற்றினார். இயேசுவை காட்டிக் கொடுத்த யூதாஸிற்கு பதிலாக தேவன் பவுலைத் தேர்ந்தெடுத்தார். தேவன் சவுலை அப்போஸ்தலனாக தேர்ந்தெடுத்ததைக் கண்டு, மற்ற அப்போஸ்தலர்கள் வியந்தார்கள்! அப்போஸ்தலர் 9

# பவுல் தப்பிச் செல்லுதல்

சவுலுக்கு நிறைய நண்பர்கள் இருந்தார்கள். ஆனால் சவுலோ பவுலாக மாறிய பிறகு, அவன் மீது அவனுடைய நண்பர்கள் கடுங்கோபம் கொண்டார்கள். இவர்கள் எல்லோரும் கூட்டுச் சேர்ந்து கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினார்கள். பவுலோ இன்று கிறிஸ்துவின் ஊழியக்காரனாக மாறினார். அவர் ஒரு தரிசனம் கண்டார். தான் கண்ட தரிசனத்தை, அப்போஸ்தலராகிய பவுல் எல்லோரிடமும் சொன்னார். பவுல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று அவருடைய பழைய நண்பர்கள் நினைத்தார்கள்.

பவுலை கொல்ல வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள். தமஸ்கு நகரத்தின் வாயிலில் நின்று கொண்டு, பவுலைப் பிடிக்கத் திட்டமிட்டார்கள். ஆனால் பவுலோ இதனை அறிந்து கொண்டதால், மற்ற கிறிஸ்தவர்கள் அவர் தப்பும்படி உதவி செய்தார்கள். பெரிய கூடையை எடுத்து, அதில் பவுலை உட்கார வைத்து, மாடியில் இருந்து மதில் வழியாய் கீழே இறக்கினார்கள். அதனால் பவுலை அவனுடைய எதிரிகளால் பிடிக்க முடியவில்லை.

அங்கிருந்து திரும்பவும் எருசலேமுக்கு பவுல் வந்தார். எருசலேமில் இருக்கும் இயேசுவின் அப்போஸ்தலர்களோடு சேர அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் விருப்பப்பட்டார். ஆனால் அவர்களோ அவரைக் கண்டுப் பயந்தார்கள்.

கிறிஸ்தவர்களைக் கைதுச் செய்து, அவர்களை எல்லாம் சிறைச்சாலையில் தள்ளி, சவுல் எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தினான் என்பதை அறிந்த மற்ற அப்போஸ்தலர்கள், அதனை சூழ்ச்சியாகக் கருதினார்கள். எருசலேமில் உள்ள மற்ற யூதர்களோ பவுலைக் கொலை செய்ய வேண்டும் என்றும் பிடிக்க வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள். இதனால் எருசலேமில் இருந்த சபையானது, அப்போஸ்தலராகிய பவுலை எருசலேமில் இருந்து மிக தூரத்தில் இருக்கும் தர்சுபட்டணத்திற்கு அனுப்பினார்கள்.
அப்போஸ்தலர் 9




# பேதுருவின் தரிசனம்

ஒரு நாள் அப்போஸ்தலராகிய பேதுரு மேல் வீட்டில் ஓய்வு எடுத்துக் கொண்டு, சாப்பிட காத்துக் கொண்டிருந்தார். அவன் மிகவும் பசியோடு இருந்தார். அப்போது திடீரென்று ஒரு துப்பட்டை வானத்தில் இருந்து கீழே இறங்கி வருகிறதைக் கண்டார். அந்த துப்பட்டையிலே, யூத மக்கள் சாப்பிடக் கூடாத பல பிராணிகள் இருந்ததைக் கண்டார்.

அப்போது வானத்தில் இருந்து ஒரு சத்தம் உண்டாகி, இதையெல்லாம் கொன்று சாப்பிடு என்றது. பேதுரு மிகவும் குழம்பிப் போனார். பன்றி இறைச்சி மற்றும் சில வகை மாமிசங்களை யூத மக்கள் சாப்பிடக் கூடாது என்று தேவன் தடை செய்தார். ஆனால் அதை சாப்பிடும் படி தேவன் ஏன் தற்போது அவரிடம் கூறினார்? அதற்கு பேதுருவோ "தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் சாப்பிடுவதில்லை" என்று கூறினார். இதன் பின்னர் கர்த்தர் "சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" என்று பேதுருவிடம் கூறினார். இவை பேதுருவிற்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. இந்த தரிசனம் எதை உணர்த்துகிறது என்று பேதுருவால் அறிந்து கொள்ள முடியவில்லை. இதன் பின்னர், கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

கொர்நேலியு என்ற ரோமப் போர் வீரன் வாசலில் நின்று கொண்டிருந்தான். தான் கிறிஸ்தவனாக ஆகும் பொருட்டு தனக்கு ஞானஸ்நானம் பேதுரு கொடுக்கும்படி, கொர்நேலியு விருப்பபட்டான். அந்த நாள் வரை, யூத மக்களே கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். கொர்நேலியுவே யூதர் அல்லாத முதல் கிறிஸ்தவன்.

இதன்பின் பேதுரு தரிசனத்தின் அர்த்தத்தைப் புரிந்துக், சுவிசேஷம் யூத மக்களுக்கு மட்டும் சொந்தமில்லை, அவை எல்லா மக்களுக்கும் கொடுக்கப் பட்டுள்ளது. கிறிஸ்துக்குள்ளாக யூதர்கள், புறஜாதிகள், ஆண், பெண், அடிமைகள், அடிமையல்லா தவர்கள் என எல்லோரும் சமமே.
அப்போஸ்தலர் 10



# பேதுருவும் தூதனும்

அப்போஸ்தலர்கள் அதிகதிகமாகப் பிரசங்கம் பண்ணியதால், யூதர்கள் கடுங்கோபம் கொண்டார்கள். ஏரோது இராஜா கிறிஸ்தவர்களை ஒழிக்க வேண்டும் என்று நினைத்தான். இயேசுவைக் கொன்றதினால் அவர்கள் வெற்றிக் கண்டார்கள். தற்போதோ இயேசுவைப் பின்பற்றுபவர்களைக் கொல்ல வேண்டும் என்று எண்ணினார்கள். யாக்கோபு மற்றும் பேதுருவை ஏரோது இராஜா கைது செய்தான். யாக்கோப்பை கொலை செய்து, பேதுருவை சிறையில் அடைத்தான். பேதுருவை காவல் காக்க, சிறைச்சாலையில் 16 ரோம வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்! பேதுருவுக்காக பல கிறிஸ்தவர்கள் ஜெபம் செய்தார்கள். அப்போஸ்தலராகிய யாக்கோபை அவர்கள் இழந்தார்கள். ஆனால் அதே போல் பேதுருவையும் இழந்து போக அவர்கள் விரும்பவில்லை. ஓர் வீட்டில் அவர்கள் அனைவரும் கூடி, இரவு முழுவதும் ஜெபம் செய்து கொண்டிருந்தார்கள்.

சிறையில் இரண்டு காவலர்களுக்கு நடுவே பேதுரு தூங்கிக் கொண்டிருந்தார். பேதுரு சங்கிலியால் கட்டப்பட்டிருந்தார். மேலும் இரண்டு காவலர்கள் அவரைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். உடனே ஒரு தூதன் அவன் பக்கத்தில் நின்றார். இதனால் சிறை முழுவதும் வெளிச்சமாக இருந்தது. பேதுருவை உடை மற்றும் செருப்பைப் போட்டுக் கொள்ளும்படி தூதன் கூறினார். அவர் கையிலிருந்த விலங்கு தானே அவிழ்ந்து கீழே விழுந்தது. தூதன் என்ன செய்யச் சொன்னாரோ, அதை பேதுரு துரிதமாகச் செய்து, தூதனை தொடர்ந்து பின் சென்றார். காவலர்கள் எல்லாம் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சிறையின் கதவு தானாகவே திறந்து கொண்டது. பேதுரு விடுதலையான பிறகு, தூதன் அவனை விட்டுப் போனார். கிறிஸ்தவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு பேதுரு சென்றார். அவனை பார்த்தவுடன் எல்லோரும் அதிர்ந்தார்கள். அவர்களுடைய ஜெபங்களுக்கு பதில் கிடைத்தது!


அப்போஸ்தலர் 12



# பவுலும் பர்னபாவும்

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் மணவாட்டியாகக் கொடுக்கப்பட்ட அழைப்பிற்கு ஏற்றவாறு கிறிஸ்தவர்கள் சாட்சிக் கொடுத்து வந்தார்கள். யூதர் அல்லாத நிறைய பேர் கிறிஸ்தவர்களாக மாறினர். யூதர்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்கு, இது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. பத்து கட்டளைகள் மற்றும் நியாயப்பிரமாணம் இஸ்ரயேலர்களுக்கு கொடுக்கப்பட்ட சமயத்தில், அவர்கள் மட்டும் தேவனோடு ஐக்கியமாக இருந்தார்கள்.

ஆனால் இன்றோ கிறிஸ்து வந்த பிறகு, எல்லாம் மாறியது. ஒவ்வொரு தேசத்தில் இருந்தும் மக்களை கிறிஸ்தவர்களாக மாற்ற தேவன் அழைப்பு விடுத்தார். உலகம் முழுவதும் இருந்து அழைக்கப்பட்ட இவர்களே கிறிஸ்தவர்களாகவும் மற்றும் இயேசுவின் மணவாட்டியில் பங்காக இருக்கவும் தகுதியானவர்கள். இதனை உணர்ந்த யூத கிறிஸ்தவர்கள், அந்த புதிய கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்யும்படி அப்போஸ்தலராகிய பவுலை அனுப்பினார்கள். பெந்தகோஸ்தே நாளில், ஆவியின் வரங்களை அப்போஸ்தலர்கள் பெற்றுக் கொண்டார்கள் என்று சற்று நினைத்துப் பாருங்கள்? அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை கிறிஸ்தவர்கள் மீது வைக்கும்போது அவர்களுக்கும் அந்த வரங்கள் கிடைத்தது. இதனால் அப்போஸ்தலரை சந்திக்காத கிறிஸ்தவர்களுக்கு, இந்த வரங்கள் இன்னும் கொடுக்கப்படவில்லை.




இதனால் அப்போஸ்தலராகிய பவுலையும், பர்னபாவையும் தூரத்தில் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரங்களைக் கொடுக்க சபை அவர்களை அனுப்பி வைத்தது. இதன் பின்னர், அப்போஸ்தலர்கள் எந்த இடத்திற்குச் சென்றாலும், நடந்தோ (அல்லது) படகிலோ செல்ல வேண்டும். அப்போஸ்தலராகிய பவுலும், அவரோடு இருந்த பர்னபாவும் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினார்கள். அப்போஸ்தலர் 13

# பவுல் பணத்தை சேகரித்தல்

ஆசியாவில் உள்ள பல கிறிஸ்தவர்களைப் பார்க்க அப்போஸ்தலனாகிய பவுல் பயணம் மேற்கொண்ட போது, அங்கு யூதர்கள் அல்லாத பல புறஜாதி கிறிஸ்தவ மக்களைக் கண்டார். எருசலேமில் மிகக் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக அப்போஸ்தலன் பவுல் கேட்டறிந்தார். பவுல் எங்கெல்லாம் சென்றாரோ, அங்கெல்லாம் பணத்தை சேகரித்துக் கொண்டு, உணவில்லாமல் தவிக்கும் எருசலேமில் வாழும் கிறிஸ்தவர்களுக்காக கொண்டு போனார். அது மிகவும் முக்கியமானது.

இதனை செய்ய தேவனுக்கு அப்போஸ்தலராகிய பவுல் தேவைப்பட்டார் என்று நினைத்து பார்த்தீர்களா? கிறிஸ்தவர்கள் தங்களுடைய பணத்தை அடுத்த கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கவில்லை என்றால், தேவன் அவர்களை எல்லாம் பட்டினியாக விட்டு வைப்பாரோ? இல்லை, நிச்சயமாக இல்லை. நாம் என்ன செய்தாலும் (அல்லது) செய்யாவிட்டாலும், தேவன் தம்முடைய மக்களை பாதுகாப்பார். ஆனால் யூத கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்ய புறஜாதி கிறிஸ்தவர்கள் பணம் கொடுத்து உதவிச் செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலராகிய பவுல் விருப்பப்பட்டார். இதைத் தவிர வேறொரு அதிசய காரியமும் நடந்தது. சபை ஒன்றாக இணைக்கப்பட்டது. தூர தேசத்தில் இருக்கும் புறஜாதி கிறிஸ்தவர்களை தெரியவில்லை என்றாலும், எருசலேமில் உள்ள யூத கிறிஸ்தவர்களுக்கு, உதவிச் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் அவர்கள் எல்லோரும் அங்கங்களாக உள்ளதையே இது காட்டுகிறது. அவர்கள் அனைவரும் ஒரே பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள். ஒரே குடும்பத்தில் அவர்கள் எல்லோரும் பகுதியாக இருந்தார்கள்.

*1 கொரிந்தியர் 16 : 1 – 4*



# அசுத்த ஆவிகளைப் பவுல் வெளியேற்றுதல்

*அப்போஸ்தலனாகிய பவுல் எங்கெல்லாம் பிரயாணம் செய்து, பிரசங்கம் செய்தாரோ, அங்கெல்லாம் நிறைய பேர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். அவர் வல்லமை பெற்ற ஆசிரியராக விளங்கினார். கிறிஸ்துவைப் பின்பற்றவும் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளவும், நிறைய பேரை ஒத்துக் கொள்ள வைத்தார்.*

*ஒரு நாள் ஜெபம் செய்யும் இடத்திற்குச் செல்லும்போது, அசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு பெண்ணை பவுல் கண்டார். ஜலப்பிரளயத்திற்கு முன்னர், நிறைய தூதர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், மனித உருவம் எடுத்தனர் என்பது நினைவிருக்கிறதா? இனி மேல் இந்த தூதர்கள் இது போன்று செயலை செய்ய அனுமதிக்கப் படவில்லை, மாறாக மனிதனாக உருமாற முடியவில்லை என்றாலும், மனித உடலுக்குள் சென்று, அந்த மனிதன் மூலமாக தாம் நினைக்க கூடிய அனைத்தையும் அவர்களால் செய்ய முடியும். இந்த அசுத்த ஆவிகள் (அல்லது) கீழ்ப்படியாத தூதர்கள், எதிர்காலத்தைப் பற்றி கூறும் திறனை அப்பெண்ணிற்குக் கொடுத்தனர். இன்றும் இவை எல்லாம் நடைப்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதனால்தான் எதிர்காலத்தைப் பற்றி குறி சொல்லும் எவரிடமும் நாம் எதையும் வைத்துக் கொள்ள கூடாது என்று தேவன் நம்மை எச்சரிக்கிறார்.*



*சில பொல்லாத மனிதர்களின் அடிமையாக அப்பெண் இருந்ததால், அவள்மூலமாக நிறைய பணத்தை அவர்கள் சம்பாதித்தார்கள். மக்கள் அவர்களிடம் சென்று தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றிச் சொல்ல பணம் கொடுத்தார்கள். சில சமயம் அசுத்த ஆவிகள் எதிர்காலத்தைப் பற்றி கணிக்கும் தன்மையை பெற்றுள்ளது.*

*அந்த அசுத்த ஆவியை விரட்டினால், அப்பெண் விடுதலை பெறுவாள் என்று பவுல் முடிவு செய்தார். இதை பவுல் செய்தபோது, அவளுடைய எஜமான்கள் அவர்மீது கடுங்கோபம் கொண்டார்கள். பவுலையும் அவரோடு கூடயிருக்கும் சீலாவையும் கைது செய்து, அடிக்கும்படி உத்தரவு போட்டார்கள். பவுலும், சீலாவும் கலகம் ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள் என்றும் பொய்யாகக் குற்றம் சாட்டினார்கள். அப்போஸ்தலர்கள் 16*

# பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்படுதல்

பவுலும், சீலாவும் கைது செய்து அடிக்கப்பட்ட பின்பு, சிறையில் அடைக்கப்பட்டார்கள். அந்த இராத்திரி வேளையில் பவுலும், சீலாவும் பாட்டுபாடி, தேவனை துதித்துக் கொண்டிருந்ததை மற்ற சிறையில் இருந்தவர்களும் கேட்டார்கள்.

அப்போது நடு இராத்திரியில், ஒரு பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சிறையின் எல்லா கதவுகளும் திறந்துக் கொண்டது. அவர்களுடைய விலங்கும் அவிழ்ந்து கீழே விழுந்தது. என்ன நடந்தது என்பதை சிறைச்சாலைக்காரன் உணர்ந்து, தன் வாளை உருவி, தன்னைத் தானே கொலை செய்து கொள்ள நினைத்தான். பவுலும், சீலாவும் தப்பித்து விட்டார்கள் என்று எண்ணினான். சிறைச்சாலைக்காரன் வாளை உருவதைக் கண்ட பவுல் "உனக்கு கெடுதல் செய்து கொள்ளாதே. நாங்கள் இங்குதான் இருக்கிறோம்!" என்று சத்தமாக கூறினார். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, சிறைச்சாலைக்காரன் அவர்கள் காலில் விழுந்து, தான் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் என்று அவனுக்கு கூறினார்கள். அந்த இரவிலும் பவுலையும், சீலாவையும் தன்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்தான். சிறைச்சாலைக்காரன் மற்றும் அவனுடைய குடும்பத்தார் அனைவரும் கிறிஸ்தவர்களாக மாறி, ஞானஸ்நானம் பெற்றார்கள். இதற்கு அடுத்த நாள், பவுல் மற்றும் சீலாவை சிறையில் அடைத்த சிறைக் காவலர்கள், பவுலும் சீலாவும் நகரத்தை விட்டு வெளியேறுமாறு கூறினார்கள். நகரத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் பவுலும், சீலாவும் மற்ற கிறிஸ்தவர்களைச் சந்தித்து, விசுவாசத்தில் அவர்களை ஊக்கப்படுத்தினார்கள்.



இதன் பின்னர் பவுலும், சீலாவும் நகரத்தை விட்டு வெளியே வந்து, தங்களுடைய பிரயாணத்தைத் தொடங்கினார்கள். அப்போஸ்தலர் 16

# பவுல் எருசலேமிற்குத் திரும்புதல்

சாட்சியாக ஜீவித்து, பிரசங்கம் செய்து, அநேக மக்களை கிறிஸ்தவர்களாக ஆக்கின பின்பு, எருசலேமில் இருக்கும் யூத கிறிஸ்தவர்களை பார்ப்பதற்காக பவுல் அங்கு சென்றார். எருசலேமில் வாழ்ந்த யூத கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்த புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

எருசலேமில் தங்கியிருந்த பவுல், தேவனை வணங்க ஆலயத்திற்குச் சென்றார். நிறைய புறஜாதி மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றியதால், தேவன் கொடுத்த யூத நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாக பவுல் இருக்கிறார் என்று யூத மக்கள் நினைத்தார்கள். ஆனால் அது உண்மை இல்லை. யூத பிரமாணங்களை நன்றாகவே பவுல் கடைப்பிடித்து வந்தார். யூத மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின்படி புறஜாதி மக்கள் வாழவேண்டும் என்று பவுல் அம்மக்களுக்கு கற்பிக்கவில்லை.

ஆனால் தேவனுடைய ஆலயத்தில் பவுல் ஜெபம் செய்துக் கொண்டிருந்த போது, தடை செய்யப்பட்ட புறஜாதி மக்களை ஆலயத்திற்கு அழைத்து வந்ததாக கூறி அவன் மீது குற்றம் சாட்டினார்கள். ஆனால் அவை உண்மை யில்லை. இருந்தாலும் யூதர்களால் பவுல் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். மீண்டும் ஒரு தரம், அப்போஸ்தலராகிய பவுல் விலங்கிடப்பட்டார். அப்போஸ்தலர் 20:22-38



# பவுல் ரோமாபுரிக்குச் செல்லுதல்

இராயனுக்கு முன்பாக சோதனைக்குட்படுத்தப்பட, பவுல் ரோமாபுரிக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இயேசுவை வெறுத்தது போல, எருசலேமில் இருந்த யூத குருமார்கள் பவுலையும் வெறுத்து, அவரைக் கொலை செய்யப் பார்த்தார்கள். ரோமாபுரியில் சாட்சியாகப் பிரசிங்கிக்க பவுல் அங்கு செல்ல வேண்டும் என்று தேவன் அவரிடம் கூறியிருந்தார். அதனால் ரோமாபுரிக்கு செல்லும் கப்பலில் பவுல் ஏறினார்.

ஆனால் ரோமாபுரிக்கு செல்லும் வழியில், அவர்களின் கப்பல் கடலில் ஏற்பட்ட பெரிய புயலில் சிக்கி உடைந்தது. அனைத்து பயணிகளும், ரோம வீரர்கள் மற்றும் அனைத்து குற்றவாளிகளும், மெலித்தா என்ற தீவில் கரை சேர்ந்தார்கள். குளிர்காலம் முழுவதும் அவர்கள் அங்கே தங்கி, குளிர் முடிந்த பிறகு மறுபடியும் ரோமாபுரிக்குச் செல்லலாம் என்று எண்ணியிருந்தார்கள்.

அந்தத் தீவில் இருக்கும் போது, விஷமுள்ள விரியன் பாம்பு பவுலைக் கடித்தது. பவுல் இறப்பதைக் காண மக்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர் விஷக் கடியில் இறக்காததால், மக்கள் அனைவரும் பவுல் தேவனாக இருப்பார் என்று நினைத்தார்கள். அந்தத் தீவில் இருந்த பல வியாதி கொண்டவர்களை பவுல் குணமாக்கினார். குளிர்காலம் முழுவதும் கரையேறின அனைவரையும் அந்த தீவு மக்கள் நல்லப்படியாகப் பார்த்துக் கொண்டார்கள். மூன்று மாதம் கழித்து, அவர்கள் ரோமாபுரிக்கு செல்ல வேறொரு கப்பலில் பிரயாணம் செய்தார்கள்.

அப்போஸ்தலர் 28 : 1 - 13



# பவுல் ரோமாபுரியில் வாழ்தல்

கடைசியாக அப்போஸ்தலன் பவுல் ரோமாபுரியை அடைந்தவுடன், அங்கிருந்த ரோமக் கிறிஸ்தவர்கள் அவரை சந்தித்து அப்பியுபுரம் என்ற சாலை வரைக்கும் செல்ல உற்சாகப்படுத்தினார்கள்.

பவுல் சிறையில் அடைக்கப்படவில்லை. தனியாக வாழ அனுமதிக்கப்பட்டு, ஒரு வீரன் மூலமாக காக்கப்பட்டு வந்தார். இரண்டு வருடங்கள் வாடகை வீட்டிலேயே தங்கியிருந்தார். அந்த வீட்டில் இருந்தபடியே சாட்சியாகப் பிரசங்கம் பண்ணினார். யூதத்தலைவர்களை எல்லாம் வரச்சொல்லி, அவர்களுக்கு இயேசுக் கிறிஸ்து மற்றும் புறஜாதி மக்களுக்கு சத்தியம் பிரசங்கிக்கப்படுதலைப் பற்றி தான் நினைத்துக் கொண்டிருப்பதை விளக்குவதற்காகவே அவர்களைப் பவுல் வரச்சொன்னார்.

நிறைய பேர் அவர் வீட்டிற்கு வந்து பிரசங்கத்தைக் கேட்டு, கிறிஸ்தவர்களாக மாறினார்கள். தன்னால் தூரமாகப் பிரயாணம் செய்ய முடியாததால், உலகம் முழுவதும் பல்வேறு தேசத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு நிறைய நிருபங்கள் எழுத பவுலுக்கு அதிக நேரம் இருந்தது. இப்படியாக பவுல் எழுதிய நிருபங்களின் மூலமாகவே, இன்று நமக்கு புதிய ஏற்பாடு கிடைத்தது.

இதன் பின்னர் அப்போஸ்தலராகிய பவுல் ரோமாபுரியில் கொல்லப்பட்டார். இதை குறித்து நாம் வரலாற்றில் காணலாம். ஒரே நாளில், அப்போஸ்தலனாகிய பேதுருவும் பவுலும் ரோமாபுரியில் கொல்லப்பட்டதாக வரலாறு நமக்கு தெரிவிக்கிறது.

அப்போஸ்தலர் 28 : 11 - 30



# கடைசி அப்போஸ்தலராகிய யோவான்

*யோவான் கடைசி அப்போஸ்தலராக வாழ்ந்து வந்தார். அவர் தோராயமாக 100 வருடங்கள் வாழ்ந்தார். கிறிஸ்தவர்களை ரோமர்கள் கொடுமைப்படுத்திய போது, பத்மோஸ் என்ற தீவிற்கு தனியாக வாழ அனுப்பப்பட்டார். அவனால் எழுதப்பட்ட தரிசனங்களை, தேவனிடமிருந்து யோவான் பெற்றார். இந்த தரிசனங்களே வெளிப்படுத்தின விசேஷமாக எழுதப்பட்டது. அவை முழுவதும் அடையாளங்களின் புத்தகமாக இருக்கிறது. முதல் கிறிஸ்துவன் தொடங்கி அதாவது சுவிசேஷ யுகத்தின் வரலாறு தொடங்கி இயேசு இப்பூமிக்கு திரும்பி வந்து ஆட்சி செய்து, முழு பூமியையும் ஏதேன் தோட்டம் போல் மாற்றும் வரைக்கும் இப்புத்தகம் அடையாள பாஷையில் விளக்குகிறது.*

*இயேசுவின் இராஜ்யத்தின் போது, சுவிசேஷ யுகத்தில் யாரெல்லாம் இயேசுவை விசுவாசித்து, அவர் அடிச்சுவட்டை பின்பற்றி வந்தார்களோ, அவர்கள் எல்லோரும் அவருடனே கூட ஆட்சிச் செய்வார்கள். அவர்கள் அனைவரும் ஆவியின் ஜீவிகளாக இருப்பார்கள் என்பதை சற்று நினைத்து பாருங்கள். இனிமேல் இவர்கள் மனிதனாக மாற முடியாது. ஆனால் அவர்கள் பூமியை ஆளுகைச் செய்து, அனைத்து பாவம் மற்றும் மரணத்தையும் போக்குவார்கள்.*

*இனிமேல் துக்கமுமில்லை, அழுகை இல்லை, வலியும் இல்லை, நோயுமில்லை. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் மற்றும் ஏவாளுடைய கீழ்ப்படியாமையால் வந்த பாவமும், மரணமும் இனி ஒழிந்து போகும். இதன் பின்னர் சாத்தானும் இருக்க மாட்டான். அவனும் ஒழிக்கப்பட்டிருப்பான். சுவிசேஷ யுகம் முடிந்த பின்னர் இவையெல்லாம் நடக்கும் காலமாக இருக்கும். இதனை ஆயிர வருட அரசாட்சி என்று நாம் அழைக்கிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 21:1 - 5*



# புதிய ஏற்பாடு முடிவடைந்தது

அப்போஸ்தலன் யோவான் இறந்தவுடன், புதிய ஏற்பாடு முற்றுப் பெற்றது. கடைசி புத்தகமான வெளிப்படுத்தின விசேஷம் முடிவடைந்தது. அப்போஸ்தலர்கள் எல்லோரும் இறந்த பின்னர், அவர்கள் எழுதி வைத்ததிலிருந்து கிறிஸ்தவர்கள் கற்றனர். இதன் பின்னர் கிறிஸ்தவர்கள் மேல் கை வைத்து பரிசுத்த ஆவியின் வரங்களை தர எந்த அப்போஸ்தலனும் இல்லை. அந்நிய பாஷைகளைப் பேசுவது, நோய்களை குணப்படுத்துவது, மரித்தோரை உயிர்த்தெழுப்புவது என அனைத்து காரியங்களும் மறைந்தது.

ஆனால் இன்று கிறிஸ்தவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட அதிசயமான பரிசு வேதாகமம் ஆகும். இவை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது. ஆதியாகமத்தில் தொடங்கி, நூற்றுக்கணக்கானவர்களால் எழுதப்பட்டது. நமக்காக எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய திட்டத்தைப் பற்றி நாம் என்ன தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் உறுதிப்படுத்தி வைத்திருக்கிறார்.

இதன் மூலமாக நாம் அனைவரும் தேவனுடைய திட்டத்தையும், நமக்காவும், மற்ற அனைத்து உயிரினங்களுக்காகவும் தேவன் வைத்துள்ள எதிர்காலத்தையும் பற்றி அறிந்து கொள்ளலாம். இயேசு மற்றும் அவருடைய மணவாட்டியாகிய சபையின் மூலமாக இப்பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசிர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார். இயேசு தம்முடைய இராஜ்யத்தை முதன் முதலாக இஸ்ரயேல் தேசத்திலே ஸ்தாபிப்பார் என்பதும் நமக்கு தெரியும். இன்று இஸ்ரயேல் தேசம் மீண்டும் கட்டப்பட்டு வருகிறது. பூமியில் அமையும் புதிய இராஜ்யத்தின் தலைநகரமாக இஸ்ரயேல் விளங்கும்.



தேவனுடைய இந்த திட்டத்தை சாத்தான் எதிர்க்கின்றான். அத்திட்டத்தை தடுத்து நிறுத்தும் பொருட்டு, பூமியில் இருக்கும் தேவனுடைய மக்களான கிறிஸ்தவர்கள், யூதர்கள் (அல்லது) இஸ்ரயேல் தேசத்தை தாக்கிக் கொண்டு வருகிறான். சகரியா 12 & 14

# சுவிசேஷ யுகம்

இயேசுவின் ஞானஸ்நானம் தொடங்கி கிறிஸ்துவின்

சபை நிறைவடையும் வரை





# எல்லோருக்குமான தேவனுடைய திட்டம்

*தேவ திட்டத்தை பற்றி நாம் தெரிந்துக் கொண்ட அனைத்தும், தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தில் இருந்து வந்ததாகும். இவை தேவனால் உந்தப்படுகிறது. பாவமும், மரணமும் எவ்வாறு மனிதனை ஆட்கொண்டது என்று இவை விளக்குகிறது. இதில் இருந்து நாம் எப்படி விடுவிக்கப்பட போகிறோம் என்பதையும் நமக்கு இது கூறுகிறது. வேதாகமம் நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. நம்மை வழி நடத்துகிறது. தேவனுடைய சித்தம் நமக்காக இருக்கிறது என்பதையும் நமக்குக் கூறுகிறது.*

*இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வருமாறு தேவன் இன்றும் பல ஜனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அந்த அழைப்பு முடியும்போது, இயேசுவின் புதிய இராஜியம் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டு, வாழ்ந்து இறந்த அனைவருக்கும் பரிபூரணத்தன்மை திரும்பிக் கிடைக்கப் பெறும். இவர்கள் அனைவருக்கும், இயேசு மற்றும் அவருடைய மணவாட்டியின் இராஜியத்தில், எப்படி வாழ வேண்டும் என்று தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும். தங்களுடைய வழியை மாற்றி, தேவனுடைய சித்தத்தை கடைப்பிடித்து பரிபூரணத்தன்மை அடைவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படும். அவர்கள் உடலிலும், எண்ணத்திலும் குணங்களிலும் பரிபூரணத் தன்மையோடு இருப்பார்கள். குணங்களில் பரிபூரண தன்மை என்பது என்னவென்றால், நல்ல காரியத்தை மட்டும் செய்ய விருப்பப்படுவார்கள். தவறான காரியத்தை செய்ய விருப்பபடமாட்டார்கள். அவர்களுடைய குணங்கள் பரிபூரண நிலைமைக்கு வந்த பின்னரே, அவர்கள் அனைவருக்கும் நித்திய காலமாக வாழ வாய்ப்புக் கிடைக்கும்.*

*ஆயிர வருடங்கள் முடிந்தவுடன், பூமியை மோசம் போக்கும்படி மீண்டும் சாத்தான் அனுமதிக்கப்படுவான். சாத்தானை பின்பற்றுபவர்கள் அழிக்கப்படுவார்கள். ஏனெனில் அந்த காலம் நன்மையின் காலமாக இருக்கும். சாத்தானை பின்பற்றாதவர்கள் நித்திய ஜீவனைப் பெற தகுதிப்பெற்று நித்திய காலமாக வாழ்வார்கள்.*

*இந்த தெய்வீக திட்டத்தையே, தேவன் தம்முடைய வார்த்தையாகிய வேதாகமம் மூலமாக நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். தேவனுடைய திட்டமும், வாக்குத்தத்தங்களும் நமக்கு தெரிந்தபடியால், பூமியானது நிச்சயம் அழிக்கப்படமாட்டாது என்பதும் நமக்கு தெரியும். ஏதேன் தோட்டத்தைப் போல தேவன் பூமியை நிறைவு செய்வார் என்பதும் நமக்கு தெரியும். மரித்தோரிலிருந்து அனைவரும் உயிர்ப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவின் அரசாட்சியில் வாழ அவர்கள் அனைவருக்கும் ஒரு வாய்ப்பு தரப்படும் என்பதும் நமக்கு தெரியும். எது சரியான காரியம், எவை தவறு என்று அவர்கள் கற்றுக் கொள்ள ஒரு வாய்ப்பு தரப்படும். நாம் நேசித்த நிறைய பேர் இறந்து போயிருப்பார்கள். அவர்கள் அனைவரும் மரணம் என்கிற நித்திரையிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று நமக்குத் தெரியும். நாம் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளப்போகிறோம்.*

*நாம் தினந்தோறும் கர்த்தரிடம் ஏறெடுக்கும் நம் ஜெபமாவது:*
*உம்முடைய இராஜியம் வருக. உம்முடைய சித்தம் பரலோகத்தில்*
*செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக! இயேசுவின் நாமத்தில்,*
*கேட்டுக் கொள்ளுகிறோம் பிதாவே! ஆமென்*


ஆயிர வருட யுகம்
இயேசுவின் இரண்டாம் வருகையில் இருந்து உலக
மனுக்குலம் பூரணப்படும் வரை

# எல்லோருக்குமான  தேவனுடைய திட்டம்




**ஏதேன் தோட்டம் இழந்தது முதல் ஏதேன் தோட்டம் திரும்ப கிடைக்கும் வரை**

*வெளியீட்டாளர் :*

*வேத மாணவர்கள்*
*ஈரோடு*
*தமிழ்நாடு*
*இந்தியா*

www.bibletoday.com
*வேத மாணவர்கள் 2016*
ISBN: 978-1-4675-8882-9

எல்லோருக்குமான தேவனுடைய திட்டம் $19.95
ISBN 978-1-4675-8882-9
51995>
9 781467 588829